OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 FEB 1959
MADRAS

V.V.D. & SONS

GINGELLY OIL

V.V.D

நல்லெண்ணை

MANUFACTURERS:-
V.V. DHANUSHKODI NADAR & SONS,
TUTICORIN.



தீபாவளி நல் வாழ்த்துக்கள்!
இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட், மதராஸ் - 1
SANKAR
I C
BRAND
சங்கர் பிராண்ட் போர்ட்லண்ட் ஸிமெண்ட்
விநியோகஸ்தர்கள்:- ஸிமெண்ட் மார்க்கடிங் கம்பெனி ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்

IC-572

பொருளடக்கம்

ஆசிரியர் : கோசல்ராம் M.L.C.,
நிர்வாக ஆசிரியர் : P. X. ரங்கசாமி B. A.,

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்க ளாக்குவோம்"

மணி 2 | நவம்பர் 1958 | ஓசை 4

அரசியல் : பக்கம்

எங்கும் தீபாவளி ! (கார்ட்டூன்) ... 2
பாக். புரட்சியும், ஜே.பி.யின் கிளர்ச்சியும்! ... 3
திரைக் கலைஞர்களின் கண்ணீர் ! ... 6
மூன்ருவது திட்டம்-சில யோசனைகள் ! ... 7
என்.ஜி.ஓ. குரல் கொடுப்பீர்! ... 7
நீர் கொடுங்கள், நெல் தருகிருேம்! ... 8
உலகத்தின் இழப்பு ! ... 8
உலக அரங்கில் தீபாவளி! (கார்ட்டூன்) ... 10

தொடர் கதை:

காணுமல் போன காதலி! வல்லிக்கண்ணன் ... 33

கட்டுரைகள் :

கல்வித் துறையில் ஒரு புரட்சி!-கோசல்ராம் ... 12
பெரியோர் தரிசனம்!— ஜெயன் ... 26
[illegible]னும் வண்டும்!—டாக்டர் ப. நடராஜன் ... 28
தீபாவளி-வினு-விடை ! -- 'ராபாலு' ... 54
விசித்திர விளம்பரங்கள் !— அழகனர் ... 74

கதைகள் :

மனச்சிமிழ் ! —வை. சுப்ரமண்யன் ... 19
அனுவுக்கு மனு!—டி. எஸ். கே. ... 47
சுகுணுவிற்கு சோதனை!—' எல்லார்வி ' ... 57
பத்மாவின் பாக்கியம்!— ஆர். சூடாமணி ... 68
விசா! விசா! விசா!-குமரி. அனந்தன் எம்.ஏ.... 77
பேமட்டனுக்குப் பிடித்த பித்து!—
திருவிடைமருதூர் சேஷாத்திரி ... 83

கலைப் பகுதி :

சபாஷ் மீனு —ஆரெஸ்ஸஸ் ... 15

கவிதைகள் :

அட்டைப்பட அழகி ! திருச்சி வாசுதேவன் ... 43
தீப ஒளி ! மா. சு. நாதன் ... 66

'புதுமை'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

எங்கும் தீபாவளி!



"பாரதத்தைச் சுற்றிலும் இராணுவப் புரட்சிகள் நடப்பது, ஓலை வீட்டைச் சுற்றி நடக்கும் தீவிபத்துக்களின் அபாயத்தைக் கொண்டது!"

—திரு. சஞ்சீவ ரெட்டி

புதுமை

பாக். புரட்சியும், ஜே.பி.யின் கிளர்ச்சியும்!

சென்ற சில வாரங்களாக, பல நாடுகள், பாரதத்தின் அண்டை நாடுகள், ஒன்றுக்குப்பின் ஒன்ருக அரசியல் தீபாவளிகளை நடத்தி வருகின்றன.

'அரசியல் தீபாவளி' என்று நாம் குறிப்பது இராணுவப் புரட்சிகளையும், அரசியல் அதிகாரம் பலாத்காரமாக மாற்றப்படுவதையும் தான் என்பது நேயர்கள் ஊகிக்கக் கூடிய விஷயமே.

உலகில் பிரிட்டன் 'ஜனநாயகத்தின் தாயகம்' என்று மதிக்கப்படுகிறது. அமெரிக்காவும், அதன் கூட்டாளிகளும் ஒருவகை ஜனநாயகத்தை அமைத்துக் கொண்டுள்ளன. இந்தக் குழுவிற்கு எதிராக இயங்கும் பொதுவுடைமை நாடுகளின் அரசியல் அமைப்பு, சர்வாதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு உள்ளது.

இந்த இரண்டு வகை அரசியல் அமைப்புகளும் பொருளாதாரத்தில், பிற நாடுகளைவிட ஓரளவு மேம்பாடுடன் காணப்படுகின்றன.

முதலாளித்துவ, கம்யூனிஸ நாடுகளின் முகாமில் சேராது, இந்த நூற்ருண்டிலே விடுதலை கண்டவையும், காணப் போராடிக் கொண்டும் உள்ளவையுமான ஆசிய, ஆப்பிரிக்க, மத்திய அமெரிக்க நாடுகள் தனியாக உள்ளன. இந்த நாடுகள் அனைத்தும் பொருளாதார வளம் குன்றியவை; பண்டு பெருமை கொண்டு, இன்று சிறுமை பெற்றுப் பிற்போக்கான நிலையிலே உள்ளவை. இவற்றிலே பல நேற்று வரை சுரண்டப்படுவதற்கென்றே காலனிகளாக இருந்தவை; அவற்றின் சங்கிலிகள் அறுந்து விட்டாலும், மேனியில் அவை நீண்டகாலமாக அழுந்தியிருந்ததால் நேர்ந்த புண்கள் ஆருதவை.

இவ்விதம் புதிதாக எழுச்சி பெற்ற இந்நாடுகள், தாங்களும் முன்னேற முயன்று வருகின்றன. இந்த முயற்சி பொதுவாக எல்லோரிடத்திலும் காணப்படுகின்றது என்ருலும், முயற்சிக்காகக் கையாளப்படும் வழிகள், அந்தந்த நாட்டு மக்களின் வரலாறு, தன்மை, போராட்ட வழி, தலைமையின் தகுதி இவற்றைச் சார்ந்திருப்பதால் வெவ்வேறு விதமாக அமைந்து வருகின்றன.

சில நாடுகள் பொதுவுடைமை வலையிலோ அன்றி முதலாளித்துவத் தூண்டிலிலோ சிக்கி அடிமை

வாழ்வைத் திரும்பவும், அவை தரும் பொருளாதாரக் கூலிக்காக ஏற்றுக் கொண்டு விட்டன.

இன்னும் சில நாடுகளில் அரசியல் அனுபவம் இல்லாத விபத்தால், அரசியல் வாதிகள் 'அரசியல் வியாதி'களாக மாறி வருவதைக் கண்டு, தேசபக்தி கொண்ட இராணுவ வீரர்கள் அதிகாரத்தைக்கைப்பற்றுவதும் காணப்படுகின்றது.

ஒரு சில நாடுகள் மாத்திரமே—தங்கள், தங்கள் கால்களை ஊன்றி நின்று கொண்டு, எந்த நாட்டையும் சார்ந்தியங்காது. சுதந்திரமாக, சுயேச்சையாக, சுபிட்சப் பாதை காணப் போராடி வருகின்றன.

ஒப்பற்ற தலைவன் நேருவைக் கொண்ட பாரதம் இந்த நேரிய வழியைத்தான் கையாண்டு வருகின்றது.

* * * *

இத்தகைய சூழ்நிலையில் எகிப்திலும், ஈராக்கிலும், குவாதமாலாவிலும், ஹாண்டுராஸிலும், மத்திய அமெரிக்க, மத்திய கிழக்கு நாடுகளிலும் நடைபெற்ற புரட்சி, திடீரென்று இந்தியாவின் அண்டை நாடுகளில், எல்லையைத் தழுவியுள்ள பாகிஸ்தானில், பர்மாவில், தாய்லாந்தில் ஏற்படுவது கண்டு இந்தியப் பொது மக்கள் சிந்தனை செய்ய வேண்டிய அவசியம் நேரிட்டு உள்ளது.

இரண்டு வழிகளிலே, நமது தலைவர்களும், பத்திரிகைகளும், பொது மக்களும் இதுவரை சிந்தித்து வருகின்றார்கள்.

'பாகிஸ்தானில் நடப்பது நமது நாட்டிலும் நடக்காது என்று மிதப்பாக இருப்பது தவறு; நமது நாட்டிலும் அரசியலிலே காணப்படும் ஊழல்கள் களையப்படா விட்டால் ஆபத்து நேரும்!' என்று பூதானத் தலைவர் பூஜ்ய வினோபாஜி முதல் பலர் நினைக்கிறார்கள்.

பாகிஸ்தானில் நடப்பது கண்டு அஞ்சுவதில் இந்த வகையில் சற்று அதிக தூரம் சென்று கற்பனையை விளையாட விடுகிறது, தீர்க்கத் தரிசனம் படைத்ததாக விளம்பரம் பெற்ற ஒரு கூட்டம்.

இங்கே இராணுவப் புரட்சி வந்தால், எவ்வளவு பிரிவுகள் இராணுவத்தின் உள்ளேயே பிறக்கும் என்றுகூட மலடியின் பிள்ளைக்குப் பெயர் வைக்கிறார்கள்!

பூஜ்யர் விநோபாஜி நாட்டு நலனிலே அக்கறை கொண்டு பேச, இவர்கள் குட்டையைக் குழப்பி மீன் பிடிக்க முயலுவோர்களாகக் காட்சி தருகிறார்கள்.

* * * *

இராணுவப் புரட்சிகள் கண்டு அஞ்சாதவர்களாகக் காட்சி தருகிறார்கள், இரண்டாவது வகையினர். இந்தியாவிலே அரசியல் சட்டம் இருக்கிறது; பலமான பல கட்சிகள் உள்ளன; மக்களிடம் செல்வாக்குப் பெற்ற பல தலைவர்கள் உள்ளார்கள். இரண்டு பொதுத் தேர்தல்களை நடத்தி விட்டோம். உரிமைகள் வழங்கப்பட்டு சட்டசபைகள், பாராளுமன்றம், நீதிமன்றங்கள் சுதந்திரமான பத்திரிகைகள் இயங்கி வருகின்றன. எனவே இந்தியாவிலாவது இராணுவப் புரட்சி வருவதாவது என்று எண்ணுகிறார்கள் இவர்கள்.

* * * *

இந்த இரண்டு வகைக் கருத்துக்களுக்கும் இடையிலே ஒரு தனிக் கருத்தை உருவாக்க முயன்று வருகிறார், அரசியல் துறவற வேடத்தைக் கலைத்துக் கொண்டு வேகமாக அரசியல் தீவிரத்துக்கு வந்து கொண்டுள்ள தலைவர் ஜெயப் பிரகாஷ்.

ஜனநாயகத்தை ஒப்புக்கொண்ட கட்சிகள் யாவும் குறைந்த பட்ச அடிப்படையில் ஒன்று சேர வேண்டும் என்பதவர் திட்டம். அதற்கு எகிப்தியத் தலைவர் நாஸர் கூட

ஆசி வழங்கி விட்டதாக அவர் சொல்லிக் கொள்கிருர்.

வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்ருல், ஜெயப்பிரகாசரின் திட்டம், கம்யூனிஸ்ட் அல்லாத பிற கட்சிகள் யாவும் ஒன்று சேரல் வேண்டும் என்பதுதான்!

* * *

இனி இந்த மூன்று வகைக் கருத்துக்களின் உண்மைப் பகுதிகளை ஆராய்வோம்.

பாகிஸ்தான், பர்மா, தாய்லாந்தைப் போலன்றி இந்தியாவில் மாறுபட்ட சூழ்நிலை காணப்படுகின்றது என்பதால் இராணுவப் புரட்சி எதுவும் இங்கு ஏற்படாது என்று சொல்லப்படுவதில் பெருமளவு உண்மையும், இங்கு ஏற்படாது என்று மிதப்பாக இருப்பது தவறு என்பதில் சிறிதளவு உண்மையும் உள்ளது.

இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானல் நாம் ஜனநாயகத்தைத் தேர்ந்தெடுத்து விட்டோம்; அதை நிலைக்கச் செய்து காப்பாற்றுவதே இனி நம் அடுத்த கடமை.

கன்னிப் பெண்ணின் பிரச்னைக்கும், கலியாணமானவளின் பிரச்னைக்கும் வேறுபாடு உண்டு. கற்பைக் காத்துக் கொள்வது இருவருக்கும் பொதுதான் என்ருலும், கணவனைப் பெற்றவளுக்கு அது எளிது.

நாம் ஜனநாயகத்தை வரித்து விட்டோம். இனி நிலைக்கச் செய்வது தான் பிரச்னை.

ஜனநாயகத்தைப் பரீட்சை செய்யாதவருக்கு ஏற்படும் ஆபத்து நமக்கு வராது. பாகிஸ்தான் புரட்சி இங்கே நடக்காது.

ஆனல் பர்மாவின் புரட்சி வரலாம். அரசியல் நாணயத்தைப் பெருக்காவிட்டால், பொது மக்கள் பண்பின் தரத்தை உயர்த்தாவிட்டால், பொறுப்பான எதிர்க் கட்சிகள் ஏற்படா விட்டால், பர்மாவைப் போல் இங்கும் நேரலாம்.

அதே நேரத்தில், ஜெயப்பிரகாஷ் சொல்வது போல இருக்கும் எதிர்க் கட்சிகளையும் ஆளும் கட்சியோடு பிணைப்பது தவருகும்.

சில ராஜ்யங்களில், காங்கிரஸ் பலஹீனமாகி விட்டது. பிரஜா சோஷலிஸ்டுகள், சோஷலிஸ்டுகள் உணவுப் பிரச்னையை வைத்துக் கொண்டு பலம் பெறுகிருர்கள்; காங்கிரஸ் பலம் சரிகிறது என்ருல் அதற்காக அவர்களுடன் கூட்டு என்பது அபத்தம்; அதை ஆதரிப்பது சுயநலம்.

காங்கிரஸ் தனது நாணயத்தை உயர்த்திக்கொள்ளல் வேண்டுமே ஒழிய, சோஷலிஸ்டு கட்சியை இணைத்து இன்னும் நான்கு பி. சோ. மந்திரிகளையும் சர்க்காரில் நியமிப்பது, செருப்புக்காக காலை வெட்டுவது ஆகும்.

அதேபோல, மத்திய சர்க்காரில் எல்லா ராஜ்யங்களும் சந்தர்ப்பம் பெறுமளவில் அமைச்சர்கள் பிரதிநிதித்வம் தேவை. எல்லா அமைச்சர்களும் பிரதமர் நேருவைப் போலன்றி, சிறிதளவாவது மாகாண வெறியர்களாக இருப்பதால் பல துன்பங்கள் நேரிடுகின்றன.

பலமான, பொறுப்பான, மாற்றுத் திட்டமுள்ள, திட்டமின்றித் திட்டாத, திட்டுவதிலும் நாணயமாகத் திட்டும் எதிர் கட்சிகள் வளரவேண்டும்.

ஆளும் கட்சியும் மேடையில் பேசும் ஆத்ம சோதனையை விடுத்து, ஆத்மாவையே சோதனை செய்து ஊழல்களைக் களைய வேண்டும்.

பொது மக்களும் உரிமையோடு கடமையுணர்ந்து பொறுப்புணர்ச்சி பெற்று, விழிப்பாக என்றும் இருத்தல் வேண்டும்.

இதுவே இந்தியாவில் ஜனநாயகத்தை நிலை நிறுத்தும் வழி. ★

திரைக் கலைஞர்களின் நிஜக் கண்ணீர்!

திருவல்லிக்கேணி கடற்கரையில், தமிழக சினிமா நட்சத்திரங்கள், தாரகை உலகை விட்டுத் தரை மீது வந்து, மாளிகைகளை விட்டு, மக்கள் மத்தியிலே நின்று கண்ணீர் வடித்தார்கள், சில நாட்களுக்கு முன்னால்.

அது சோகக் கட்டத்திலே சினிமாவில் சொரியும் கண்ணீரைவிடச் சூடாகவும், தானே சுரப்பதாகவும் இருந்தது.

பிலிம் இறக்குமதியில் மத்திய சர்க்கார் ஏற்படுத்தியுள்ள கட்டுப்பாட்டின் விளைவாக,'வெட்டின் எதிரொலியாகக் கலைஞர்கள் கண்ணீர் வடித்தார்கள்.

கலைஞர்களின் துயரத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்—அவர்களது வாதங்களை முழுவதும் நாம் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் கூட.

நேரடியாகச் சுமார் 2 லட்சம் தொழிலாளருக்கு வேலை கொடுப்பதும், படப்பிடிப்பில் சுமார் ரூ. 18 கோடியும், விநியோகத்துறையில் சுமார் ரூ. 10 கோடியும், திரையிடும் வகையில் சுமார் ரூ. 200 கோடியும் மூலதனம் போடப்பட்டுள்ளதும், அகில இந்தியாவிலும் சுமார் 4,000 தியேட்டர்களுக்கு அதிகமாகப் பெற்றுள்ளதும், உலக சினிமாத் தொழிலில் சிறப்பான இரண்டாவது இடம் பெற்றிருப்பதுமான இத்தொழிலின் தற்போதைய துன்பம் மகத்தானது தான்.

ஆனால் அதே நேரத்தில் கலைஞர்கள் தங்கள் கண்ணீரைத் துடைக்க உதவக் கோரும் வழிகளில் கோணல் முறைகளும், குத்தல் சொற்களும் கூடவே கூடாது.

'நாங்கள் ஓட்டல் சாப்பாடு போல வெளிநாட்டு கச்சா பிலிமை நம்பி இருப்பது தவறுதான்; ஆனால் ஓட்டல் சாப்பாட்டை நிறுத்துமுன்பு வீட்டுச் சாப்பாடாக உள்நாட்டு பிலிம் உற்பத்திக்கு வழிசெய்த பிறகு, நிறுத்துங்கள்' என்று **நடிகர் திலகம்** குறிப்பிட்டதையும் நாம் ஒத்துக் கொள்கின்றோம்.

ஆனால் சினிமாத் தொழில் எவ்வளவு முக்கியம் என்று அவர்கள் கருதுகிறார்களோ, அதேபோல் பிற தொழிற்சாலைகள் மிக மிக முக்கியம் என்று நாடே கருதுகிறது.

கச்சா பிலிமைவிட, தொழிற்சாலை இயந்திரங்கள் முக்கியமா? என்று கேட்பது **புரட்சி நடிகருக்கு** அழகன்று.

தேசியப் பொருளாதாரத்தில் சினிமாத் தொழிலுக்கு இடமுண்டு; ஆனால் அது மிக மிக முக்கிய இடமாக இருக்கும் என்று எதிர் பார்ப்பது ஏமாற்றத்திலே முடியும்.

ஆலைகள் நமது கண்கள்; சினிமா நமது கூந்தல். அழகு தரும் கூந்தல் தான்! ஆனால் அது இல்லாதவர்களும் வாழ முடியும்!

இங்கிலாந்திலே, ஃகிராம்வெல் ஆட்சியில் நாடக சாலைகளெல்லாம் இழுத்து மூடப்பெற்றன. ஆனால் இங்கிலாந்து இறந்து விடவில்லை.

இவ்வாறெல்லாம் நாம் எழுதுவதால் சினிமாத் துறையினரிடத்தில் அநுதாபமற்றவர்கள் என்று நினைப்பது தவறு. 'வெட்டை நீக்குக!' என்று குரலெழுப்புகையில் இடையில் வேண்டாத பிரச்னைகள் வேண்டாம் என்றுதான் சொல்கிறோம்.

கலைஞர்கள், திரைப்பட உலகினர் கோரிக்கைகளை வைக்கு முன்பு, 'வீணாகப் பிலிம் விரயமாவதைத் தடுப்போம்; பெரிய படங்கள் எடுத்துப் பொறுமையைச் சோதிப்பதை நிறுத்துவோம்!' என்றும் முடிவு செய்வார்களா? என்பதும் ஒரு கேள்வி!

* * *

வெட்டைச் சாத்தியமான அளவு நீக்குவதோடு பம்பாய்க்கும், சென்னைக்கும், பழைய பெரிய முதலாளி, புதிய சிறிய முதலாளிக்கும் காட்டப்படும் வேற்றுமைகளை ஒழிக்கவும் மத்திய அரசியலார் முன் வருதல் அழகு.

விநியோக முறை ஊழல்களைக் களைதல் அவசரம்; அவசியம். பெரு முதலைகள், சிறு மீன்களை விழுங்க அனுமதிப்பது தவறு.

சரியான புள்ளி விவரங்களோடு தமிழக மக்கள்சபை அங்கத்தினர்களை அணுகி, அவர்கள் தலைமையில் போராடினால், மத்திய சர்க்கார் நகர்ந்து கொடுக்கும்; கலைஞர்களின் கண்ணீரும் துடைக்கப்பட்டு விடும். ஆனால் திரை உலகினர் அதைச் செய்வார்களா?

மூன்ருவது திட்டம்—சில யோசனைகள்!

அண்மையில் ஹைதராபாத்தில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், சென்னை மாநில நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் பல நல்ல காரியங்களைச் செய்தார்; ஆனல் நிலச் சீர்திருத்த விவாதத்தில் நிலவுடைமைக்கு வரம்பு கட்டுவதை எதிர்த்து அவர் சொன்ன வார்த்தைகள்தான், நல்ல குடம் பாலிலே ஒரு துளி நஞ்சு கலந்தது போல் ஆகிவிட்டது!

வெகு புத்திசாலித்தனமாக, நேரடியாக நிலச்சீர்திருத்தத்தை எதிர்க்காது, சிறிய நிலச் சுவான்தார்கள் உற்பத்தியைக் குறைவாகச் செய்து வருகிருர்கள் என்றும், எனவே நிலவுடைமைக்கு வரம்பு கட்டி, தற்போதைய நிலையை மாற்றினல் பெரிய நிலச் சுவான்தார்கள் செய்து வரும் அதிக உற்பத்தி குறைந்து விடும் என்றும் அவர் வாதிட்டார்.

இது உண்மை நிலைக்கு மாருனதாகும். சிறிய நிலச்சுவான்தார்கள் ஏராளமாக உற்பத்தியைப் பெருக்குவதில் அக்கரை காட்டி வருகிருர்கள் என்பதை நாம் நிரூபிக்க முடியும்.

மேலும், சென்னை மாநிலம் நிலச்சீர்திருத்தத்தில் சில முக்கிய கட்டங்களைத் தாண்டி வெற்றிகரமாகப் புகழோடு அமுல் நடத்தி வருகிறது என்பதை மறக்கக்கூடாது. எனவே இந்த மாநிலத்தின் அமைச்சர், ஆளும் கட்சியின் நிதி மந்திரி என்ற நிலையில்தான் பேச வேண்டும். அவரது சொந்தக் கருத்துக்கள் வெளியிடப்படும் போது கூட ஒன்றுக்குப் பத்து முறை சிந்தித்தால் நலம்; அத்துடன் இத்தகைய முக்கிய பிரச்னைகளில் உண்மைக்கு மாருன வாதங்களைக் கிளப்ப வேண்டாம் என்றும் அவரைப் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிருேம்.

*   *   *

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மூன்ருவது திட்டத்தின் நோக்கங்களைப் பரிசீலிக்கும் துறையில் தன் சிந்தனையைச் செலுத்தியிருப்பதை நாம் வரவேற்கிருேம்.

நிலச் சீர்திருத்தத்தை காங்கிரஸ் ஏற்கெனவே ஒப்புக் கொண்டு, பல பல ஆண்டுகளாகப் பேசி வந்துள்ள அடிப்படையில் நல்ல முறையில் அதை துரிதப்படுத்தி, உணவு உற்பத்தியை 100% பெருக்குவது என்பது மிகப் பொருத்தமே.

தொழில் மயமாக்குவதைப் பொருத்த அளவில் பரவல் முறையை, குவியல் முறையை விட அதிகமாகக் கையாளுவது அவசியம்.

உதாரணமாக, மக்கள் சீனுவில் 'சுதேசி வழிகளை'ப் பின்பற்றி நாடு முழுவதுமாக 13,000க்கு மேற்பட்ட சிறிய, நடுத்தர இரும்பு உற்பத்தி ஊதுலைகளைக் கட்டி 2 கோடி டன் வருடத்திற்கு உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளனர். அத்துடன் 200க்கு அதிகமான 'பெஸிமர் கன்வர்டர்களும்' (ஒரு கோடி டன் ஆண்டுக்கு எஃகு உற்பத்தி) கட்டப்பட்டு வருகின்றன என்று கூறுகிருர்கள்.

இவ்விதப் பரவல் முறையால் பல நன்மைகள் உண்டு. ஆலைத் தொழிலின் நன்மைகளையும், குடிசைத் தொழிலின் நன்மைகளையும் கொண்டு, இரண்டின் தீமைகளையும் விலக்கிய இத்திட்டம் சாலச் சிறந்தாகும். இதையும் காங்கிரஸ் தலைவர்களும், திட்டச்சிற்பிகளும் கவனிக்க வேண்டும்!

"என். ஜி. ஓ.! குரல் கொடுப்பீர்!"

மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டுள்ள சம்பளக் கமிஷனின் தீர்ப்பு இன்னும் சில நாட்களில் வெளியாகும் என நம்பகமாகத் தெரிய வருகின்றது.

பிரதமர் நேரு முதல், முதலமைச்சர் காமராஜ் வரை மாநில என்.ஜி.ஓக்கள்பால் அநுதாபம் கொண்டவர்கள் என்பதும், மத்திய அரசாங்க மாநில அரசாங்க ஊழியர்களிடையே வேலை அளவிலும், தரத்திலும், ஒற்றுமையும் ஊதிய அடிப்படையில் வேற்றுமையும் இருத்தல் தகாது என்று அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளார்கள் என்பதும் வெளிப்படை.

எனவே இந்த நேரத்தில் ஒப்புக் கொண்டுள்ள உண்மையைச் செயலாக்க வேண்டிய மாபெரும் பொறுப்பு அவர்கள் தலையிலே சுமந்திருக்கிறது.

மாநில அரசாங்க நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் இது குறித்து சாதகமாகப் பேசியிருப்பதை வரவேற்கிறோம்.

நூற்றுக்கு நூறு பங்கு முழு முயற்சியும் எடுத்துக் கொண்டு, எல்லாவித அரசியல் முறைகளையும் கையாண்டு சென்னை மாநில முதலமைச்சரும், நிதி அமைச்சரும் என். ஜி. ஓ.க்களைக் காப்பாற்றிக் கரை சேர்ப்பார்கள் என்றும் எண்ணுகின்றோம்.

இரும்பு பழுக்கக் காய்ச்சிய நிலையில் இருக்கையிலே அடிப்பதும், மாட்டைப் பிடிக்க, தும்பு அருகில் வரப் பெற்றதும் கைப்பற்றுவதும், காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வதும் புத்திசாலிகளின் செய்கைகள்.

கமிஷன் அறிக்கையை இக்கண்ணோட்டத்தோடு பார்த்து, 'புத்திசாலிகளா?' என்று நிரூபிக்க வேண்டியது அரசியலாரின் கடமை.

அழுது, அழுது ஓய்ந்து விட்ட என். ஜி. ஓ.க் குழந்தையும், இந்த நேரத்தில் சக்தியெல்லாம் திரட்டி 'வீல்...வீல்...வீல்' என்று வீரிட்டு, டெல்லிக்குத் தன் குரலை உரிய நியாய வழியில் அறிவிக்க வேண்டும்.

நீர் கொடுங்கள்! நெல் தருகிறோம்!

கடந்த சில வாரங்களாக நாட்டில் உணவுப் பொருள்கள் விலை வேகமாக ஏறுமுகம் காட்டும் நிலை காணப்படுகின்றது. ஆனால் ஏறுமுகம் தவிர்க்க வேண்டிய எட்டுமுக அமைச்சர்களோ பராமுகம் காட்டி நிற்கிறார்கள்!

அறுவடை நேரத்திலே அகவிலை குறையும் என்பது அடுப்பங்கரையிலும் அடிபடும் அடிப்படைப் பொருளாதாரம். அது கூடத் தவிடு பொடியாகி விட்டது. அறுவடை காலத்திலும் விலைகள் விழவில்லை; நமது வாழ்க்கை நிலைதான் கீழே விழுந்து வருகின்றது!

தென் மாவட்டங்களில் சாதாரணமாக ரூ. 40 க்கு விற்கும் கோட்டை நெல் இப்பொழுது ரூ. 52 ஆக ஏறி நிற்கிறது.

ஏன்? இதைத் தீர்க்க என்ன வழி? என்று கேட்டால், 'யோசிக்கிறோம், யோசிக்கிறோம், யோசித்துக்கொண்டே இருக்கிறோம்!' என்று பதில் வருகிறது.

'ஐயா! விலையைக் கட்டுப் படுத்துங்கள்! அதுதான் விவசாயின் விசனத்தைத் தீர்க்கும் வழி' என்று சொன்னாலோ, 'அது முடியாது! எது முடியும் என்று யோசித்து வருகிறோம்!' என்று விடை சொல்கிறார்கள்.

இவர்கள் இப்படி எடுத்ததெற்கெல்லாம் யோசித்துக்கொண்டேயிருக்க, கேரள அரசாங்கமோ, தென்மண்டல உறுப்பினர் என்று தஞ்சை நெல்லை அள்ளிக் கொண்டு போய்க்கொண்டே இருக்கிறது!

நமது கேரள சகோதரர்களுக்கு உதவக்கூடாது என்று நாம் சொல்ல வரவில்லை; ஆனால், 'தனக்குப் போகத் தானே தானம்?'

அதோடு, 'வீணாகப் போகிற நீரைத் தாருங்கள்' என்று கேட்டால், பின் வாங்குபவர்களுக்கு நாம் ஏன் உதவுவது? என்றுதானே சாதாரண மனிதன் நினைப்பான்?

பம்பையாறு, பரம்பிக்குளம் தண்ணீரைத் தந்தால், சென்னை உபரி ராஜ்யமாக மாறும். பிறகு நாம் உதவுவதும் நியாயம்; அவர்கள் கேட்பதும் நியாயம்.

ஆகையால், மாநில அரசாங்கம் ஒன்று விலையைக் கட்டுப்படுத்த வேண்டும்; இல்லை நீரையாவது பெற்று நிரப்ப வேண்டும்.

எதுவும் செய்யாது, யோசிப்பதை மாத்திரம் செய்வது பொது மக்கள் துயரைத் துடைக்காது!

உலகத்தின் இழப்பு!

கத்தோலிக்கக் கிறித்துவ மதத்தினரின் தலைவராகிய போப்பாண்டவர் பன்னிரண்டாம் பத்திநாதரின் மறைவு கத்தோலிக்க மதத்தினரின் தனி நஷ்டமல்ல; உலகத்தின் மாபெரும் இழப்பு.

காலஞ்சென்ற இப் போப்பாண்டவர் ஒரு கல்விக் கடல்; ஏழை பங்கா

ளர்; சமாதானம் தழைக்கப் பாடுபட்டவர்.

இரண்டாவது உலக மகா யுத்தம் பயமுறுத்திக் கொண்டிருந்த நேரத்திலே இருளிலே ஒரு குரலாக அவர் சமாதானச் சங்க நாதம் செய்தார். "ஹிட்லரின் ஆட்சி, அதிகார வெறிக்கும் இன வெறிக்கும் ஒரு எடுத்துக் காட்டு. மனித உரிமைகளைப் பறிக்கும் கொடுங்கோல் ஆட்சி!" என்று துணிந்து முழங்கினார்.

சமாதானம் நிலைக்கப் பாடுபட்ட இம் மாபெரும் மதத்தலைவர், போப்பாண்டவர்கள் சரித்திரத்திலேயே அதிகமான முறை ஏழைகளைப் பேட்டிக்கு அனுமதித்தவர் என்றும் கூறுகிறார்கள். அத்துடன், இத்தாலியரல்லாத 'கார்டினல்கள்' பலரைஅவர் நியமனம் செய்ததாகவும் தெரிகின்றது.

இவ்விதம் கல்விக் கடலாய், பாங்கு மனம் படைத்த பண்பாளராக வாழ்ந்த போப்பாண்டவர்,

இத்தாலியின் சர்வாதிகாரியான முசோலினி அல்பேனியாவைத் தாக்கிய பொழுதும் வன்மையாகக் கண்டித்தார்.

வல்லரசுகள் அணுகுண்டு சோதனைகளை நிறுத்த வேண்டும் என்று உருக்கமாக வேண்டினார்.

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்
உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்ற தமிழ் மறையின் படி உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் வாழ்ந்தார். அவர் பூதவுடல் மறைந்தது. புகழ் உடல் இன்னும் வாழும்!

சுட்டது போதும்
பாரீஸுக்கு வாரும்
டிகால்
உலக அரங்கில்
குமாய் தீவு
மா-சே-துங்
உன் சந்திர வாணம்
புஸ்வாணம்!
டல்லஸ்
குருஷேவ்


இது தீபாவளி
நானும் சுடுவேன்!
நம்பூதிரி பாட்
தீபாவளி
சைப்ரஸ்
துருக்கியர்
நானும் சொல்லிகிட்டே இருக்கேன் இந்த முட்டாப் பசங்களும் தீபாவளி கொண்டாடிகிட்டே இருக்காங்க !? வெங்காய தீபாவளி.....
தீபாவளியும் நாளுமா
இன்றைக்குமா வெளியே
போகவேண்டும்

கல்வித் துறையில் ஒரு புரட்சி!

(கோசல்ராம்)

இந்தியாவில் பல துறைகளில் முன்னணியில் நிற்பது சென்னை மாநிலம். அந்தப் பெருமையை மீண்டும், ஓர் துறையில் நமது ராஜ்ஜியம் 'பள்ளிச் சீரமைப்புத் திட்டம்' என்று ஒரு புரட்சித் திட்டத்தைப் புகுத்தி அடைந்து வருகிறது.

திட்டம் புரட்சிகரமானதுதான்; ஆனால் புதியதில்லை.

எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தை எதிர்பார்த்து நிற்பதால், பல நல்ல காரியங்கள் கருவிலேயே காலமாகி விடுகின்றன. மக்கள் தங்கள் நலன் கருதும் திட்டங்களில் பெரிதும் தாங்களே ஈடுபட்டுவிட்டால், பிறகு முன்னேற்றம் விமான வேகத்திலே வகுக்கப்படலாம்.

இந்த உண்மையை நன்ருக உணர்ந்தே நமது முன்னவர்கள் செயல் பட்டார்கள்; அரசை அதிகம் சாராது, கிராமத்தை சுய தேவைப் பூர்த்தி உடையதாகச் செய்தார்கள்.

இடைக்காலத்தில் கிறிஸ்தவ மிஷனரிகள், நாடு முழுவதும் இந்த மக்கள் சக்தியில் நம்பிக்கைவைத்து மகத்தான அதிசயங்களைச் சாதித்தார்கள்.

ஏழை வீட்டிலும் வேளைக்கு ஒரு பிடி அரிசி பொதுக் கல்விக்காகச் சேமிக்கப்பட்டது!

ஆனல் இடைக்காலம் இறந்த பிறகு, எதற்கும் அரசாங்கத்தை எதிர் நோக்கும் 'நடைப்பிண காலமாக' மாறி விட்டது.

கல்வி இலாகாவும் ஒரு நூறு ஆண்டுகளாக இருந்து வருகிறது. பல நூற்றுக்கணக்கான அதிகாரிகளும் தணிக்கையாளர்களும் இருந்து வந்தார்கள். அவர்கள் அதிகாரிகளாகவே இருந்து வந்தார்களே யொழிய உபகாரிகளாக என்றுமே இருந்ததில்லை. தணிக்கை ஆணை வழியில் நடந்ததே தவிர அன்பு வழியில் நடக்கவே இல்லை.

தற்பொழுது ஆரம்பப் பள்ளியின் நிலைமை என்ன? வெள்ளையடித்து பல ஆண்டுகளாகி யிருக்கும். அநேகம் எப்பொழுது வெள்ளையடிக்கப் பட்டது என்பதை யறிய சரித்திர ஏடுகளைப் புரட்ட வேண்டியிருக்கும். கரும் பலகைகள் பெயரளவில்தான் கருப்பாக இருக்குமே யொழிய நடைமுறையில் நல்ல வெண் சுண்ணும்புபோல் வெண்மையாகக் காட்சியளிக்கும். பள்ளியில் ஒதுங்குமிடம் இருக்கவே இருக்காது. நூல் நிலையத்தைப்பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. சிலந்தி கட்டும் நூல் தவிர வேறு நூல் பார்வைக்குத் தென்படாது. மற்ற உபரணங்களைப் பற்றி கேட்கவே வேண்டாம்.

இந்தியா படத்தைப் பயிற்சிப் பள்ளியில் பார்த்த பின் பார்ப்பதற்கு வாய்ப்பே கிடைத்ததில்லை. ஆசிரியர் குடியிருப்பு விஷயம் மிகவும் வேடிக்கையானது. 10 மைல்கள், 5 மைல்கள் தினமும் நடந்து வந்து பள்ளைக்கு வந்து போகும் ஆசிரியர் பள்ளியின் பால் எந்தவித ஊக்கம் காட்டுவார் என்பது சொல்லாமலேயே விளங்கும்.

தோட்டம், துரவு, பூங்கா, சோலைகள் எல்லாம் சங்க இலக்கியங்களிலேயே காணக் கிடக்குமே தவிர பள்ளிகளில் காணமுடியாது.

'குழந்தைப் பசி, கொள்ளித் தேள்' என்பார்கள். ஆயிரம் கொள்ளித் தேள்களை வயிற்றிலேலே கட்டிக் கொண்டிருக்கும் நம் பிள்ளைகளுக்குப் பள்ளிப் படிப்பு எங்கிருந்து வரும்? இந்தப் பசி அரக்கனை விரட்டி, இலவச மதிய உணவுத் திட்டத்தின் மூலம் நல்ல கல்விக்கு வாய்ப்பதளித்த பெருமை நமது ஸ்ரீ காமராஜ் சர்க்காரையே சேரும்.

இத்தகைய மோசமான நிலையை மாற்றி பொது மக்கள் மறந்து போயிருந்த பழைய புரட்சியை நினைவுபடுத்தி



[திசையன்விளையில் நடைபெற்ற பள்ளிச் சீரமைப்புத் திட்ட மாநாட்டில் முதலமைச்சர் ஒரு பேழையை, அதிக விலைக்கு ஏலத்தில் பெற்ற பெட்டைக்குளம் ஜனாப். காதர்மீரா சாகிப்பிற்கு வழங்கினார்.]

னர் நமது மாநிலக் கல்வித்துறை இயக்குநர் திரு. சுந்தரவடிவேலு. அவருக்கு நமது பாராட்டுக்கள்.

மக்கள் இயக்கமாகக் கல்வி மாறியது; பள்ளிச் சீரமைப்புத் திட்ட மாநாடுகள் 12 இதுவரை நமது மாநிலத்தில் நடந்துவிட்டன. இலவச நண்பகல் உணவுத் திட்டத்தில் வழிகாட்டியாகவும், முன்னணியில் நின்றதுமான நெல்லை மாவட்டம் இச்சீர்திருத்தத்திலும் பெரும் பங்கு வகுத்து வருகின்றது. அதற்குப் பெருமளவு காரணமான நெல்லை மத்திய கல்வி மாவட்ட ஆணையாளர் திரு. வெங்கட சுப்பிரமணியத்தின் சேவையையும் யாரும் மறக்கமுடியாது.

கடம்பத்தூரில் (செங்கற்பட்டு ஜில்லா) பிறந்த குழந்தை, வள்ளியூரில் பெயரிடப்பட்டு, விருதுநகரில் பூச் சூட்டப்பட்டு, நாசரத்தில் நற்பெயர் உலகறியப் பெற்றதென்றால் அப்பெயர் தமிழ் நாட்டிற்கு என்றும் உரித்தாகும். நமது கல்வி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் இத்திட்டத்தில் காட்டி வரும் அக்கரை போற்றற்கு உரியது.

சுற்றுச் சுவரில்லாத பள்ளிகள், இத்திட்டத்தின் மூலம் சுற்றுச் சுவர்கள் பெற்றன. குடிசைகள் இருந்த இடத்தில் மாபெரும் பள்ளிக் கட்டடங்கள் எழும்பியுள்ளன. எல்லாப் பள்ளிகளிலும் ஒதுங்கும் இடங்களும், தோட்டங்களும் ஏற்படுத்தப்படுகின்றன. கரும் பலகைகள் உண்மையாகவே கறுப்பாகக் காட்சியளிக்கின்றன. சுவர்களெல்லாம் வெண்மை பெறுகின்றன. பைந்தமிழ்ப் புத்தகங்கள் நூல் நிலயங்களாக மிளிர்கின்றன. ஏழை மாணவருக்கு இரவில் படிக்கும் வசதியும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது.

மற்ற எல்லா மாநாடுகளிலும் இல்லாத சிறப்பு நாசரத் மாநாடு பெறுகிறது. எப்படியெனில் இங்குதான் ஆசிரியர்களுக்கு இனம் வீடுகள் கட்டிக் கொடுக்க மக்கள் முற்படுகின்றனர். வெல்க, இம்முயற்சி!

தந்தி: 'ஜுவல்லர்ஸ்' போன்: 49



பவுன், தங்கம், வெள்ளி,

வைர நகைகளுக்கு

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

திருச்சிராப்பள்ளி.

கிளைகள்: சென்னை, காயல்பட்டணம்,
யாழ்ப்பாணம் & கொழும்பு.

பத்மினி பிக்சர்ஸ்:

"சபாஷ் மீனு"

'கயிதே! கயிதே!'

'என்ன பிரதர்! இதைக் கொஞ்சம் வுடேன்! இப்படியே போனு நாளே ஆபீசிலே இந்தக் கலாட்டா தொடர்ந்து நடக்குமே!'

'நடக்குமாவது! இரண்டு நாளா நடக்குதே! மானேஜரிலே இருந்து எல்லாரும் ஒருத்தரை ஒருத்தர் இப்படித்தானே கூப்பிட்டுக் கொள்கிரும்!'

[நேற்று இரவு 10 மணிக்கு 'புதுமை'யில் விமர்சனம் செய்வதற்காக 'சபாஷ் மீனு'வைப் பார்த்துவிட்டு அடியேன் மவுண்ட்ரோட் பஸ் நிலேயத்தில் நிற்கையில் இந்த உரையாடல் நடைபெற்றது! படம் வெளி வந்து பல வாரங்கள் கழித்து, பத்திரிக்கையாளர்கள் எல்லோரும் எழுதிய பிறகு நாம் எழுதவேண்டுமே என்ற கவலேயோடு படம் பார்க்கப் போயிருந்தேன். ஆனல் இந்த ரசிகர்கள்—(தோற்றம் மத்திய தர வகுப்பினர் என்றும், படித்தவர்கள் என்றும் பறை சாற்றியது; இருவரில் ஒருவர் மனேவியுடன் வந்திருந்தார்)—பேசியதைக் கேட்டதும், அதையே அப்படியே எழுதிவிட்டால் போதும் என்று காதுகளேக் கூர்மையாக்கிக் கொண்டேன். உண்மையாகச் சொல்கிறேன் நம்புங்கள்; அவர்கள் கூறியதை அப்படியே தருகிறேன் 'புதுமை' விமர்சனம் என்று'. ரசிகர்கள் தேன் சொட்டாகச் சொட்டினுல் இதைத் தொடர்ந்து செய்வேன். பிடிக்கவில்லே என்று தேளாக நீங்கள் கொட்டினுல் 'டங்கர்க்' செய்வேன்! எழுதுங்கள்!]

'உம் மூஞ்சியிலே கை!' அப்படின்னு சந்திரபாபு சொன்னபோதும், 'மன்னிச்சுடு பிரதர்'னு கைகூப்பிய போதும் ரொம்பப் பிரமாதமாக இருந்தது!'

'சந்திரபாபு நடித்த படங்களிலேயே இதுதான் சிகரம்!'

'சிவாஜி வழக்கம்போல நல்லாத்தான் செய்திருக்காரு! ஆனு சில இடங்களிலே ஓவர்! அனுவசியமா நகைச்சுவைன்னு சில இடங்களிலே தவறு பண்ணியிருக்காங்க! பல சரக்குக் கடையிலே பாட்டுப் பாடறது சுத்த அபத்தம்!'

'ஏன் முதல்லே எல்லோரும் பாட்டுப்பாடி சேரியைச் சுத்தம் பண்ணுகிருங்களே, அதிலே என்ன 'ஸ்டோரி' வால்யூ இருக்குது! அதுவும் மோசம்! வயலும், வரப்புமா பட்டினத்திலே இப்படிக் குப்பம் எங்கையா இருக்கு!'

'சரிங்க! நீங்க இப்படிக் கேட்டுக்கிட்டே போனு கதையே போயிடும்! போலீஸ்காரங்க வந்து வில்லனேப் பிடிக்காம, ராஜகோபால் பிடிக்கறபோது 'ஸ்டன்ட்' கட்டம் வேணுமே என்று திணிச்சது தெரியுது! அந்தப் பொண்ணு மாலினி...'

'அசப்பிலே பத்மினி!'

'நடிப்பிலும் துடிப்பாத்தாங்க இருக்குது!'

'சேத்திலே வழுக்கி விழுந்து 'டுயட்' பாடறபோது 'அவன் யார்?' நர்கிஸ் நினேவு வந்துச்சு!'

'சரோஜாதேவி...'

'பாவம்...அவங்க சந்திரபாபுவைக் காதலிக்கறதிலே இருந்து பரிதாபத்துக்குரியவங்கன்னு தெரியலே...'

'கரெக்ட்...கரெக்ட்!'

'ரெங்கராவ், பாலசுப்ரமண்யம், பந்துலு எல்லாம் அவங்கவங்க டைப்பிலே நடிச்சிட்டாங்க!'

'ராஜகோபால் 'மாஸ்டரு' நல்லா போடுருரு! வசனம் ரொம்ப நல்லா ஒத்துழைக்குது!'

'பொதுவா வசனம், பாட்டு எல்லாம் நல்லாத்தான் இருக்குது! படமும் 'ஹிட்' தான்!

'அதுக்கென்ன சந்தேகம்! மூணு வாரம் ஸிட்டியிலே ஓடியிருச்சே!'

இந்த இடத்தில் அவர்கள் உரையாடல் 'பட்' என்று அறுந்தது 'பஸ் ஒன்று வந்ததால்! எனது விமரிசனமும் 'சட்' என்று முடிகிறது! மன்னிக்கவும்!

—"ஆரெஸ்ஸஸ்"

ஆரெஸ்ஸெஸ்
படைக்கும்
பிறப்பும்-வளர்ப்பும்
உளநூல் உண்மைகளை உணர்த்தும்
தொடரோவியம்!
டிசம்பர் இதழில் பிறக்கிறது!

ரசிக வண்டுகளின் ரீங்காரம்

தேன் சொட்டு | **தேள் கொட்டு**

இனிமை! இனிமை!

சென்ற இதழ் கதைகளில் 'சுகி' கதை இனியது. சூடாமணி கதை நன்று. 'மறம் வென்ற அறம்' சுவையாக உள்ளது. மற்றவைகள் 'பரவாயில்லே' ரகம்!

சென்னை-5 வனு: கனு

எட்டிய புரம்!

பாரதி விழாவுக்கு எட்டயபுரம் போகாதவர்கள் 'புதுமை' அக்டோபர் இதழ் பார்த்தால் போதும். கட்டுரை, நன்கு அமைந்து உள்ளது.

சென்னை-6 ரா. பாலகிருஷ்ணன்

வெற்றிதான்!

'சுகி' அவர்கள் கதை அக்டோபர் இதழுக்கு அணிகலனாக விளங்குகிறது. நாட்டுக்கு எது தேவையான கருத்தோ அதை அழுத்தமாகக் கூறி இருக்கிறார். நல்ல எழுத்தாளராகிய வல்லிக் கண்ணனின் தொடர்கதையும் இருக்கிறது. வெற்றிக்கு வேறென்ன வேண்டும்!

மதுரை நா. பார்த்தசாரதி

டேஞ்சர்!

புது முறையில் அட்டைப் படத்திற்கு சிவப்புப் பின்னணி தீட்டியது வரவேற்புக்கு உரியது!

மேட்டூர் கமலநாதன்

சென்ற இதழ் அட்டைப்படத்தின் அழகி நெஞ்சை அள்ளுகிறாள். அவள் வாலிபர்களின் வைரி! ஓவியருக்குப் பாராட்டுகள்!

தென்காசி சுந்தரமூர்த்தி

சென்ற இதழ் தலையங்கம் சிறந்த கருத்துரையாகும்! என்றும் உரையுங்கள், இதுபோல்!

திருவனந்தபுரம். ஸ்ரீதரன்.

உரலா! உடுக்கையா!

'உடுக்கை இடை' என்பார்கள்; உங்கள் ஓவியர் உரல் இடையைத் தீட்டிவிட்டார், சென்ற இதழ் அட்டையில்!

சென்னை-17 குமாரி சந்திரா

வைத்தியத்திற்கு...பத்தியம்!

'இயற்கை வைத்தியம்' ஏன் வர வரச் சுருங்குகிறது?

தஞ்சை அப்துல் காதர்

வெறுப்புத்தான் வருகுதையா!

'சிரிப்பு டானிக்'—பழையகள்... புதிய போத்தல்!

மதுரை கிருஷ்ணகுமாரி

பிழை பொருக்குவீர்!

'புதுமை'யில் அச்சுப் பிழைகள் மிகமிக அதிகமாக இருக்கின்றன. ஏன்?

சென்னை-4 கோவிந்தன்

விளம்பர காட்லாக்!

பத்திரிக்கையா? விளம்பர காட்லாக்கா?

சென்னை-1 ஒரு வாசகர்

வக்காலத்து!

மெட்ரிக் அளவுமுறை கட்டுரையை வெளியீட்டு வக்காலத்து வாங்கியிருக்கிறீர்கள்! பீஸ் எவ்வளவு? ஒரு பக்க விளம்பரமா!

கூடலூர். ஜேம்ஸ்

சென்ற இதழில் 'உலகம் என்ன அறியும்? 'தியாகத் திருவுருவே' என்ற கதைகளில் வரும் இரு கதாநாயகிகளும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டதாக உங்கள் ஓவியர் கருதிவிட்டது ஏன்?

கர்நூல் ஜம்புலிங்கம்

உலகப் பிரசித்திப் பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் - பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்
பென்ஸ் தயாரிப்பு

மாடல் LP 312/48—5 டன்

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.
பஸ் சொந்தக்காரர்ளுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும்
உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க

தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.

மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு
அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் பிரைவேட் லிமிடெட்,

5, ஸ்காட் ரோடு :: மதுரை.

மனச் சிமிழ்

வை. சுப்ரமண்யன்

நகர் எங்கிலும் தீபாவளிச் சூழ்நிலே பிறந்து விட்டது. கிழக்குத் திசையில் ஒரு கோடியில் காதைப் பிளக்கிருற் போல் கிளம்புகிற வெடி ஒலி மேற்குத் திசையில் மற்றெரு கோடியில் எதிரொலிக்கிறது. சமூகத்தில் ஒரு பக்கத்தில் பணம் 'புழங்குகிற' இடத்தில் தீபாவளித் திட்டம் உருவாகிறது; பட்டுப் புடவைகளுக்கும் சரிகை வேஷ்டிகளுக்கும் என்று செலவு செய்து தீர வேண்டிய தொகையைப்பற்றி அங்கேவிவாதிக்கப்படுகிறது. இன்னெரு பக்கத்தில் ஒரு ஏழையின் குடிசையில், அன்றையப் பட்டினியைப் பொருட்படுத்தாமல் மறு நாளாவது கண்டிப்பாகக் கஞ்சிக்கு வழி ஏற்படுமா என்று பேசிக் கொள்கிருர்கள்.

இந்த நிலேயில்—

தீபாவளியை ஒட்டி ஒரு உயிர் இன்பக் கனவு காணத் தொடங்கியது. இந்த உலகத்தில் தன்னே ஏன் என்று கேட்க ஆளில்லாத சுதந்திர உயிராகத் திரிந்தது அது. அதன் பிராயம் இன்றைக்கெல்லாம் பன்னிரண்டைத் தாண்டியிருக்காது. ஆண் சிங்கம் அது என்று வர்க்கத்தைக் குறிப்பிட அப்படிக் கம்பீரமாக எழுதத் தோன்றியது எனக்கு. ஆனல், உண்மையில் 'சிங்கண்டா!' என்று அவன் முன்னல் விளேயாட்டுக்காகச் சொன்னலும் கூட, சொன்னவரை வந்து கட்டிக் கொண்டு விடுவான்! வயிற்றுக்குள் ஒரு மூட்டையை

வைத்துக் கட்டினாற்போல அந்த வயிறு மட்டும் பருத்துத் தெரியும். மேலும் கிழும், காற்று வெளியேறிக் கொண்டிருக்கிற நிலையிலுள்ள பலூன்களைப் போலத் தோற்றமளித்தன மார்பும் வயிறும். இந்த உருவச் சேர்க்கைக்குப் பெயர் முத்து!

அந்த முத்து கொத்தவால்சாவடிப் பிராந்தியத்தில், அதன் சூழ்நிலை மோதலால், தானும் உயிர் வாழ வேண்டி சன்னமாக மூச்சு விட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு ஆத்மா. தலையில் ஒரு கூடையைக் கவிழ்த்துக்கொண்டு, "கூலி! கூலி!" என்று உரக்க ஒலிக்கத் தெம்பில்லாமல் ஒலித்துக் கொண்டு ஏதோ இரண்டு காசு பார்த்து கொண்டு, அந்த மூச்சு இழை தொடர்ந்து வந்து கொண்டிருக்க வழி செய்து கொண்டிருந்தான். கடலில் திமிங்கிலங்கள் துள்ளி விளையாடி, நீரைக் கிழித்து எழுப்பிய வீதிகளிடையே ராஜபவனி வரும்போது சிதறித் தெறித்து ஓடும் கெண்டைக் கூட்டத்தில் ஒரு சொத்தை மீன் போன்றவன் முத்து. கூலிக்கிராக்கி பிடிக்கும் பயில்வான்களுக்குச் சற்றுத் தள்ளி நின்று பரிதாபமாகக் குரல் எழுப்பி, கிராக்கி பிடித்துக் கொண்டு நாலணு, ஆறணு பெற்றுத் திருப்தியடையும் ஒரு எளிமை உருவம் அது.

மாலு சேலையை நினைக்க, அவள் மணாளன் பட்ஜெட்டைப் பார்க்க, கூலிக்கார முத்து கும்பலில் மறைந்து விட்டான்! மறைந்தவன் திரும்பி வந்தது தான் அதிசயம்!

அந்த உருவத்தின் மன அடித்தளம் அநேகமாக எப்போதும் காலியாகவே இருக்கும். ஆசைகள், கனவுகள், சபலங்கள் எதுவுமின்றி 'ஆறணுவில் ஒரு நாளைத் தள்ளி விடும்' தேவை உணர்வை மட்டும் கொண்ட யந்திர மனம் அது. அந்த யந்திர மனத்தில் இன்று ஒரு கோளாறு ஏற்பட்டு விட்டது. ஏனெனில், தீபாவளிச் சூழ்நிலையை ஒட்டிக் கற்பனையை ஒட்டிய மனத்தில் ஆசையும் சபலமும் அலை மோத ஆரம்பித்தன. ஊரிலே வெடித்த வெடிகள் அவன் மனத்தில் வெடி ஆசையைக் கிளப்பி விட்டன; கடைகளில் கண்ணைப் பறிக்கத் தொங்கி, கண்ணாடி அறைகளுள் ஜாலம் காட்டிய புத்தாடைகள் ஒரு கோடித் துண்டின்–நான்கு முழத்துண்டின்–நினைவைச் சபலமாகப் புகுத்தின.

இந்த நினைவுகளோடு, தலையில் கவிழ்த்த கூடையோடு அவன் சைனு பஜாரில் ஊர்ந்து கொண்டு 'கூலி'ப் பாட்டைப் பாடிக் கொண்டிருந்தான். பிஸினஸ் வட்டாரத்தின் தெற்கு எல்லை சைனு பஜார்தான். அபூர்வமாக அங்கேயும் சுற்றுவான். இன்று தீபாவளிச் சூழ்நிலை அவனை அங்கே இழுத்தது.

*　　*　　*

"டேய் கூலி!" என்ற இரண்டு வார்த்தைகளும் எந்தக் கூலிகளின் காதுகளில் கேட்டாலும், 'பசை உள்ளவர்கள்' பாதாம் அல்வா சாப்பிடும் போது பிறக்கிற இன்பம் அங்கேயும் பிறக்கும். முத்துவை ஒருவர் கூலியாக அமர்த்தக் கூப்பிட்டபோது தாங்க முடியாத இன்பத்துடன் முன் அவர் வந்து நின்று கொண்டு, தலையில் கவிழ்த்திருந்த கூடையை எடுத்து நிமிர்த்தித் தலைமீதே வைத்துக் கொண்டான்.

"போர்ட் ஸ்டேஷனுக்கு வருவியாடா?"

"வரேன், ஸார்!"

"இந்த விளையாட்டுக் குதிரையும் இந்தச் சின்னத் தோல் பெட்டியுந்தான். எவ்வளவு கேட்கிறே?"

"ஆறணு குடு, சார்"—ஆறணுக் காசு அவனுக்கு ஒரு லட்சியமான தொகை. அதற்குமேல் கேட்டு அவனுக்குப் பழக்கமில்லை.

"நாலணு போதாதாடா?"

"நாலரையணுவானும் குடு, ஸார்! அம்மாந் தொலவு போவணுமே!"

"சரி. இந்தக் குதிரையைத் தூக்கிக் கொள். தோல் பெட்டியைக் கையிலே எடுத்துக் கொள்."

முத்துவுக்கு அப்போதைய யஜமானர்களாக மாறியவர்கள் ஒரு இளந் தம்பதியர். கணவனுக்கு இருபத்தாறு வயதிருக்கும்; மனைவிக்கு இருபத்து நாலு வயதிருக்கும்.

"நேரே போர்ட் ஸ்டேஷனுக்குப் போக வேண்டியது தானே, மாலு?"

"ஆமாம்; எல்லாம்தான் வாங்கியாச்சே!" என்றபடி, இன்னும் ஏதாவது விட்டுப்போயிற்றோ என்று சந்தேகத்துக்கு ஒருமுறை சைனபஜாரைச் சுற்றிப் பார்த்தாள் அவள். அவள் கண்களை எல்லாம் கவர்ந்தன. என்னென்ன பொருள்கள் காட்சிப் பொருள்களாய் அவள் மனத்துள் 'மளமள' வென்று புகுந்தன என்று தெரியாது.

"சரி, கிளம்பு" என்றான் கணவன்.

மனமின்றிக் கிளம்பினாள் மாலதி—அவன் மனைவி.

முத்து தன் உத்தியோகச் சின்னமான கூடையைத் தெரிந்த 'பங்க்' கடை யொன்றில் ஒப்புவித்து விட்டு, விளையாட்டுக் குதிரையைத் தலைபோல் தூக்கிக் கொண்டான். நாலுகால் பாய்ச்சலில் நிற்கிற தோற்றத்தில் இருந்த குதிரை கூலிக் கூடைக்குள் ஏறுமா?

"தீபாவளிக்கு இன்னும் ஒரு வாரம்தான் இருக்கு! பசங்களுக்கு சட்டைத் தைக்கணும், நிஜார் தைக்கணும், பாவாடை தைக்கணும், இதெல்லாம் எப்போ தைக்கிறது... முதல்லே எதைத் தைக்கப் போகிறீர்கள்?"

"உன் வாயை!"

மூவரும் போர்ட் ஸ்டேஷனை நோக்கி நடந்தனர். மூவர் மனமும் மூன்று கிளைகளில் பிரிந்தன. மனித குறை வேறுபாடுகளில் அவரவர் இயல்புகளே வெவ்வேறாயிற்றே? நினைவுள் மட்டும் கூடி ஒரே திசையில், ஒரே லட்சியத்தில் செல்லுமா? அவரவர் கவலை அவரவருக்கு; நடந்தது, நடக்கப்போவது, நடக்கவேண்டியது என்ற பாகுபாட்டில் நினைவை ஐக்கியப்படுத்தியபடி அவர்கள் நடந்தனர்.

மாலதியின் கணவனைப் பற்றிய வரை அதிகமான சிடுக்குகள் கொண்ட பிரச்னைகளைத் தழுவிய நினைவுகள் அப்போதைக்கு இல்லை. கடைத்தெருவுக்கு வந்தபோது பர்ஸில் எவ்வளவு பணம் இருந்தது, இப்போது மீதி எவ்வளவு இருக்கலாம் என்ற கணக்குள் விழுந்துவிட்டது மனம். மனசுக்குத் தோன்றிய ஒரு உத்தேசமான மீதித் தொகைக்குத் தக்கபடி செலவுகள் சரியா யிருக்கின்றனவா என்று கூட்டுப் புள்ளிகளைத் துரத்திக்கொண்டிருந்தது அது.

மாலதியின் மன அரங்கம்தான் காட்சிகளுக்கு நிறைய இடம் தருகின்ற விசாலமான அரங்கமா யிருந்தது. அவள் நினைவு முதலில் முத்து சுமந்து வந்துகொண்டிருந்த தோல் பெட்டிக்குள் புகுந்து புறப்பட்டது. அதில் தான் அவள் தனக்குத் தீபாவளிக்கு வாங்கிய ஆரணி பட்டுச் சேலையை அடக்கம் செய்திருந்தாள். அந்த 'ஸெலக்ஷன்' சரியா யிருக்குமா? தன் உடலுக்கு அது மாட்ச் ஆகுமா? ... ஒரு வேளை அந்த 'பட்டர் ப்ளை' நிறச்சேலை சரியாயிருக்குமோ? தவறிப் போய் இந்த மேகவர்ணச் சேலையைப் பொறுக்கிவிட்டோமோ?... இப்படி எண்ணும்போது அவள் கன்னங்கள் நிறம் மாறின. அவளையே அவள் கணவன் 'பட்டர்ப்ளை' என்று பல தடவைகளில் இன்ப மிகுதியால் ஒப்புவமையோடு கூப்பிட்டிருக்கிறான். தானே அந்த 'பட்டர் ப்ளை' யாயிருக்கும்போது தன்மேல் அந்த நிறச் சேலையும் படிந்தால்...

தொடர்ந்து அவள் மனம் வண்ணங்களில் தோய்ந்த எண்ணத்தில் மிதந்தது. சைனபஜாரைத் தாண்டி எதிர்ச் சாரிக்குப் போகிற இடத்தில் மூவரும் சற்று நின்றனர்.

ஜனத்திரள் அவர்களை மூடி மூடிச் சென்று கொண்டிருந்தது. புண்ணிய

காலங்களில் கடற்கரையில் மூழ்கி மூழ்கித் திணறி எழுபவர்களைப் போல அவர்கள் சற்றைக் கொருமுறைதான் கூட்டத்தினிடையே தெளிவாகத் தெரிந்தனர். கூக்குரல்களும் சிரிப்பொலியும் விற்பனைக் குரல்களும் நினைவுகளைப் பின்னணிக்குத் தள்ளி மெய் மறக்கச் செய்யும் பேரிரைச்சல்களாயிருந்தன.

முத்துவின் மனத்திலும் சிந்தனை ஓடியது. அவர் கொடுக்கப் போகிற நாலரையணு எந்த ரூபத்தில் தன் கைகளில் விழும் என்பது அவனது முதல் பிரச்னை? ஒரு முழு நாலணு நாணயமும், அரையணுவுமா? அது பழைய காலமாகிக் கொண்டு வருகிறது. இப்பொழுதெல்லாமே நயா பைசாக்களைத் தானே இந்தப் புண்ணியவான்கள் கொடுக்கிருர்கள்? கிடைக்கிற காசு எந்த ரூபத்தில் கிடைக்கிறதோ அதற்குத் தக்கபடி செலவை ஆரம்பிப்பான் முத்து. முத்துவுக்கு ஒவ்வொரு நயா பைசாவும் ஒரு முத்து. அதில் அடைகிற நஷ்டம் வயிற்றுக்கு வந்து சேருகிற கஷ்டமாக முடியும்.

தீபாவளி நெருங்கி விட்டதே? இந்தக் கூலியில் கொஞ்சம் மிச்சம் பிடித்து நாளைக்கூலியின் மிச்சத்தோடு சேர்த்து ...ஒரு பட்டாசுக் கட்டு எவ்வளவு ஆகும்?... ஒரு சின்னப் புதுத்துண்டும் வாங்க வேண்டுமே...

முந்நூறு ரூபாய் புடவையின் வண்ண பேதங்களைப் பற்றிய திருப்தியற்ற நினைவலைகளும், நாலரையணுவில் மிச்சம் பிடிப்பதில் என்னென்ன வாங்க முடியும் என்ற மதிப்பீடே போடத் தெரியாத சக்தியற்ற நினைவலைகளும், இன்னும் கோடானு கோடியான விசித்திரமான எண்ண அலைகளும் அந்த வெளியில் கலந்து கூடின. இந்த நினைவலைகள் கூடிய பரந்த வான்வெள்ளம் குழப்பத்தில் மூழ்கியது. நினைவலைகளைத் தோற்றுவித்துக் கொண்டிருந்த மனிதர்களும் அங்குக் குழப்பம் உண்டு பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் குழப்பச் சூழ்நிலையில், "என்னுடா கோட்டை பிடிக்க யோசிச்சுகிட்டு இருக்கே? வழியை விட்டு அப்பாலே நில்லேண்டா!" என்ற குரல் கேட்டு உணர்வு பெற்று விழித்தான் முத்து. அவன் முன்னுல் இருந்தவர்களைக் காணும். கூட்டத்தில் யாரோ அப்படிச் சொல்லிக் கொண்டு போனுர் என்பதை உணர்ந்தான் முத்து. மாலதியையும் அவள் கணவனையும் அவன் கண்கள் தேடின. சைனு பஜாரைக் கடந்து எதிர்ச் சாரிக்குப் போயிருப்பார்களோ என்று விடுவிடென்று நடந்தான். அங்கேயும் அவர்களைக் காணவில்லை. கண்ணைப் பறிக்கும் வண்ணத்தில் சேலையுடுத்திச் சென்ற பெண்களையெல்லாம் அவன் கண்கள் ஆராய்ந்தன. நீலச் சராயும் வெள்ளை சட்டையணிந்த ஆண் இனத்தையும் நோட்டம் விட்டான். அவனிடம் கூலி பேசி அமர்த்திய ஆளையே காணவில்லை.

"எங்கே போயிருப்பாங்கா?"—தலையில் தூக்கிய குதிரையுடனும் கையில் பிடித்த தோல் பெட்டியுடனும் முத்து கரகம் ஆடுகிற பூசாரியைப் போல—ஆனுல்—மெள்ளத் தன்னைத்தானே சுற்றிக் கொண்டு அங்கே வரிசையாய்—சாரிசாரியாய்ப் போய்க் கொண்டிருந்த ஜனங்களிடையே தன்னைக் கூலிக்கு அமர்த்தியவர்களைத் தேடிக் கொண்டிருந்தான்.

மாலை வேளையே சைனு பஜார்ப் புறத்தில் மயக்கவேளை போலிருக்கும். இரவு வந்து விட்டால் கேட்க வேண்டுமா? வானத்தைத் துண்டு துண்டாக நறுக்கிக் கட்டிய மாதிரி நியான் விளக்குக் குழாய்களும் நெடுகிலும் தெரிந்தன.

முத்து அவர்களைத் தேடுகிற நம்பிக்கையை விட்டு விட்டு, போர்ட்டுக்கும் சைனு பஜாருக்கும் இடையில் ஓரிடத்தில் அந்தச் சாமான்களைத் தன் முன்னுல் வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டான். அவர்கள் தன்னை எங்கே தேடுகிருர்களோ, அவர்களை எப்படியாவது கண்டுபிடிக்க முடியுமா, என்றெல்லாம் அவன் மனத்தில் முதலில் எழுந்த கேள்விகள் சிறிது நேரத்தில் மிக அற்பமானவை ஆயின. ஒரு பெருங் கேள்வி அவற்றை அடித்துப் போட்டு விட்டது; அந்தக் கேள்வி...?

ஆமாம்; நாலரையணுக் கூலிக்கு என்ன வழி?

அதிலிருந்து இன்னொரு நினைவு கிளை பிரிந்து கொண்டு போயிற்று. முதலுக்கே மோசம் போய் விட்ட நிலையில் சோற்றுக்கு என்ன வழி? அதன் பிறகல்லவா அந்தத் தீபாவளிச் சின்னங்கள்! அவன் நினைவில் அடிக்கடி வருகிற வெடிகள் வெளியுலகை வெடித்துப் பிளந்து கொண்டிருக்கின்றனவே? அவன் காசு சேர்த்து வெடி வாங்குகிறவரையில் கடைகளில் வெடிகள் மிஞ்சுமா?

அந்த ரீதியில் நினைவு செல்லச்செல்ல விரைவில் கூலியைப் பெற வேண்டும் என்ற எண்ணம் பெரியதாய் வளர்ந்தது. அவன் மனத்தில் இன்னொரு எண்ணமும் பளிச்சிட்டது.

ஒருவேளை அவர்கள் போர்ட் ஸ்டேஷனுக்குச் சென்று காத்துக் கொண்டிருப்பார்களோ என்ற சந்தேகம் எழுந்ததும் அவன் எழுந்தான். பாயும் நிலையில் நின்ற மரக்குதிரையை தலையில் தூக்கிவைத்துக் கொண்டு அவன் பாய்ந்தான். கையில் அந்தப் பெட்டியையும் பிடித்துக்கொண்டு அவனால் ஓட முடியவில்லைதான். ஆனாலும் அதோ கொள்ளை போகிறாற்போல் அடிக்கடி ஓடி வருகிற மின்சார வண்டிகள் ஒன்றில் அவர்கள் ஏறிப் போய் விட்டால்?

வேகமாக ஓடினான் முத்து.

"டாய் நில்லுடா!"

அதிர்ந்த முயல் திகைத்து ஒடுங்கி நிற்பது போல் நின்றான் முத்து.

அவன் தொழிலில் பங்காளியான ஒரு ஆள் தலையில் கவிழ்த்த கூடையுடன் வந்து கொண்டிருந்தான். கோட்டை ஸ்டேஷனுக்கு யாருக்கோ கூலியாகச் சென்று திரும்பி வருகிறான் அந்த ஆள் என்பதைத் தொழில் ரீதியான அநுபவத்தில் தெரிந்து கொண்டான் முத்து. ஆனால் பெரிய வட்டாரத்து ஆள் அவன். சம்பாத்தியத்தில் ரூபாய் நோட்டுக்கள் எல்லாம் கூட அவனிடம் புரளும் என்று 'மதிப்பு'ம் போட்டு வைத்திருந்தான் முத்து. சைனா பஜாரிலோ கொத்தவால்சாவடியிலோ தன்னைத் திரும்பிக் கூட பார்க்க மாட்டானே, இந்த 'சிமான்'! இப்போது ஏன் தன்னைக் கூப்பிடுகிறான் என்று நினைத்து, நின்றான் முத்து.

"இது என்னடா இது?"

"கிராக்கி, வாத்தியாரே!"

"என்னடா கிராக்கி? கதை பண்றே? உடமைக்காரங்க எங்கேடா?"

"கும்பல்லே மறைஞ்சுட்டாங்க, வாத்தியாரே! நானும் கவனம் இல்லாம வந்துகிட்டிருந்தேன்..."

"டேய்! உண்மையைச் சொல்லிடு. இதையெல்லாம் எங்கேயிருந்து கிளப்பினே?"

"என்னங்க இது? கிராக்கிங்கன்னு..."

அவன் அந்த முரட்டு ஆளின் முன்னால் ஆட்டுக் குட்டிபோல் நின்றான். அவனிடம் எல்லா விவரங்களையும் சொன்னான். முழுவதையும் கேட்ட பிறகு அந்த ஆள் கேட்டான்;

"ஏண்டா, டேய்! கூலி பேசினவங்க மறைஞ்சுட்டாங்களா? இல்லே, நீ கறுக்கா கும்பல்லே பூந்து அப்பாலே வந்து வேறே வழியிலே ஓடறியா?...... யேய்! எங்கடா ஓடறே? மூர் மார்க்கெட்டுக்குத்தானே?"

"அவுங்க அங்கே போறதா சொல்லலே, வாத்தியாரே!"

"அட சீ! உம் பாடத்தையே படிக்கிறயே, கழுதை!......நடடா, மூர் மார்க்கெட்டுக்கு! நானும் வர்ரேன். இந்தக் குருதை, அந்தப் பெட்டி, பெட்டியிலே இருக்கிற புடவை எல்லாத்தையும் பணமாக்கலாம்டா! கூறு கெட்டவனே! கை நிறையக் கிடைக்கும்! ஒரு முழு ரூபாயா உனக்குத் தர்றேன்! நட..."

சிறிது யோசித்து விட்டு நடக்கத் தொடங்கினான் முத்து. ஒரு பர்லாங்கு தூரம் வரை அவர்கள் நடந்திருப்பார்கள். ஒரு போலீஸ்காரர் எதிர்ப்பட்டதை ஜாக்கிரதையாகக் கவனித்தான் முத்து; திடீரென்று வாயில் விரல் வைத்து ஒரு விஸில் அடித்தான். திரும்பிப் பார்த்த போலீஸ்காரரை ஜாடை காட்டி அழைத்தான். 'வாத்தியார்' ஓட முயன்றார்; ஆனால், எளிதில் பிடிபட்டார். 'வாத்தியா'ரிடம் படித்த பாடம் முழுவதையும் போலீஸ்காரரிடமும் படித்தான் முத்து. ஆனாலும், முத்துவின் பேரில் முழு நம்பிக்கை ஏற்படவில்லை போலீஸ்காரருக்கு.

"அந்த ஐயா இந்த சாமான்களையெல்லாம் எந்தக் கடையிலே வாங்கினார்னு அடையாளம் காட்ட முடியுமாடா?"

"கடையைக் காட்ட முடியுமுங்க. ஆனல், ஐயா அங்கேதான் சாமான் வாங்கினர்னு நிச்சயமாச் சொல்ல முடியாதுங்க. கூலி பேசின இடமுங்க அந்தக் கடைவாசல்!"

"சரி நட!" என்ருர் போலீஸ்காரர். முத்து நடக்கத் தொடங்கினன்.

"நீயும் நட ஐயா, பெரிய ஆளு!"

அவனும் நடந்தான்.

* * *

முத்துவை மாலதியும் அவன் கணவனும் முதலில் சந்தித்த இடத்துக்குப் போலீஸ்காரரும் முத்துவும் கூலிக்கார 'வாத்தியா'ரும் வந்தபோது அங்கிருந்த கடை வாசலில் ஒரு அதிசயம் காத்திருந்தது.

"இதோ! இதோ,வரானே திருடன்! ஆள் எத்தனூண்டு! இப்படி நழுவியிருக்கானே.........நல்ல வேளை, அதோ பின்னலேயே போலீஸ்காரர் வருகிருர்...அட! அவரே இவனை நெட்டிக் கொண்டு வருகிருரே!" என்று வியந்து மகிழ்ந்து கூத்தாடாத குறையாய்க் குழந்தை போல் கத்தினள் மாலதி. அவள் கணவன் மௌனமாக நின்றிருந்தான்.

"இதோ நிக்கிருருங்களே, இந்த ஐயாதான்! என்ன ஸார், கும்பல்லே மறைஞ்சுட்டியே! நான் எங்கெல்லாம் சுத்தி..." என்று முத்து ஆரம்பித்தான், மாலதியின் கணவனைப் பார்த்ததும்.

"மறைஞ்சுட்டோமா? சொல்வேடா! திருட்டு நாயே! முதல்லே இப்படிக் கொடுடா பெட்டியை! இதிலே புடவை இருக்கா, இல்லே, எடுத்து அரை காலுக்கு வித்துத் தொலேச்சுட்டியா?" என்ருள் மாலதி.

"மாலதி, பொறு! அவசரப் படாதே!" என்று கையமர்த்தினன் அவள் கணவன்.

"அம்மா சொல்றதும் வாஸ்தவமாயிருக்குங்க. இந்தத் திருட்டு நாயிங்க கூலின்னு வர்றது; பாதிப் பேர்தான் யோக்கியமா யிருப்பானுங்க. பாதிப் பேர் பின்னலே வர்ற மாதிரி கொஞ்ச தூரம் வந்து 'கபால்'னு ஒரு சந்திலே மறைஞ்சிடுவாங்க...இதிலே எனக்கும் ஒண்ணும் புரியலே. பையன் யோக்கியன் மாதிரிதான் ஆரம்பம் முதல் பேசி வர்ருன்" என்ருர் போலீஸ்காரர்.

"வாஸ்தவம், கான்ஸ்டபிள்! இதிலே வந்த வினை பூரா இதோ இவளாலேதான் வந்தது!" என்று மாலதியைச் சுட்டிக் காண்பித்தான் அவள் கணவன்.

"சாமான்கள் வாங்கி முடிந்த பிறகும் இவளுக்குக் கடைகள் பூராவிலும் தென்படுகிற புடவைகளையும் நகைகளையும் விளையாட்டுச் சாமான்களையும் விட்டு விட்டு வீடு திரும்ப மனமில்லாமல் கண்ணேட்டத்தைக் கடைகள்மீது விட்டபடியே நடந்திருக்கிருள். நடுவில் நடுவில் ஏதாவதொரு கடையில் நுழைந்து எதையாவது விலே விசாரித்துக் கொண்டிருந்தாள். இவளைப் பின்தொடர்ந்து வருவது எனக்கே மிகவும் கஷ்டமாகப்போய், நானே ஒரு இடத்தில் பிரிந்து வெகு நேரம் தேடிய பிறகு கண்டு பிடித்தேன். பாவம், அந்தக் கூலிக்காரக் குழந்தையைப் போய்த் 'திருடன், குருடன்' என்பதில் என்ன அர்த்தம்? நல்ல வேளை, கிளம்பிய இடத்தின் அடையாளத்தை வைத்துக் கொண்டு இவன் வருகிருனு பார்ப்போம் என்ற எண்ணத்தில் இங்கே வந்தேன். என் சாமான்கள் கிடைத்து விட்டன!" என்ருன் அவன்.

போலீஸ்காரர் ஒரு புன்னகையுடன் நகர்ந்தார். போகும்போது அந்தக் கூலிக்கார 'வாத்தியா'ரையும் அழைத்துக் கொண்டுபோய், சற்று எட்டி நின்று "நல்ல பசங்களுக்கு மூர்மார்க்கெட் வழியைக் காட்டாதேடா, கபோதி!" என்று ஒரு அறை கொடுத்து அனுப்பினர்.

மாலதியின் கணவன் முத்துவிடம் திரும்பி, "உன் பேர் என்னப்பா?" என்ருன்.

"முத்துங்க."

"முத்து! நல்ல பெயர்...இந்தா, இதை வச்சுக்கிட்டு தீபாவளியை ஜோராக் கொண்டாடு!" என்று ஒரு பத்து ரூபாய் நோட்டை நீட்டினன்.

அது எவ்வளவு என்பதே தெரியாத முத்து அவனைக் கையெடுத்துக் கும்பிட்டான். மனத்தை மனம் கொண்டு அளந்து அறிந்த மாலதியின் கணவன் அவனை நன்றியுடன் நோக்கினன்.

முத்துவுக்கு அந்த ஆண்டின் தீபாவளியின் போதுதான் அதன் இன்பம் தெரிந்தது. அவனுக்கு அது முதல் பண்டிகை மட்டுமல்ல; மகத்தான பண்டிகையும் கூட! ★

“ இதென்ன, வேடிக்கை ! உங்க வேஷ்டியை உடுத்துக் கொள்ளச் சொல்லித் தறேள்? ”

“ என் வேஷ்டியா? புது பாஷனுகை வாங்கித் தரச் சொன்னியே! அந்த வெள்ளைப் புடவைதான் இது !”

டாக்டர் : “ இப்ப வெடிச்சது. ஊசி வெடிதானே! எப்படி கரெக்டாக சொல்லி விட்டேன் பார்த்தியா ?

சிறுவன் : “உன் காதில் இடி விழ!க் இது எலக்ட்ரிக் ரஷ்யன் அணு குண்டு வெடி ஸார் ! ”

“பத்து சாமானைத் தூக்கிண்டு வர முடியல்லேங்கிறேளே, வெட்கமா யில்லே? என் ‘ஹாண்ட் பாக்’கில் இருக்கும் ஆயிரம் ரூபாய் கத்தைகளை என்னுல் தூக்க முடியல்லே! ஏதாவது கடையில் நுழைந்து...”

பலூன் வியாபாரியின் மகன்: “எங்கப்பா, பட்டாசு வாங்கித் தர மாட்டேன்னுட்டாருடா! அதான் பலூனையே பட்டாசு மாதிரி உடைச்சு வைக்கிறேன் !”

வேதாந்த விளக்கம்

1 பெரியோர் தரிசனம்

ஜெயன்

உள்ளத்தால் உயர்ந்தோரையே அவர் தம் பண்புக் கேற்ப சாதுக்கள் என்றும், ஞானிகள் என்றும், மகான்கள் என்றும் குறித்தனர் ஆன்றோர். ஆன்றோர் குறித்த அத்தகைய பெரியோர்களுக்கு அந்தக் காலங்களில் நல்ல மதிப்பு இருந்து வந்திருக்கின்றது. முடியுடை வேந்தரும், குடிபடை மாந்தரும் அப்பெரியோர்களின் தரிசனத்திற்காகப் பெருந்தவம் இருந்திருக்கின்ற செய்திகளும் அறியக் கிடக்கின்றன. இன்றையத் தினம் அந்நிலை முற்றிலும் மாறுபட்டிருக்கின்றதென்று கூறுவதற்கில்லை யென்றாலும், பெரும்பாலும் மாறுபட்டே யிருக்கிறதென்று உறுதியாகக் கூறலாம். உள்ளொன்று வைத்துப் புறமொன்றாகத் திரித்தும், விரித்தும், இரு பொருள் படவும் பேசித் திரியும் சொல்வல்லுனர்களுக்கும், ராஜதந்திரிகளுக்கும், செல்வந்தர்களுக்குமே இன்றையத்தினம் நாட்டிலே ஒருவிதமான மதிப்பும், செல்வாக்கும் கிடைத்து வருகின்றதெனலாம். மக்கள் இத்தகையோரின் தரிசனத்திற்கும் தயவிற்கும் ஏங்கி நிற்கவேண்டிய நிலை பிறந்திருக்கிறது.

ஆடை அணிமணிகளை வைத்து மனிதனை மதிக்கின்ற காலமாகிவிட்டது. தீயவனும் தூய உடைகளைப் போர்த்திக் கொண்டு திரிகிறான். நல்லது கெட்டதைப் புரிந்து கொள்வது அரிதாகிக் கொண்டே வருகிறது.

''நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க
நல்லோர் சொற் கேட்பதுவும் நன்றே'

என்ற இனிய பாடல்களையெல்லாம் பரீட்சைக்காகப் படிப்பதும், படித்த பின்னர் அப்பாடல்களைப் படைத்தோரைப் பாராட்டிப் பேசுவதில் தனக்குப் பெருமை தேடிக் கொள்வதுமாக இருக்கின்றனரே யன்றி, அப்பாடல்களின் கருத்துக்களை ஏற்று தம்

வாழ்க்கையில் மேற்கொள்வார் தொகை அதிகம் இல்லை. உண்மையில் 'பெரியோர்' என்று குறிக்கத் தக்க இலக்கணத்திற்கு இலக்கானேரைக் காண்பதே அரிதாகிவிட்டது. அதனால் தானே என்னவோ, பெரியோர்களின் தரிசனத்தால் கிடைக்கக் கூடிய பெரும்பயனையும் அனுபவிக்கவோ உணரவோ முடியாமலே போகிறது.

பெரியோர் தரிசனத்தால் கிடைக்கும் மாபெரும் பயனை விளக்கும் பொருட்டு, ராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறிய உப கதைகளில் ஒன்றைக் கீழே தருகிறேன் :

ஒரு நாள் நாரதமுனி மகாவிஷ்ணுவிடம் சென்று, "மகாதேவா! பெரியோர் தரிசனத்தால் கிடைக்கும் பலன் என்ன? மொழிந்தருள வேண்டும்" என இறைஞ்சினர்.

இறைவன் மனமிறங்கி, உலகில் தண்டாரண்யத்தில் வசிக்கும் 'இரத்த மண்டரி' என்னும் ஜந்துவிடம் போய் வினவி, விடையறிந்து கொள்ளும்படி ஏவினர்.

முனிவர் அந்த 'இரத்தமண்டரி' யின் முன்வந்து நின்று தன் வினவை மொழிந்தார். அவருடைய சொற்கள் அதன் செவிகளில் விழுந்த மாத்திரத்தில், அது மடிந்தே போயிற்று. வியப்புக்குள்ளான முனிபுங்கவர் ஒன்றும் புரியாதவராய், மீண்டும் பரமாத்மாவிடம் வந்தார். நடந்ததை விவரித்து, தனது வினவிற்கு விடையிறுக்குமாறு வேண்டி நின்றார்.

இறைவன் அதற்கு, பூவுலகில் ஒரு பட்டினத்தில் அன்றுதான் பசுவின் கருவிலிருந்து வெளிப்பட்டிருந்த கன்றினிடம் போய்க்கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு திருவாய் மலர்ந்தார். நாரதரும் அவ்வாணையைச் சிரமேற்கொண்டு அந்தக் கன்றின் முன் தோன்றியவாறே தன் வினவை எழுப்பினர். மறுகணத்தில் 'இரத்த மண்டரிக்கு' ஏற்பட்ட கதியே அந்தக் கன்றுக்கும் ஏற்பட்டுவிட்டது. பச்சிளங்கன்று தன் தரிசனத்தால் மாண்டுபோனது கண்டு, முனிபுங்கவர், வியப்போடு பெரும் வேதனையுங் கொண்டார். என்றாலும் மனந்தளராதவராய் தசாவதாரனிடம் விரைந்தார். நடந்தவற்றைக் கூறி, தனது வினவிற்கு விடை கூறியருளப் பிரார்த்தித்து நின்றார்.

திருமால் முகமலர்ந்து, நாரதரைப் புன்னகையுடன் தழுவினர்; மதுரை மாநகருக்குச் சென்று, அங்கே ஒரு அந்தணனுக்கு அன்றுதான் மகவாய் அவதரித்திருந்த பச்சிளம் பாலகனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு கூறியருளினர். (இம்முறை நாரதர் முன்னெச்சரிக்கையாக 'இரத்தமண்டரி'க்கும் கன்றுக்கும் நேர்ந்த கதி இந்தப் பாலகனுக்கும் நேர்ந்து விடாதிருக்க முகுந்தனிடம் உறுதி கேட்டுக் கொண்டார்.) குறிப்பிட்ட அந்த மதுரை அந்தணன் மைந்தன் முன்வந்து நின்றார் நாரதர். வினவை மொழிந்தார். குழந்தை இறந்துவிடவில்லை. மகிழ்ச்சிப் பெருக்கில் ஆரவாரித்தது. அதுமட்டுமா? 'பெரியோர் தரிசனத்தால் கிடைக்கும் பலன் என்ன?' என்ற வார்த்தைகள் அதன் செவிகளிற்புகுந்த மாத்திரத்தில் வாய்திறவா அம்மழலைச்செல்வம் வாய் திறந்து அழகுறப் பேசவும் தொடங்கி விட்டது.

"நான்தான் தண்டாரண்யத்தில் நாள்தோறும் நூற்றுக்கணக்கான உயிர்ப் பிராணிகளின் இரத்தத்தைக் குடித்து ஜீவித்து வந்த 'இரத்த மண்டரி'. அன்று தங்கள் தரிசனத்தின் பயனாக, இடையிலே எடுக்கவேண்டிய எண்ணிலாப் பிறவிகள் நீங்கப் பெற்று, ஆவின் வயிற்றிலுதிக்க அருள் பெற்றேன். அங்கேயும் தங்கள் திவ்விய தரிசனம் கிடைக்கப்பெற்று, பிறப்பதற்கரிய மானிடப் பிறவியிலும் வேதியர் குலத்தில் தோன்றும் பாக்கியமும் பெற்றேன். இன்று தங்கள் தரிசனத்தால் எனது வாய்க்கட்டு அவிழ்க்கப்பட்டதோடு, சாமானிய மானிடர்க்குக் கிட்டாத 'பழம் பிறப்பறியும் உணர்ச்சி'யையும் பெறலானேன், சுவாமி!" என்று முடித்துக் கரங்குவித்தது அச் சிசு.

நாரதரும், மன உவகை பொங்க மகவை வாழ்த்தி, மாதவனை மனதால் வழுத்தி அவ்விடம்விட்டு அகன்றார்!

பொருளாதாரத்தில்.... தேனும் வேண்டும்

டாக்டர்
பா. நடராஜன்

• சென்ற கட்டுரையில் சேமிப்பே செல்வப் பெருக்குக்கு அடிப்படை என்பதைக் கண்டோம். சேமிப்பு, தனியார் சேமிப்பு என்றும்,நிலையச் சேமிப்பு என்றும் இரு கூறுபடும் என்பதையும், சோஷலிச சமுதாய இலட்சியத்தில் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கு நிலையச் சேமிப்பு விரிவடைய வேண்டும் என்பதையும், அவ்வாறு விரிவடைய அரசாங்கம் அடிப்படையான, இன்ஷூரன்ஸ் போன்ற, சில சேமிப்பு நிலையங்களைத் தேசியமாக்குவது இன்றியமையாததாகி விட்டது என்பதையும் கண்டோம். ஆயினும், இறுதியில் மக்கள் தாம் உற்பத்தி செய்வதை எல்லாம் தாமே உண்டு, உபயோகித்து முடித்து விடாமல், ஒரு பகுதியை வருங்கால சந்ததிக்காக ஒதுக்கிவைக்க முன் வந்தால் அல்லாது, தனியார் சேமிப்போ, நிலையச் சேமிப்போ ஒன்று கூடாது என்பதையும் உணர்ந்தோம்.

சமுதாயத் தேன் கூடுகள் !

அலரும் பனி மலர்களிலே நறுந் தேன் துளிர்க்கின்றது. அந்தத் தேனை இசைபாடும் வண்டுகள் ஒன்று கூட்டுகின்றன. பொருளாதார உலகிலே சேமிப்பாகிய தேனை ஒன்று கூட்டும் வண்டுகள் பாங்குகள் எனப்படும் நிலையங்களே. **ஒவ்வொரு பாங்கும் ஒருபொருளதாரத் தேன்கூடு.** ஒவ்வொரு பாங்கிலும் சேரும் 'டிப்பாசிட்' தொகையே பொருளாதார நறுந் தேன். எவ்வளவுக்கு எவ்வளவு இந்தத் தேனைக் கூட்டி, வடித்து பாங்குகள் தொழிலை நடத்தும் முன்பர்களுக்கு வழங்குகின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு நாட்டின் பொருளாதார முன்னேற்றமும் விரைவு பெறும்.

தேனைத் திரட்டுகிறவர்கள் வேறு ; அதனைப் பயன்படுத்துகிறவர்கள் வேறு. முன்னையோர் பாங்கர்கள் ; பின்னையோர் தொழில் நடத்துவோர். தொழில் வளர்ச்சி அரும்பத் தொடங்கிய காலத்தில், ஒரு தனி மனிதரே தேனைச் சேர்த்தவராகவும், சேர்த்த தேனைப் பயன்படுத்தி தொழிலைப் பெருக்கினவராகவும் இருந்ததுண்டு. தம்முடைய சிறு சொந்தச் சேமிப்பை முதலாக வைத்து, சிறிதளவில் தொழிலைத் தொடங்கி, காலப் போக்கில் அதில் வரும் இலாபத்தை அந்தத் தொழிலிலேயே போட்டு, தொழிலைப் பெருக்கின தொழில் முன்பர்கள் பலருண்டு. இன்றும் இது ஓரளவில் நடைபெற்றே வருகிறது. இதுதான் முதலாளித் தத்துவத்தின் விடியற் காலம்.

தொழில் முன்பர்கள்

ஆனால் இன்றைய நாளில் விரைந்த பொருளாதார முன்னேற்றம் வேண்டுகையில், பெருத்த அளவில் தொழில்களை நடத்தவேண்டும் ; பெருத்த அளவில் அதற்கு முதலும் வேண்டும். தொழில்களைச் சிந்தனையிற் கண்டு, உரிய திட்டம் வகுத்து, வேண்டிய அமைப்பைக் கோலி, தொடங்கி, நடத்துவதற்குத் தனியான நிபுணத்துவம் வேண்டும். இவர்களே **தொழில் முன்பர்கள்** எனப்படுவார்கள். இவர்கள் கையில் பெருந்தொழில் தொடங்கி நடத்துவதற்கு வேண்டும் பொருள் சொந்தமாக இராது. முதலில் ஒரு பகுதியைச் சாதாரண மக்களின் சேமிப்பிலிருந்து பங்குத் தொகையாகப் பெற முடியும். பெரும்பகுதியான தொகை பாங்குகளிடமிருந்து தான் வருதல் வேண்டும்.

தொழில்களும், முதலும்

பாங்குகளுக்கோ என்றால் குறைந்த கால அளவுக்குத்தான் கடன் கொடுக்க இயலும். டிப்பாசிட்டர்கள், பணத்தைத் திரும்பக் கேட்கும் பொழுது, தயங்காமல் திருப்பிக் கொடுக்கும் நிலையில் பாங்குகள் இருக்க

வேண்டும். இல்லையேல், நம்பிக்கை இழக்க, பாங்கு முறிந்துவிடும், தொழில் நடத்துவதற்கோ நீண்ட காலக் கடன் வேண்டும். நினைத்த போது திரும்பக் கொடுக்கும் நிலையில் உள்ளது அல்ல, தொழிலில் போடும் முதல். இயந்திரங்களையும் கேட்ட போது காசாக மாற்றிவிட இயலாது; பல மாதங்களுக்கு உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருள்களைத் தொடர்ந்து சேர்த்து வைத்தாக வேண்டும். பல வழிகளிலும் நீண்ட காலத்துக்குப் பணம் முடங்கிக் கிடக்க வேண்டியதாயிருக்கிறது.

சாதாரண பாங்குகள்—இவற்றை 'வியாபார பாங்குகள்' என்று சொல்லப்படும்—இவ்வளவு நீண்டகால கடனுக்குப் பொருத்தமானவை அல்ல. தொழில் வளர்ச்சிக்கு, நீண்டகாலக் கடன் உதவும் ஆற்றல் வாய்ந்த, தனித் தொழில் பாங்குகள் அல்லது நிலையங்கள் வேண்டும். இம்மாதிரியாக, தொழில் வளர்ச்சிக்குக் கடன் உதவும் முறை ஐரோப்பாவில் ஜெர்மனி முதலிய தேசங்களின் பாங்கு அமைப்பில் சிறந்திருக்கிறது. ஆனால் பிரிட்டனில் இல்லை. பிரிட்டனில் தொழில் வளர்ச்சிக்கான நீண்டகாலக் கடன் உதவும் வகையில் வேறு ஏற்பாடுகள் இருக்கின்றன. இந்தியாவின் பாங்கு முறை பிரிட்டனின் பாங்கு முறையைப் பின்பற்றியது. ஆனால் பிரிட்டனில் இருக்கும் தொழில் வளர்ச்சிக்குக் கடன் உதவும் வேறு வசதிகள் இந்தியாவில் இல்லை. எனவே தொழில் வளர்ச்சிக்குரிய முதல் உதவும் தனி நிலையங்கள் இந்தியாவில் வருதல் வேண்டும். இது அரசாங்கத்தின் உதவியால் தான் ஆகும்.

நமது கடந்த காலத்தொழில் வளர்ச்சி—காரணங்கள்

அவ்வாறானால், சென்ற ஐம்பது, அறுபது ஆண்டுகளில் இந்தியாவில் பல பெருந் தொழில்கள் தோன்றி வளர்ந்திருக்கின்றனவே, அது எவ்வாறு? நூற்றுக்கணக்கான பஞ்சு ஆலைகள், நூற்பாலைகள், நெசவாலைகள், சணல் ஆலைகள், இரும்பாலை, சிமெண்டு ஆலைகள், சீனி ஆலைகள், தீக்குச்சி ஆலைகள், தோட்டத் தொழில்கள், சுரங்கத் தொழில்கள் என்றெல்லாம் தோன்றிவிட்டன. இவற்றைத் தொடங்குவதற்கும், நடத்துவதற்கும் எங்கிருந்து முதல் வந்தது?

இந்தியாவில், உலகத்தில் வேறெங்குமே காணாத, ஒரு புது அமைப்பு இந்தத் தொழில் வளர்ச்சித் துறையில் தோன்றியது. இதற்கு "மானேஜிங் ஏஜன்ஸி" என்று பெயர். ஆதியில் இது ஆங்கிலேய வியாபாரிகளால் அமைக்கப்பெற்றது. இந்தியாவின் வெளி நாட்டு வியாபாரத்தை நடத்தி வந்த ஆங்கிலேயக் கம்பெனிகளின் ஏஜண்டுகள் சிலர் ஒன்றுகூடி. மேலும் இந்தியாவின் கனிவளத்தையும், நிலவளத்தையும் பெருக்கி, மூலப் பொருள்களைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காகத் தனி ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். கனிவளத்தையும் நிலவளத்தையும் பெருக்கும் முயற்சியில், சுரங்கத் தொழிலிலும், தோட்டத் தொழிலிலும், அவர்கள் ஈடுபட வேண்டியதாயிற்று. இதற்கு வேண்டிய முதலை தங்கள் கையிலிருந்து போட்டும் தங்கள் நண்பர்களிடம் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்திப் பெற்றும், எஞ்சியதை வெளி நாட்டிலிருந்து கொண்டு வந்தும்—இவ்வாறாகத் தொழில் வளர்ச்சிக்குரிய மூலதனத்தைப் பெறத் தொடங்கினர். இப்படி சுரங்கத் தொழிலும், தோட்டத் தொழிலும், வங்காளத்தில் சணல் ஆலைத் தொழிலும் ஆதியில் ஆங்கிலேய மானேஜிங் ஏஜன்ஸி முறையால் தலையெடுத்தன.

இதைப் பார்த்த சில இந்தியச் செல்வர்களும்-சிறப்பாகப் பார்சிகளும், குஜராத்தியரும்-இந்த மானேஜிங் ஏஜன்ஸி முறையை அமைக்கத் தொடங்கினர். பணக்காரர்கள் ஒன்றிரண்டு பேர் ஒன்று சேர்வது, தங்கள் சொந்த முதலை ஓரளவில் போடுவது, நெருங்கிய உறவினர், நண்பர்களைச் சேர்த்துக் கொள்வது, ஒரு தொழிலைத் தொடங்குவது-என்ற அமைப்பு இந்தியர்களிடையிலும் வந்தது. தொடங்கின தொழிலை இலாபகரமாக நடத்திக் காட்டினதும், பொது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவே, மக்களும் பங்குகள் எடுக்கலானார்கள். பிறகு ஒரு தொழிலில் பெற்ற இலாபத்தையும் நல்ல பெயரையும் வைத்துக் கொண்டு இன்னுமொரு புதுத் தொழில்

தொடங்கலாயினர். இவற்றுக்கெல்லாம் தேசிய இயக்கம் பின்பலமாயிருந்தது. நல்ல பெயரைப் பெற்றுவிட்ட மானேஜிங் ஏஜன்ஸியார், கால அடைவில், சொன்னதெல்லாம் மக்களுக்கு வேதவாக்காகி விட்டது. அவர்கள் தொடங்கு முன்னே தொழிலுக்கு வேண்டிய முதல் பொது மக்களிடமிருந்தே பங்குத் தொகையாக வரலாயிற்று. தங்கள் சொந்த முதலைப் போடவேண்டிய நிலைகூட மறைந்துவிட்டது. இப்படியாக, பம்பாயிலும், அகமதாபாதிலும் பல நெசவாலைகளும், நூற்பாலைகளும் எழுந்தன. ஜாம்ஷட்பூரில் இந்தியாவின் முதல் இரும்பாலையும் இந்த வழியிலேயே ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே பிறந்தது.

'நல்ல பெயர்' ஊட்டிய நம்பிக்கை

நல்ல பெயருக்கு ஒரு தனி மதிப்பு உண்டு; பொது மக்களிடையே அளவற்ற நம்பிக்கையை பிறப்பித்து விடுகின்றது. டாட்டா மானேஜிங் ஏஜன்ஸியார் இரும்பு எஃகாலையைத் தொடங்க நினைத்த காலத்தில் ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாய் மூலதனம் வேண்டியிருந்தது. அந்தக் காலத்துக்கு இது பெரிய தொகை. உள் நாட்டில் இது எங்கு வரப்போகிறது என்று நினைத்து, அவர்கள் லண்டனிலிருந்து கடன் வாங்குவதற்கு ஏற்பாடு செய்தனர். ஆனல் அடிப்படையான இந்தத் தொழிலை இந்தியாவில் நடத்துவதற்கு லண்டன் முதல் மார்க்கட் முன் வரவில்லை. இறுதியில் சொந்த நாட்டு மக்களுக்கே டாட்டா கம்பெனியார் திரும்பவேண்டியதாயிற்று. மூன்றே வாரத்தில் ஒன்றரைக் கோடி ரூபாய் மூலதனம் இந்திய மக்களிடமிருந்தே வந்து குவிந்தது. காலையிலிருந்து மாலைவரை பம்பாயின் டாட்டா ஆபீசில் பங்குகளை வாங்க வந்த மக்களின கூட்டம் பெருகியது. இளையவரும் முதியவரும், ஏழைகளும் பணக்காரர்களும் தங்கள் தங்கள் பங்குத் தொகையைக் கட்டுவதற்கு மொய்த்துக் கொண்டனர். எண்ணுயிரம் இந்தியர்கள் வந்து பதினறு லட்சத்து, முப்பதினுயிரம் பவுன் பெறுமான முழு மூலதனத்தைக் கொடுத்து விட்டுப் போயினர். டாட்டா இரும்பு எஃகாலையைத்தொடங்க தம்பிடிக் காசு கூட வெளி நாட்டிலிருந்து வரவில்லை. இது போலவே சினி ஆலைத் தொழிலும், தக்க மானேஜிங் ஏஜன்ஸியார் இந்த தொழிலைத் தொடங்கினதால், அந்த நாளில் உலகிலேயே தொழில் மந்தமிருந்தும், தொழிலிலே முதல் போடுவதற்குத்தயக்கமிருந்தும், வேண்டிய பொருள் வந்து குவிந்தது.

மானேஜிங் ஏஜன்ஸி முறையின் தீமைகள்

ஆயினும், சென்ற சில ஆண்டுகளில் மானேஜிங் ஏஜன்ஸி முறையில் பல தீமைகள் வந்தடைந்துவிட்டன. ஒரு மானேஜிங் ஏஜன்ஸியாரே பல தொழில் ஆலைகளை மேற்பார்த்து வந்தனர்- ஆனல் எல்லாத் தொழில் ஆலைகளுக்கும் அவ்வப்போது வேண்டப்படும் தொழில் முதலை உதவும் ஆற்றலில்லாதவராகி விட்டனர். தாங்கள் நடத்திய தொழில்கள் நிர்வாக முறையில் ஒன்றையொன்று பின்னிக் கொண்டு கிடக்கவே, இலாபம் தரும் ஒரு தொழில் நிலையத்தின் முதலை இலாபந்தராத மற்ருெரு தொழிலுக்குப் பாய்ச்சலாயினர்; இறுதியில் இரண்டுமே நஷ்டமாயின. தாங்கள் தொடங்கும் எல்லாத் தொழில் கம்பெனிகளுக்கும் போதிய முதலை வேண்டியபோது தந்து உதவ வேண்டுமென்ற கட்டாயமோ, உடன்பாடோ மானேஜிங் ஏஜன்ஸி முறையிலுமில்லை. இதனல் பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டனவாயினும், பல தகுந்த முதலில்லாது திணறின.

தொழில்களைத் தொடங்குவது, முதல் போடுவது, நிர்வகித்து நடத்துவது ஆகிய முத்தொழிலையும் ஒரு மானேஜிங் ஏஜன்ஸி என்ற அமைப்பே நடத்தி வந்ததாலும் பல குறைபாடுகள் எழுந்தன. வாங்குவதில் கமிஷன், விற்பதில் கமிஷன் என்றெல்லாம் எடுத்துத் தங்கள் கையிலே வைத்துக் கொண்டனர். பங்குதாரர்களுக்குச் செல்ல வேண்டும் விகிதம் குறைந்தது. தொழிலில் போடவேண்டிய முதலைத் தாமே எடுத்து பருத்தி மார்க்கட்டில் சூதாட்டம் நடத்தினர் சிலர். இவர்கள் நஷ்டமடைந்த காலத்தில் இவர்கள் மேற்கொண்ட எல்லாத் தொழில்களுமே ஆட்டம் கொண்டன. தாங்கள் சொந்தமாகப் போட்ட முதலுக்கு

டிபெஞ்சர் கடன் பத்திரங்கள் ஏற்படுத்திக்கொண்டு, அவற்றிற்கு என்று தனி உரிமையும், தனிச் சலுகைகளும் வகுத்து, தொழில் கம்பெனிகளின் உரிமைகளில், சாதாரணப் பங்குதாரர்களுக்குப் பெயரளவிலே இடம் என்ற நிலைமையையும் ஏற்படுத்திக் கொண்டனர். புதிதாய் வந்த பல மானேஜிங் ஏஜன்ஸிகளுக்கு, தொடங்கும் தொழில்களைப் பற்றிய நுட்ப அறிவு எதுவுமே இல்லாதிருந்ததால், மூலப் பொருளை வாங்குவதிலும், முடிந்த பொருளை விற்பதிலும், கம்பெனி சட்டப்படி கணக்குகளை முடிப்பதிலும், பல குழப்பங்களும் குறைபாடுகளும் உண்டாயின.

தீமையைத் தீர்க்கச் சட்டம்

இவற்றை யெல்லாம் கண்டு,1956-ல் நிறைவேற்றின கம்பெனிச் சட்டத்தில் மானேஜிங் ஏஜன்ஸி முறைக்கு அரசாங்கத்தார் பல கட்டுப்பாடுகள் வகுத்தனர். பொதுமக்களை வஞ்சித்ததாகவோ தொழில்களைத் திறமையாக நடத்தத் தவறியதாகவோ ஏற்பட்டால், மானேஜிங் ஏஜன்ஸியாரை அகற்றவும், அவர்களுக்குத் தண்டனை அளிக்கவும் சட்டம் இடம் கண்டது.

ஒரு காலத்தில் இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கு, மானேஜிங் ஏஜன்ஸி முறை வாய்த்ததாக இருந்தது. காலம் மாறிவிட்டது. பொருளாதாரத் துறையில் பிற்போக்கிலிருக்கும் நமது நாட்டில், விரைந்த தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால், அந்தத் தொழில் வளர்ச்சியும் நாடு மேற்கொண்டுள்ள உயர்ந்த இலட்சியமான சோஷலிச சமுதாய அடிப்படையில் நடந்தேற வேண்டுமானால், அரசாங்கமே தொழில் துறையில் வேண்டப்படும் முதலின் பெரும்பகுதியையும் போடுவதற்கு முன்வருதல் வேண்டும். 1956-ல் நிறுவிய கம்பெனிச் சட்டத்திற்குப் பிறகு மானேஜிங் ஏஜன்ஸி முறையின் எண்ணிக்கையும், வேகமும் குறைவாயின. 1955-56-ல் தொடங்கப்பெற்ற பெரியவும் சிறியவுமான 1448 கம்பெனிகளில், 29 கம்பெனிகளே மானேஜிங் ஏஜன்ஸி முறைக்கு உட்படுவதாயின. அதற்கு முன்னும் கூட, அவர்களுடைய சொந்தப் பணமாக தொழில்களில் போட்டது நூற்றுக்குப் பதினைந்துதான். தொழிலைத் தொடங்குவதற்கு முன் வந்ததும், தொழிலில் முதல் வந்து பாய்வதற்கு நம்பிக்கை ஊட்டியதுமே அவர்கள் செய்த பெரிய வேலை. அது அரசாங்கமே செய்ததால் முக்கியமானதாய் விட்டது. இனிமேல் அரசாங்கம் முன் வரும்போது, இவர்கள் முக்கியத்துவமும் இயல்பிலேயே போய்விடும்.

அரசாங்கம் உதவ வழிகள்

தொழில் வளர்ச்சி கருதிய அரசாங்கம், தனியார் தொழிலுக்கு வேண்டும் முதலை உதவும் நெறியில் இரு முறைகளைக் கைக்கொள்ளலாம். தொழிலுக்கு வேண்டிய முதலை நீண்ட காலக் கடனாக உதவும் தனி அமைப்புகளை நிறுவுதல் ஒன்று. விவசாயத்துக்கு நில அடமான பாங்கு இருப்பது போல், தொழிலுக்கு இந்த அமைப்புகள் நீண்டகால கடன் வழங்கும் பாங்குகளாக உதவுகின்றன. தொழில் துறையில் விரைந்த முன்னேற்றம் கருதிய காலத்தில் ஜெர்மனியும், ஜப்பானும் இம்மாதிரியான தொழில் பாங்குகளை அரசாங்க ஆதரவில் நிறுவியே வெற்றி கண்டன. இந்தியாவிலும், சுதந்தரத்துக்குப் பிறகு, இந்திய பைனான்ஸ் கார்ப்பரேஷன் என்றும், ராஜ்ய பைனான்ஸ் கார்ப்பரேஷன் என்றும், மத்திய அரசாங்கத்தின் சார்பிலும், இராச்சிய அரசாங்கங்களின் சார்பிலும் தொழிலுக்கு நீண்ட காலக் கடன் உதவும் நிறுவனங்களாக அமைக்கப்பட்டுள்ளன. புதுத் தொழிலைத் தொடங்கவும், பழைய தொழில்கள் விரிவடையவும் இந்த நிறுவனங்கள் நீண்ட காலக் கடனைத் தகுந்த அளவுக்குக் கொடுத்து வருகின்றன. இன்று ஒரு கோடி ரூபாய் முதலில் ஒரு சிமெண்டு தொழிற்சாலை தொடங்க வேண்டுமானால், 25 லட்சம் ரூபாய் இராச்சிய பைனான்ஸ் கார்ப்பரேஷனும், 50 லட்சம் ரூபாய் இந்திய பைனான்ஸ் கார்ப்பரேஷனும் முன் பணமாகக் கொடுக்கிறது. மீதி 25 லட்சம் ரூபாயே தனியார் முதலாகப் போட வேண்டும். இதனால்தான் 1955-56-ல் தொடங்கப்பெற்ற ஒவ்வொரு கோடி ரூபாய் மூலதனம் கொண்ட 26 பெருங் கம்பெனிகளில், இரண்டு கம்பெனிகளே மானேஜிங் ஏஜன்ஸி முறைக்கு

உட்பட்டதாயிருந்தன. பெருமுதல் வேண்டப்படும் தொழில்களைத் தொடங்க அரசாங்கமே பொருளுதவத் தொடங்கியிருக்கிறது. ஆனல் இந்திய பைனன்ஸ் கார்ப்பரேஷனே இராச்சிய பைனன்ஸ் கார்ப்பரேஷனே மானேஜிங் ஏஜன்ஸி முறையில் தொடங்கப்படும் தொழில்கள் என்றும், கம்பெனி சட்ட முறையில் தொடங்கப்படும் தொழில்களென்றும், கூட்டுறவு முறையில் தொடங்கப்படும் தொழில்களென்றும் பாகுபாடு செய்வதில்லை. தனியார் முறையில் தொடங்கப்படும் தொழில்களுக்கெல்லாம் தக்கனவாயிருந்தால் கடன் தந்து உதவுகின்றன.

நீண்ட காலக் கடன் கொடுக்கும் நிறுவனங்கள் போக, தொழில் வளர்ச்சிக்கு நேரடியாகத் துணை புரியும் தனியான நிறுவனங்களும் சில நாடுகளில் அரசாங்க ஆதரவில் தோன்றியிருக்கின்றன. முன்னவற்றை பைனன்ஸ் (முதல்) கார்ப்பரேஷன் என்றும், பின்னவற்றை டெவலப்மென்று (வளர்ச்சி) கார்ப்பரேஷன் என்றும் சொல்வார்கள். தேச வளர்ச்சிக்கு இன்றியமையாததாக இருந்தும், தனியார் முதல் வந்தடைய தயக்கம் ஏற்படும் தொழில் துறைகளில் இந்த வளர்ச்சி நிறுவனங்கள் முன்வந்து, மூலதனத்தைக் கடனாக உதவுவதோடு தகுந்த அளவுக்குப் பங்குகள் வாங்கியும், தொழில் நுட்பம் அறிந்த பணியாளர்களைத் தெரிந்து கண்டு அமர்த்தியும், வேறு பல வகைகளில் பங்கு கொண்டு ஒத்துழைக்கின்றன. தென் அமெரிக்காவில், சிலி, மெக்ஸிகோ, வெனசுலா, பொலிவியா, பிரேசில், கொலம்பியா போன்ற இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இம்மாதிரியான தொழில் வளர்ச்சி நிறுவனங்கள் தனியாக அமைந்துள்ளன. இதுபற்றி மற்றொரு தருணம் விரிவாக எழுதுகிறேன்.

(வளரும்)

போன்: 55142

லோட்டஸ் சேமியா

இது விஞ்ஞான ரீதியில் சுத்தமாகச் செய்யப்பட்டது.

யாவரும் இதை உபயோகியுங்கள்!

கிடைக்குமிடம்:

லோட்டஸ் சேமியா கம்பெனி

31, G. A. ரோட்,

மதராஸ்-21.

3

சவடால் சண்முகம்

‘என்ன அண்ணாச்சி, நீங்க செய்றது நல்லாயிருக்குதா?’ என்று கேட்டார், பண்ணையார் பூவுலிங்கம் பிள்ளையின் கையைப் பிடித்து நிறுத்தியவர். ‘தம்பி, நீ விலகிப் போ. பண்ணையார்வாளிடம் உனக்கு ஏன் வம்பு?’ என்றார் அவர், ராஜாகிருஷ்ணனைப் பார்த்து, பிறகு, ‘என்ன விஷயம்? என்ன நடந்தது?’ என்று பண்ணையாரிடம் விசாரித்தார்.

இன்னும் படபடப்பு தணியாதிருந்த பண்ணையார் அவரை ஒரு தினுசாகப் பார்த்து, ‘எஹ்!’ என்று வெறுப்புடன் உறுமினார். ‘விஷயம் இன்னது என்று தெரியாமலே தானா, நீர் எனக்கு உபதேசிக்க வந்துவிட்டீர்! நான் செய்தது நல்லாயிருக்குதா என்று கேட்டீரே ஐயா சம்முகம் பிள்ளே, நீரு செய்வது எல்லாம் சரியாகவும் நல்லாகவும் இருக்குதா?’ என்றார்.

சண்முகம் பிள்ளை தன் கழுத்தைச் சுற்றி அங்க வஸ்திரமாகக் கிடந்த ‘ஸில்க் லேஞ்சி’யை இழுத்து விட்டுக் கொண்டார். அலட்சியமாகச் சிரித்தார். ‘விஷயம் எதுவானாலும், அண்ணாச்சி பண்ணைப் பிள்ளைவாள் ஒரு சின்னப் பையனை நடுத் தெருவிலே நிறுத்தி தன் கையாலேயே ஓங்கி அறைவது சுத்தமாக நல்லாயில்லை. அதுதான் நான் சொல்வேன்’ என்று சொல்லிவிட்டு மிடுக்காக அங்கும் இங்கும் பார்த்தார்.

‘இவனா சின்னப் பையன்? இவனா ஐயா சின்னப் பையன்! இவன் பெரிய வேலை செய்திருக்கிறான்! வேய், ரொம்பப் பெரிய வேலை’ என்று அலறினார் பண்ணையார்.

‘அண்ணாச்சி, எதையுமே நீங்க ஒரேயடியாகக் கொட்டித் தீர்த்து விடுகிறீர்கள். அது சரியல்ல.

★ வல்லிக்கண்ணன் ★

ரெண்டு. உங்களுக்கு ஏன் அப்படித் தோணுதுன்னு சொல்லுங்க.



பாயின்ட் பை பாயின்ட்டாகக் கவனிக்கணும். அப்படி அலசிப் பார்த்தால் தான் உண்மை 'பளிச்'னு புலப்படும். இப்பவே பாருங்களேன். இவன் பார்ப்பதற்கு சின்னப் பையன் மாதிரித் தோணுகிறான். இது பாயின்ட் ஒண்ணு. இவன் செய்திருப்பதோ பெரிய வேலை. அப்படின்னு நீங்க சொல்றீங்க. இது வந்து பாயின்ட்

அது மூணுவது பாயின்ட் ஆகும்.'

'மண்ணாங்கட்டி!' என்று சீறி விழுந்தார் பூவுலிங்கம் பிள்ளை. 'வே! சம்முகம் பிள்ளை, நீரு உம்ம சோலியைப் பார்த்துக்கிட்டுப் போமய்யா. இங்கே நின்னு எம் பிராணனை வாங்காதியும்' என்றார்.

சண்முகம் பிள்ளை பணிவுடன் கரம் கூப்பினார். 'அண்ணாச்சி கோபிப்பதன் அர்த்தமே எனக்குப் புரியவில்லை. நீங்க ஏன் கோபிக்கணும்?' என்றார்.

'அவாள் மகளைக் காணோம். வீட்டை விட்டு எங்கே போனாள், எப்படிப் போனாள், எப்போ போனாள் என்கிறது எதுவுமே தெரியலே. அப்படியிருக்கையிலே பண்ணையார்வாள் சிரித்துச் சிரித்துப் பேசமுடியுமா?' என்று கேட்டார் ஒரு பெரியவர்.

சண்முகம் பிள்ளை தன் தாடையை விரல்களால் தடவிக் களிப்புற்றார். 'ஓகோ, இது தான் பாயின்ட் நம்பர் மூணு? இதைச் சுலபமாகச் சொல்லியிருக்கலாம். அது சரி. அதுக்கு பண்ணைப் பிள்ளைவாள் இவனை அடிப்பானேன்?' என்று 'அடுத்த பாயின்ட்'டைக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் காட்டினார்.

பண்ணையாருக்கு ஆத்திரம் அதிகமாயிற்று. 'ஓய் சாஞ, இப்ப எனக்கு வாற கோபத்துக்கு உம்மையே பேய் மாதிரி அறை யணும் போலேயிருக்கிறது. மரி யாதையா இங்கேயிருந்து போய் விடும்' என்று எரிந்து விழுந்தார்.

'சாஞ' மோகன முறுவல் பூத்தார். 'அண்ணுச்சி, அப்புறம் சாவகாசமாக வந்து உங்களோடு பேசணும். எப்ப சௌகரியப் படும்?' என்று விசாரித்தார்.

பூவுலிங்கம் பிள்ளை அவரை ஒரு முறைப்பு முறைத்து விட்டு, வீட்டுக்குள் போய்விட்டார். சண்முகம் பிள்ளை தனது தலையைத் தடவிக்கொண்டு, 'உம். போகட்டும்' என்று முனங்கினர். ராஜாவைப் பார்த்தார். 'உம். உனக்கு இந்த ஊரு இல்லே. அது நிச்சயமாகப் புரியுது. ஆனலும் உன்னை அடிக்கடி பார்த்த மாதிரியும் தோணுது. குளத்தங்கரை ரஸ்தாவிலே பார்த்திருப்பேன். ஆமா, பண்ணையாருக்கு உன் மேலே என்ன கோபம்?' என்ருர்.

'வசந்தாவை நான் தான் கூட்டிக் கொண்டு போய் விட்டேனம். அவளை எங்கோ மறைத்து வைத்து விட்டு இங்கே வந்திருக்கிறேனம். அவர் சொல்கிருர்' என்று முணுமுணுத்தான் ராஜா.

'ஒரு சந்தேகம். வசந்தா என்கிறது யாரு?' என்று கேட்டார் சாஞ. சிலர் 'கொல்'லென்று சிரித்து விட்டார்கள்.

'விடிய விடிய ராமாயணம் கேட்டுவிட்டு, அப்புறம் சீதை யாரு என்று விசாரித்தானம் ஒரு பிரகஸ்பதி. அந்தக் கதையாகத் தானிருக்குது இதுவும்' என்று ஒருவன் கத்திஞன்.

சண்முகம் பிள்ளை, பட்டு லேஞ்சியை இரு கைகளாலும் இழுத்துப் பிடித்துக்கொண்டு, கூட்டத்தின் மீது கம்பீரமான ஒரு பார்வை வீசினர். பிரசங்கி மாதிரி, தொண்டையைக் கனைத்துக் கொண்டார். 'நம்மளவங்க கிட்டே உள்ள குறைபாடே இதுதான்...நம்மிடமுள்ள எத்தனையோ குறைபாடுகளில் இதுவும் ஒன்று என்று சொல்லணும்...எதையும் சரியாக எடுத்துச் சொல்லவும் தெரியாது; விஷயங்களை நன்ருகக் கிரகித்துக் கொள்ளணும்கிற ஆர்வமும் கிடையாது. 'திடுதிப்'புனு வசந்தா என்ருல், எப்படிப் புரியும்?...'

'பண்ணையார் மகள் தான் வசந்தா' என்று ஒருவன் சொன்னன்.

'ஓ, ஐ ஸீ!' என்று கூறிய சாஞ, மீண்டும் தன் தாடையை வருடுவதில் இன்பம் கண்டார். 'இந்தப் பாயின்டை முதலிலேயே சொல்லியிருக்கலாமே' என்ருர்.

'பண்ணையார் மகள் பேரு உங்களுக்குத் தெரியலேன்னு சொன்னல், அது யார் தவறு?' என்று ஒருவன் முனங்கிஞன்.

சண்முகம் பிள்ளை புன்னகை பூத்தார். 'இது சரியான பாயின்டே அல்ல. இதோ இவன் பேரு உமக்குத் தெரியுமா?' என்று ராஜாவைச் சுட்டியபடி, அந்த நபரிடம் கேள்வி போட்டார்.

'தெரியாது' என்று தலையசைத்தான் அவன்.

ஏதோ மகத்தான ஒரு உண்மையை நிரூபித்து விட்டவர்போல, 'ஆங், பின்னே என்ன பேச்சு வேண்டிக்கிடக்குது!' என்ருர். 'எல்லோர் பேரும் ஒவ்வொருத்தருக்கும் தெருஞ்சிருக்க வேணும் என்கிற கட்டாயம் எதுவும் கிடையாது. இதுதான் நம்ம பாயின்ட்' என்று அழுத்தமாக அறிவித்தார். பிறகு, 'தம்பி, உன் பேரென்ன?' என்று கேட்டார், ராஜாவிடம்.

'ராஜாகிருஷ்ணன்.'

'சரி. நீ இங்கே எங்கே வந்தே?'

'வசந்தாவைப் பார்க்கத்தான் வந்தேன்.'

'இதுவரை நீ வசந்தாவைப் பார்த்ததே இல்லையா?' என்று கேட்டார் சானு. இந்தக் கேள்வி 'அவுட்'டுச் சிரிப்பை வெடிக்க வைத்த நெருப்பு ஆயிற்று!

சண்முகம் பிள்ளை ஒன்றும் புரியாதவராய் எல்லோரையும் நோக்கினுர். 'இதிலே சிரிப்பதற்கு என்ன இருக்குது? இந்தப் பாயின்ட் எனக்குப் பிடிபடவே இல்லையே!' என்ருர்.

பகலில் வழி கெட்டு வந்து 'பேந்தப் பேந்த விழிக்கும்' ஆந்தையின் முகம்போல் தோன்றியது அவர் முகம். அதனுல் ராஜாவுக்கும் சிரிப்பு வந்து விட்டது.

'ஏன் தம்பி, ஏன்? என்ன விஷயம்?' என்று விசாரித்தார் அவர்.

ராஜாகிருஷ்ணனுக்கு வெட்கமும் கூச்சமும் ஏற்பட்டது. அதனுல் தலையைக் குனிந்து கொண்டான்.

'பண்ணையார் மகள் வசந்தா இந்த ராஜாகிருஷ்ணனின் காதலி. அந்தஸ்தில் உயர்ந்த பண்ணையார்வாள் இவர்களுடைய காதலை அங்கீகரிக்கவில்லை. ஆகையினுலே, இந்தப் பையன் அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு போய் எங்கோ மறைத்து வைத்து விட்டு, பண்ணையாரை மிரட்டிக் காரியத்தைச் சாதிக்க இங்கே வந்திருக்கிருன். இப்படி நான் சொல்லவில்லை. பண்ணையார் சொல்கிருர். இவ்வளவு தான் பாயின்ட். இப்போ எல்லாப் பாயின்ட்டுகளும் உங்களுக்குப் புரிகிறதா, ஸார்?' என்று குறும்புக்காரர் ஒருவர் தெளிவுபடுத்தினுர்.

'ஓ, ஐ ஸீ!' என்று இழுத்தார் சண்முகம் பிள்ளை. அவர் வலது கையின் பெருவிரலும் ஆள்காட்டி விரலும் அவருடைய வலது காதின் கீழ்மடலை இழுத்துத் தடவுவதில் ஈடுபட்டன. அவருக்குச் சிந்தனை உதயமாகும் போது அவர் விரல்கள் இவ்வேலையைச் செய்யும். மகிழ்ச்சி மிகும்போது, அவை தாடையை வருடும். குழப்பமோ மனக்கஷ்டமோ ஏற்படும்போது அவர் கை தலையைத் தடவும்.

'இது வா விஷயம்?' என்று தனக்குத்தானே பேசிக்கொண்ட சண்முகம் பிள்ளை ராஜாகிருஷ்ணனை மேலும் கீழும் பார்த்தார். 'தம்பி, உன்னிடம் சில முக்கிய விஷயங்கள் பேசணும். உனக்கு சாவகாசப்படும் அல்லவா? இப்படியே போகலாம் வாயேன்' என்ருர்.

அவர் சுவாரஸ்யமான ஆசாமி தான், அவரால் ஆபத்து எதுவும் ஏற்பட்டுவிடாது என்று உணர்ந்திருந்த ராஜா, சைக்கிளைத் தள்ளிக்கொண்டு, அவரோடு நடந்தான். மற்றவர்கள் அவரவர் அலுவல்களைக் கவனிக்க நகர்ந்தார்கள். 'சவடால் சண்முகம் பிள்ளை சரியான ஆளய்யா. ஒண்ணும் தெரியாதவர் மாதிரி ஊரை ஏமாத்துருர் சில சமயம். எல்லாம் தெரிஞ்சவர் மாதிரி எத்து வேலைகள் பண்ணுருரு சில சமயம். எமப்பளுவன்!' என்று ஒருவன் தன் சகாவிடம் கூறியபடி நடந்தான்.

அது சண்முகம் பிள்ளை காதுகளில் விழுந்திருக்காது. அப்படியே எட்டியிருந்தாலும் அதற்காக அவர் மனசை அலட்டிக் கொள்ளவும் மாட்டார். அவர் தனி ரகமானவர். அவருடைய பண்பாடும் தனியானது தான்.

கறுப்பாய், ஒல்லியாய், அதிக உயரமில்லாத, அப்பாவித் தோற்றத்தோடு காட்சி தரும் நபர் சண்முகம் பிள்ளை. ஒட்டிப்போன கன்னங்களில் ஒரு பக்கத்தை உப்பவைக்கும் வேலையை வெற்றிலை, பாக்கு, புகையிலை ஏற்றுக் கொண்டிருந்தன. அவை சுய

உருவில் குடியிருக்கும் 'செல்லம்'. சதா அவர் கையில் கொலுவிருக்கும். 'வெண்பட்டு' என்ற பெயர்பெற்ற—ஆனால், சலவையில் அடிபட்டு மஞ்சள் நிறமாக மாறி விட்ட—ஒரு 'லேஞ்சி' அவர் கழுத்தைச் சுற்றி வந்து, முன் புறம் நீண்டு தொங்கி அவருக்கு அழகு தரும். கழுத்திலே வல்லாட்டும், நெற்றியிலே அகலமான குங்குமப் பொட்டும் இல்லாமல் அவரைப் பார்க்கவே முடியாது. நரையும், கறுப்பும் கலந்த தலைமயிரை மிகவும் குட்டையான கிராப்பாக வெட்டி விட்டிருப்பார் அவர். ஆகவே அடிக்கடி அதைக் கையினால் தடவிக் கொள்வதில் அவருக்கு ஒரு சுகமிருந்தது. வாய்ச் சவடால் அடிப்பதில் வல்லவர் அவர். அதனால் தான் அவரை எல்லோரும் 'சவடால் சண்முகம்' என்று குறிப்பிட்டு வந்தனர்.

அவர் போகிற போதே ராஜாகிருஷ்ணனிடமிருந்து சகல விவரங்களையும் தெரிந்துகொண்டார். பூவுலிங்கம்பிள்ளை பேச்சிலே திடமான பாயின்ட்டே இல்லை. காதலியை அழைத்துக்கொண்டு ஓடிப்போகிற காதலன் அவளோடு மகிழ்வுற்று, பொழுதைப் பொன்னாக்கத் தான் விரும்புவான். வேலை மெனக்கெட்டு, பெண்ணைப் பெத்த அப்பன் மனோபாவம் எப்படியிருக்குது என்று ஆராய்வதற்காக அவங்க வீட்டைச் சுத்திச் சுத்தி வரமாட்டான். இந்த ஸிம்ப்பிள் பாயின்ட் பண்ணையார்வாளுக்குப் பிடிபடாமல் போய்விட்டதே!' என்று கூறி, அவர் தாடையைத் தடவினார்.

சிரிப்பு படர்ந்து வந்த அவர் முகம் கடுமை பெற்றது. சிந்தனை ஊர்கிறது என்பதை அறிவிப்பது போல், அவர் விரல்கள் காதின் கீழ்ப்பகுதியை நெருடலாயின. அவர் ராஜாவின் முகத்தைப் பார்த்தபடியே நின்றார். திடீரென்று, 'தம்பி ராஜாகிருஷ்ணன்! இதில் ஏதோ மர்மம் இருக்கு. பண்ணையாரை நாம் நம்புவதற்கில்லை' என்று படபடப்பாகச் சொன்னார்.

அவன் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றான்.

'உனக்கு இது விளங்கவில்லையா? உன் மேலே கெட்ட பெயர் ஏற்படுத்தணும் என்பதற்காக அவரே ஏன் சூழ்ச்சி செய்திருக்கப்படாது? செய்திருக்க மாட்டார் என்று என்ன நிச்சயம்?' என்று ஓங்கிய குரலில் பேசினார் அவர்.

'என்னமோ தெரியலே!' என்று முனங்கினான் அவன்.

'எனக்குச் சில பாயின்ட்டுகள் தோணுது. அவற்றைத் தெளிவுபடுத்திக் கொள்ள, நான் பண்ணையார் வீட்டு அம்மாளைக் கண்டு பேசணும். அது தான் முதல் வேலை. நீ உன் வீட்டுக்குப் போ' என்று அவசரப்படுத்தினார் அவர்.

அவர் தன்னைச்சும்மா விட்டால் போதும் என்று பிரார்த்தனை பண்ணியவாறே நடந்த ராஜா மிகுந்த உற்சாகத்துடன் அவர் ஆசையைப் பூர்த்தி செய்தான்.

'சரி. அப்புறம் சந்திக்கலாம்' என்று சொல்லிவிட்டு, வேகமாக நடந்தார் சண்முகம் பிள்ளை.

அவர் போவதையே கவனித்து நின்ற ராஜா, 'ஆளு கொஞ்சம் ஒரு தினுசுதான்—அரைக்கிறுக்கு—போலிருக்கு!' என்று எண்ணிக் கொண்டு சைக்கிள் சவாரியைத் தொடங்கினான்.

4
அதிபுத்திசாலி

பழமொழிகளில் அநேகம் பொருத்தமற்றவை — அர்த்தமற்றவைகூட—என்பது ராஜாகிருஷ்ணனின் அபிப்பிராயம். உதாரணம்,

'ஒரு ஊரில் இரண்டு பைத்தியக்காரர்களா?' என்பதில் என்ன பொருத்தம்-அல்லது, அறிவுக்குப் பொருத்தமான—அர்த்தம் இருக்கிறது? ஒரே தெருவில் ஒன்பது பைத்தியங்கள் கூட இருக்கின்றன...இந்த விதமாக அவன் எண்ணம் கிளைவிட்டு ஓடும்.

அவன் வசந்தாவைக் காணலாம் என்று ஆசையோடு போய், ஏமாற்றத்தோடு அதிர்ச்சியும் பெற்று, சோர்ந்து நகரத்துக்குத் திரும்பியபோது அரைப் பைத்தியமான சண்முகம் பிள்ளையைப் பற்றியே தான் நினைத்துக் கொண்டிருந்தான். அவன் நகர எல்லையைக் கூட எட்டவில்லை. அதற்குள்ளாக அவனுடைய தத்துவத்துக்கு வெற்றி அளிக்க முன் வந்தது போல் எதிர்ப்பட்டது இன்னொரு பைத்தியம்.

'அடே மக்குப்பிளாஸ்திரி! இப்படித் தனியாக எங்கேடா போயிட்டு வாறே? மூஞ்சியைப் பார்த்தா, எதையோ பறிகொடுத்து விட்டு வாறதுபோல் தோணுதே!' என்று கூவினன் குறுக்கே வந்தவன்.

'அட கடவுளே! இந்த லூசு இப்பத்தானு எதிரே வந்து சேரணும்?' என்று சிணுங்கியது ராஜாவின் மனக்குறளி. எனினும் அவன் உல்லாசமாகப் பேசுவது போல், 'இப்படி சும்மா ஜாலியாக சுத்திப்போட்டு வாறேன்' என்ருன்.

'ஐயோ! என் ஜாலியே!' என்று கிண்டல் செய்தான் மற்றவன். 'டேய் நம்ம கிட்டேயே வெடி வைக்கிறியேடா பையா, ஐயாவாள் யாரு? எதிர்காலத் துப்பறியும் புலி—மிஸ்டர் சந்தர், அவரிடம் நீ பொய் சொல்லலாமாடா, ஏமாடா! உன் மூஞ்சியே காட்டிக் கொடுக்குதடா தம்பி. உம் உம் உள்ளதைச் சொல்லிவிடு. உனக்கு நன்மை ஏற்படும். வாவா, இங்கே பக்கத்திலேஅழுமூஞ்சிச் சாயாக்கடை ஒண்ணு உண்டு. அங்கே உட்கார்ந்து பேசலாம்' என்று வலுக்கட்டாயமாக ராஜாவை இழுத்துச் சென்ருன் அவன்.

சந்தர்—மன்னிக்கவும்! மிஸ்டர் சந்தர்—துப்பறியும் கதைகளை வண்டி வண்டியாக வாசித்தும் அலுக்காத ஆசாமி. 'கொண்டா, இன்னும் கொண்டா!' என்று அவன் மனம் மர்மக் கதைகளையே நாடியது. ஆயிரக் கணக்கிலே அவற்றைப் படித்து முடித்த சந்தருக்கு ஒரு ஆசையும், அதன் பலத்தினுல் அசைக்கமுடியாத ஒரு நம்பிக்கையும் ஏற்பட்டு விட்டன. 'நாமும் துப்பறியும் நிபுணராகப் பிரகாசிக்க வேண்டும்' என்பது அவனுடைய ஆசை. 'அவசியம் பிரகாசித்தே தீருவோம்' என்பது அவன் நம்பிக்கை.

பள்ளிக்கூடத்தில் படித்த போது அவனுக்கு 'நெய்போளி' மீது அதிகமான ஆசையும், நெப்போலியன் என்ற சரித்திர லட்சிய நாயகன் மீது தீவிரப் பற்றுதலும் இருந்தன. அவன் பேச்சில் எப்போதும் நெப்போலியன் அடிபட்டுக் கொண்டிருப்பான். 'நம்ம நாட்டுக்கு இப்ப ஒரு நெப்போலியன் தேவை. உலகம் முழுமைக்கும் அரை டசன் நெப்போலியன்கள் இருந்தால் போதும். மனித ஜாதியின் தலைவிதியும், உலகத்தின் வரலாறும் அடியோடு மாறிவிடும்' என்று ஆர்வத்தோடு கூறுவான். அதனுல் அவனையே பலரும் 'நெப்போலியன்' என்று பெயரிட்டு அழைக்கலாயினர்.

'அவன் என்னடா நெப்போலியன்! புல் தடுக்கிப் பயில்வான்! சரியான நெய்போளிதான் அவன். அரை டசன் நெய் போளிகளை அப்படியே விழுங்குகிருனே பாவிப் பயல்' என்று ஒருவன் பரிகசித்

தான். அன்று முதல் 'நெப்போலியன்' என்ற பெயர் 'நெய் போளி' யாக மாறிவிட்டது.

பிறகு சந்தருக்குத் துப்பறியும் பித்து பிடித்தது. ஓயாது ஷெர்லக் ஹோம்ஸ் பற்றியும், துப்பறியும் கோவிந்தன் பற்றியும் புலம்பிக் கொண்டிருந்தான். மேலும் புத்தகங்கள் படிக்கப் படிக்க, இந்தப் பட்டியலில் புதிய புதிய பெயர்கள் சேர்ந்து கொண்டன. அவற்றுடன் 'மிஸ்டர் சந்தர்' என்கிற பெயரும் நிச்சயம் சேர்ந்துவிடும் என்ற உறுதி அவனுக்கு இருந்தது.

அவன் குள்ள உருவினன். ஐந்தடி உயரம் கூட இருக்கமாட்டான். 'இதிலிருந்தே தெரியவில்லையா மிஸ்டர் சந்தர் மகத்தான காரியங்கள் செய்வதற்காகப் பிறந்தவர் என்று! நெப்போலியன் எவ்வளவு உயரம் இருந்தான் தெரியுமா? மகா அலெக்சாந்தர் உயரம் என்ன தெரியுமா? லெனின் — தோழர் லெனின்—உயரம் என்ன தெரியுமா? இவங்க எல்லோருமே நாலே முக்கலே யரைக்கால் அடி உயரம்தான்! சரித்திரம்பேசுகிறது, பிரதர், சரித்திரம்! மிஸ்டர் சந்தர் உயரம் என்ன? டிட்டோ—டிட்டோ! அதாவது, மேற்படி மேற்படி!' என்று அளப்பான்.

அவனுக்குப் பிடித்த துப்பறியும் நாவல்களில் வரும் கதாபாத்திரத்தின் விந்தைக் குணங்கள் சிலவற்றை அவன் தனதாக்கிக் கொள்ளத் தயங்கவில்லை. பையில் சிறிய பூதக்கண்ணாடி ஒன்று வைத்திருந்தான். கண்களுக்குக் கறுப்புக் கண்ணாடி அணிந்து கொண்டான். இப்படி அநேகக் கோணல் தனங்கள் செய்யக் கற்றதுமே, அவன் தானும் துப்பறிகிறவனாகி விட்டதாக நம்பினான்.

ராஜாகிருஷ்ணன் நடந்த கதையைத் தானறிந்த மட்டில் விவரமாகச் சொன்னதும், 'ஹே ஹேன்னாம்!' என்று கூச்சலிட்டுத் துள்ளி எழுந்தான் சந்தர். அது ஒரு டீக் கடை என்பதைக் கூட மறந்துவிட்டான் அவன்.

'பிரதர் ராஜாகிருஷ்ணன்! கவலையை விடும். இனிமேல் நானாச்சு. வசந்தா எங்கே போனாள், என்ன ஆனாள் என்பதை மிஸ்டர் சந்தர் நிச்சயமாகக் கண்டு பிடிப்பார்' என்று அழுத்தமாக அறிவித்தான். பிறகு அமைதியாக உட்கார்ந்து, 'சரி. உன் அபிப்பிராயம் என்ன? இதைப் பற்றி நீ என்ன நினைக்கிறே?' என்று கேட்டான்.

'எதைப் பற்றி?'

'வசந்தா எங்கே போயிருப்பாள்?'

'நாசமாப் போச்சு போ! ஐயா துப்பறியும் புலியே! அது எனக்குத் தெரிந்தால் நான் ஏன் இங்கே இருக்கிறேன்?' என்றான் ராஜா.

'ராஜா! என் துப்பறியும் திறமையைப் பற்றி நீ குறைவாகப் பேசினியோ, எனக்குக் கெட்ட கோபம் வரும். ஆமா. இப்பவே சொல்லிப் போட்டேன்...எதையும் முதல்லே யிருந்து ஆராய்வது நல்லது என்பதனால் தான் நான் உன்னிடம் அந்தக் கேள்வி கேட்டேன்...எப்படிச் செயல் புரிய வேண்டும் என்று எனக்கு ஐடியா ஏற்பட்டுவிட்டது. வசந்தா வசித்த ஊரைப் பார்க்கணும். அவள் வீட்டை ஆராயவேணும். அவளுடைய அப்பாவையும் அம்மாவையும் பார்த்து அநேக விஷயங்கள் விசாரிக்கணும்.....'

இருவரும் பேசிக்கொண்டே டீக்கடையை விட்டு வெளியே வந்து, ரோட்டோரத்தில் நின்றார்கள். 'துப்பறியும் புலி ஏதோ பெரிய திட்டம் போடுது போலி

ருக்குதே!' என்று ஒரு குரல் மிக அருகே கேட்கவும், சந்தர் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தான்.

அவனுக்குப் பின்னால் நவயுவதி ஒருத்தி நின்றாள். 'கலீ'ரெனச் சிரித்துக் களிதுலங்கும் முகத்தோடு நின்ற அவள் பெரிய குறும்புக்காரி என்பதை அவள் கண்கள் காட்டிக் கொடுத்தன.

'மாதவி, நீ என்னை இப்படி பயப்பட வைத்தது நியாயமல்ல' என்று குறை கூறினான் சந்தர்.

'நான் வந்து, மறைந்து நின்று, உங்கள் பேச்சைக் கேட்டது கூடத் தெரியாது உங்கள் ரெண்டு பேருக்கும். இதை அறியக் கூடத் துப்பு இல்லாத இவரு – மிஸ்டர் சந்தர்-பெரிய துப்பறி நிபுணராக வளரப் போறாராம். அட மூஞ்சியே!' என்று பழித்தாள் அவள்.

'மாதவி, இன்னொரு தடவை நீ இதுபோல் பேசினியோ, எனக்கு மகாக் கோபம் வரும். ஆமா...சரி. உனக்கு வசந்தாவைப் பற்றி ஏதாவது தெரியுமா? தெரிந்திருந்தால் சொல்லு!' என்று கேட்டான் அவன்.

'எந்த வசந்தா?'

'சீ போ! நமக்கு நூத்தி எட்டு வசந்தாவைத் தெரியும், அதனாலே எந்த வசந்தான்னு அம்மாளுக்கு ஐயம் வந்துவிட்டது!...பண்ணையார் பூவுலிங்கம் பிள்ளை மகள்—ராஜாகிருஷ்ணனின் காதலி—வசந்தா உன் சிநேகிதி தானே? அவளைப்பற்றித்தான் கேட்கிறேன். இதில் ஏதோ மர்மம் இருப்பதாக சந்தேகம் ஏற்பட்டிருக்குது. அதை மிஸ்டர் சந்தர் ஆராய்ச்சி பண்ணப் போறாரு புரியுதா?' என்று நீட்டி முழங்கினான் அவன்.

(வளரும்)

தந்தி : குமரன் டெலிபோன் : { மில் 93 / ஆபீஸ் 538 }

குமரன் மில்ஸ் லிமிடெட்,

பூளைமேடு P.O. கோயமுத்தூர்.

நிறுவப்பட்டுள்ள கதிர்கள்	...	19,044
மேற்கொள்ளப்பட்டுள்ள விஸ்தரிப்பு	...	5,900

நாங்கள் உயர்தரமான 20s 36s 40s 60s 80s நிர். பருத்தி நூலும், 20s நிர். ஸ்டேபிள் பைபர் நூலும் தயார் செய்கிறோம்.

எங்கள் நூலை
சென்னை ஆந்திர மாகாணங்களில்
மிகுதியாக உபயோகப்படுத்துகிறார்கள்.

Sri G. V. RAMASWAMY NAIDU &
Sri G. V. MUTHUSWAMY NAIDU
Committee of Directors.

RE 294

மோட்டார் சைகிளில் போகும் மனிதர்

ஆண்மையும் வெற்றியும் திகழ, மக்களின் மனத்தைக் கவருகிறார்.
எங்கு போனாலும் சரி இவர் மக்களின் கவனத்தைக் கவருகிறார். கம்பீரத்துடன் எல்லோரையும் தாண்டி முன்னேறுகிறார். இவர் போன்றவர்க்கே வெற்றி தயாராகக் காத்திருக்கிறது.

ராயல் என்பீல்ட்®

படிப்படியாக தயாரிப்பவர்கள்:
தி என்பீல்ட் இந்தியா லிமிடெட்,
மதராஸ்-19

பூரண விற்பனையாளர்கள்:
தி மதராஸ் மோட்டார்ஸ்
பிரைவேட் லிமிடெட்,
மதராஸ் - பெங்களூர் - டில்லி

அட்டைப்பட அழகி

திருச்சி வாசுதேவன்

(ஓவியமொன்றில் உள்ளம் பறிகொடுத்தவனின் நெட்டுயிர்ப்பு)

மூவர்ணச் சேற்றில் முளைத்தலர்ந்த தாமரையே!
ஆவலுணர் வூட்டிவிட்ட அட்டைப் படஅழகி!

ஓவியமே! ஓவியனின் உள்ளூறும் இன்கனவுக்
காவியமே! ஆசைக் கடலமுதுப் பெட்டகமே!

சித்திரித்துக் காட்டுமுன்றன் தேனுடலின் வண்ணத்தை
எத்தினமும் கண்டுமனம் இன்பமுற இச்சைகொண்டேன்!

கத்தரித்துக் கண்ணிலொற்றிக் கண்ணாடிச் சட்டமிட்டுக்
நித்திரைசெய் கட்டிலின்முன் நீள்சுவரில் மாட்டிவிட்டேன்!

சித்திரத்து நங்காய்! சிரித்தமுகம் கோணாமல்
நித்திரையில் வந்துநித்தம் நெஞ்சில் நிலைத்துவிட்டாய்!

தன்னன்னை வீடுசென்ற தன்மைமிகு என்மனையாள்
மின்னெனவே நாள்பத்துள் மீட்டிங்கு வந்தனளே!

நேரிழையாள் வந்தவுடன் நீயடைந்த சீரையெல்லாம்
யாரிடத்தில் சொல்லிடுவேன்! யாரென்னைத் தேற்றிடுவார்?

எங்கே மறைந்தாய்? அவளறியா வண்ணம், இனி
இங்கென் மனத்தில் இடமுண்டு வந்திடுவாய்!

முகப்பு மொழியும் கவிதை

கவிதைப் பேய்!

காதலன் (ஒரு கவிஞன்) :— வீட்டில் யாரையும் காணோமே! உன்னுடைய தாயார், தம்பி, தங்கைகளெல்லாம் எங்கே?

காதலி:—நாமிருவரும் தனித்துப் பேச வேண்டுமென்றீர்களல்லவா? அதற்காக ஒரு யுக்தி செய்தேன். நீங்கள் இங்கு வந்து உங்களுடைய கவிதைகளைப் படிக்கப் போவதாகச் சொன்னேன்! உடனே எல்லோரும் சினிமாவுக்குக் கிளம்பி விட்டார்கள்!

★

யாகாவாராயினும்...!

இரண்டு நண்பர்கள் ஒரு ஹோட்டலில் அறைகளைப் பார்வை இட்டனர். அறைகள் பார்வைக்கு நன்றாக இல்லை.

ஒரு நண்பர்: அறையா, மாட்டுக்கொட்டிலா இது? சரி, என்ன வாடகை?

ஹோட்டல்காரர்: ஒரு மாடு தங்க மூன்று ரூபாய் இரண்டு மாடானால் ஐந்து ரூபாய்!

★

நள-தமயந்தி!

கணவன்:— சரோஜா! ஏன் கவலையோடு உட்கார்ந்திருக்கிறாய்? காரணத்தை என்னிடம் சொல்லு. இனிமேல் உனக்கென்று தனியாக ஒன்றுமில்லை; எல்லாம் நம்முடையவை, நமக்குப் பொதுவானவை!

சரோஜா:— போன மாதம் வாங்கிய நம்முடைய பட்டுப் புடவை கிழிந்து போய் விட்டது!

காதலும், கத்தரியும்!

"ராமசாமி, அவனுக்கு மார்பில் ஆபரேஷன் செய்த லக்ஷ்மியையே கல்யாணம் செய்து கொண்டு விட்டானும் தெரியுமா?"

"தன்னுடைய இதயத்தையே அவளுக்குக் காட்டி விட்டான் அல்லவா?"

★

அறியாமை!

உபாத்தியாயர்:— விலையின்றி கிடைக்கும் ஒரே பொருள் தண்ணீர்தான்.

கண்ணன்:— ஏன் ஸார்? உங்கள் வீட்டில் பால் வாங்கும் வழக்கமே கிடையாதா?

★

செவிடும் செவிடும்!

முதல் செவிடர்:- நீங்கள் ராமேச்வரம் போய் விட்டு வந்தீர்கள் என்று கேள்விப்பட்டேன் உண்மையா?

இரண்டாம் செவிடர்:— இல்லையே! நான் ராமேச்வரம்தான் போய் விட்டு வந்தேன்!

முதல் செவிடர்:— அப்படியா? நீங்கள் ராமேச்வரம் போய் விட்டு வரவில்லையா? சரிதான்!

★

வெளுத்து வாங்கினான்!

"உங்களுடைய வெளுத்த நிறத்துக்கு இந்த ஷர்ட்டிங் நிறம் பொருத்தமாக இருக்கும் ஸார்."

"என்னுடைய இயற்கையான நிறம் வெளுப்பில்லை ஐயா! இந்த ஷர்ட்டிங் துணியில் உள்ள சீட்டில் குறித்துள்ள விலையைப் பார்த்ததும்தான் என் முகம் வெளுத்து விட்டது."

போன் : 203 தந்தி : "TRANSPORT"

சண்முகம் டிரான்ஸ்போர்ட்

பஸ் & லாரி சர்வீஸ்

அருப்புக்கோட்டை.



எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.

1. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
2. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
3. விருதுநகர் To பெருநாழி
4. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்.
5. மதுரை To சாயல்குடி
6. மதுரை To அருப்புக்கோட்டை

பொது ஜனங்களும், வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பிராஞ்சு: மதுரை

போன் : 512 தந்தி : "TRANSPORT"

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனுமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகார வகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், பவுன்டன் பேனு, சிலேட், பென்சில் வகைகள், ஷாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாயமாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு:

போன்: 333

19, கொட்மலே ரோடு,

நாவலப்பிட்டிய.

ஏஜன்ட்ஸ்:

போன்: 3262 த. பெ. நெ. **2345**

S. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவனிங் பஜார் :: :: P. T. மதரூஸ்.

&

37, ஹைரோடு,

திருநெல்வேலி ஜங்ஷன்.

— டி எஸ். கோதண்டராமன் —

அனசூயாவுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. காரணமில்லாமல் வேலைக்காரர்கள் மேல் எரிந்து விழுந்தாள். சோபாவில் உட்காரப் பிடிக்காமல் மாடியிலிருந்த தன் அறைக்கும் 'பால்கனி'க்குமாக அலைந்தாள். அடிக்கடி இடது கரத்தை அழகு செய்த சிறிய கைக் கடிகாரத்தை உற்றுப் பார்த்தாள், தவிர்க்க முடியாத நிகழ்ச்சியில் குறித்த நேரத்தில் பங்கு கொள்ளத் துடிப்பவளைப் போல!

அன்றைக்கு அவள் எங்குமே போக விரும்பவில்லை! பொழுது போகாத நாட்களில் அவள் வஸந்தியைத் தேடிக் கொண்டு போவதுண்டு. இருவருமாகச் சேர்ந்துவிட்டால் மணிகள், நாட்களாக மாறினால்கூடத் தெரியாது! யாரேனும் நினைவு படுத்தினால் தான் உண்டு!

ஆனால், இப்பொழுது அனசூயாவுக்குப் பொழுது போகாமல் இல்லை. பொழுது அவளைத் தகித்துக் கொண்டிருந்தது!

'சே, அப்பாவாம், அம்மாவாம்! இப்படியா பொறுப்பில்லாமல் இருப்பார்கள், பெற்றோர்கள்? ஏதடா, வயது வந்த பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டிருக்கிறோமே?...நாலு பேர் நாலு விதமாகப் பேச மாட்டார்களா? என்ற எண்ணம் துளிகூட இல்லையே!...'

'தொப்'பென்று ஒரு பிரம்பு நாற்காலியில் விழுந்தாள், அனசூயா. வேகத்தைத் தாங்க மாட்டாமல் நாற்காலி கிறீச்சிட்டது.

அவளுடைய அப்பா ஆலாலசுந்தரம் சொல்லிவிட்டார். "அம்மா அனு, உனக்கு எப்பொழுது, யாரைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்று தோன்றுகிறதோ அப்பொழுது சொல். பத்தே நாளில் நடத்தி விடுகிறேன்!" என்று.

அம்மா கூட, "ஆமாம், குழந்தை. கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர்.

பத்தொன்பது வயது பருவ மங்கை அனு! அவளை அடைய மனுப் போட்டவர்கள் இருவர்! எத்த முயற்சித்தவர் ஏமாந்தார்! சத்தம் செய்யாமலே வெற்றி கண்டார், அப்பாவி!

உன் இஷ்டப்படிதான் நடக்கவேணும்'' என்று சொல்லிவிட்டாளே!

அவள் இதயம் குமுறிக் குமுறி எழுந்தது. அவளுடைய பெற்றோர்கள் மட்டும், மற்றப் பெற்றோர்களைப் போலில்லாமல், தம் பெண் கல்யாணத்தில் இத்தனை விட்டேற்றியாக ஏன் இருக்கிறார்கள்? மாப்பிள்ளைக் கோலத்தில் அமர்வதற்கு இரண்டு வாலிபர்கள் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தாலா? அவர்களாகவே ஒரு பையனை நிச்சயித்து அவளைக் கழுத்தை நீட்டச் சொல்லக்கூடாதோ? இருவரில் யாரை மணப்பது என்ற முடிவை அவளிடமே விட்டு விட்டார்களே? அடாடா, என்ன கஷ்டம்!...

'எப்பொழுது கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று...'

எகிறி எழுந்தாள், அனசூயா. எப்பொழுது கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்? பத்தொன்பது வயது நடந்து கொண்டிருக்கும்போது செய்து கொள்ளாமல், நாற்பத்தொன்பது வயதிலா ஆண் துணை தேடுவார்கள்! சே, இவர்கள் என்ன அப்பா, என்ன அம்மா! அப்பாவுக்கு இருபதும் அம்மாவுக்குப் பன்னிரெண்டும் முடிந்தவுடன் கல்யாணம் பண்ணிக் கொண்டார்களே? அவர்களுக்கு மட்டும் ஏனோ அவ்வளவு அவசரம்?

அவள் எத்தனை கனவு கண்டு கொண்டிருக்கிறாள்? கணவனுடன் உல்லாசமாகக் காரில் போவது போலவும், சினிமா, நாடகம், இசைக் கச்சேரிகளுக்குப் போவது போலவும், அவர்கள் பரஸ்பரம் காட்டும் அன்பைக் கண்டு பிறர் பொறாமைப் படுவது போலவும்...

த்ஸ, இவையெல்லாம் இந்தத் தாய் தந்தையருக்குத் தெரிகிறதா? சுத்த பத்தாம் பசலிகள்!

'யாரைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று...'

இந்த எண்ணம் எழுந்ததும் அனசூயாவின் ஆத்திரம் எல்லாம் அடங்கி கவலைக் குறிகள் தோன்றலாயின. சேகர், சங்கர் ஆகிய இருவரின் முகங்களும் அவள் மனத் திரையில் காட்சி தந்தன. இருவரையும் தனித் தனியே உற்றுப் பார்த்தாள். பின், அருகருகே வைத்துப் பார்த்தாள். இரண்டு பேர்களிடமும் தனியான தொரு கவர்ச்சியைக் கண்டு அவள் வேதனை மிகுந்தது!

'இவர்களில் யாரைக் கல்யாணம் செய்து கொள்வது?'

அனசூயா, தன் மனத் தராசில் இருவரையும் எடை போட்டுப் பார்த்தாள். தரத்தைக் காட்டும் முள் அவள் கண்களில் படவேயில்லை.

செல்வ நிலையில் இருவரும் ஏறக் குறைய சமதளத்தில் நிற்பவர்கள். படிப்பு, அழகு எல்லாம் அப்படியே. சேகர், பெரிய அத்தையின் புதல்வன். சங்கர், சிறிய அத்தையின் குமாரன்! முன்னவன், ஒரு ஆங்கிலேயக் கம்பெனியின் விளம்பர இலாகா அதிகாரி. பின்னவன், கல்லூரியில் விஞ்ஞான விரிவுரையாளன். ஆனால் சுபாவத்தில் இருவரும் எவ்வளவு வேறுபட்டவர்கள்?...

சேகர், மாமா ஆலாலசுந்தரத்தின் வீட்டிற்குள் நுழையும் போதே அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டு அமர்க்களமாக நுழைவான். அவன் பேசினால் குரல் கொல்லைபுறத்துச் சுற்றுச் சுவரில் பட்டு எதிரொலிக்கும்! படோடோபமாக ஆடை அணிந்து கொள்வான். யாரையும் தன் பேச்சின் மூலம் வசப்படுத்தி விடுவான். வாசாலகன். உலகத்தில் அவனுக்குத் தெரியாத விஷயமே இருக்காதோ என்று வியக்கும்படி சம்பாஷணை செய்வான். பொதுவில் அவனைச் சுற்றி ஒரு பெரும் போக்கான தன்மை சுழன்று கொண்டிருப்பதாகத் தோன்றும்.

சங்கரோ, அமைதியே உருவானவன்! ஆடைகளில் எளிமையும் சிந்தனையில் தூய்மையும் உடையவன். அதிகமாகப் பேசமாட்டான்; சிரிக்கமாட்டான். எப்போதாவது சிரித்தால், இதயத்திலிருந்து பொங்கிக் கொண்டு வருவதைப் போல மலர்ந்து இருக்கும். அவன் நடந்து கொள்வதைப் பார்த்தால், பேசிக் கொண்டிருக்கும் போதே மனம் ஆராய்ச்சியில் ஈடுபட்டு விட்டதோ என்று எண்ணும்படியாக இருக்கும். அவனுடைய அமரிக்கையான தன்மையிலும் ஒரு கவர்ச்சி இருக்கத்தான் செய்தது.

இந்த இருவரில் ஒருவரை அவள் மணக்க வேண்டும். ஆனால், யாரிடம் அதிக அன்பு என்பதை அவளாலேயே நிர்மானிக்க முடியவில்லை! நெருங்கிய உறவினர்கள் என்ற முறையில் சேகர், சங்கர் இருவரிடமும் அவள் ஆசையுடன் பழகினாள். ஆனாள், யார்மேல் 'காதல்' அவளுக்கு?



காதல் என்ற சொல் நெஞ்சில் தோன்றியதும் கரைமேல் போட்ட மீனைப் போல் அனசூயா துள்ளினாள்; தத்தளித்தாள்; அவளிடம் அழகு, பாட்டு, படிப்பு எல்லாம் குடி கொண்டிருந்தன. தன்னிடமிருந்த குறையை—ஒரே ஒரு குறையை — இப்போதுதான் அவள் உணர்ந்து கொண்டாள். அனசூயாவுக்கு யாரையுமே காதலிக்கத் தெரியவில்லை!...

அவள் இதயத்தில் ஏதோ 'குபுக்' கென்று பூரித்துப் 'பட்'டென்று உடைந்தாற்போலிருந்தது.

இண்டர்மீடியட் பாஸ் செய்துவிட்டு, நவநாகரிக நங்கையர்களுடன் பழகிக்கொண்டிருக்கும் ஒரு பெண்ணுக்கு, ஒரு இளைஞனைக்கூடக் காதலிக்கத் தெரியவில்லை என்றால் யாருமே நம்ப மாட்டார்கள். ஏன், அனுசூயாவின் பெற்றோர்கள் கூட நம்பமாட்டார்களே!

இதுவரை தான் யாரையும் காதலிக்காமல் போனது பெரும் தவறு என்பதைப் பரிபூரணமாகத் தெரிந்து கொண்டு விட்டாள், அவள். இனிமேல், காதலனைத் தேடிச் செல்வது என்பது சாத்தியமல்ல. சேகரும் சங்கரும் அவள் பேரில் ஒரு 'கண்' வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாமல், அவர்களில் ஒருவரைத் தவிர, வேறு யாரையுமே காதலிக்க முடியாது! சங்கரின் கண்களுக்குப்படாமல் தப்பினாலும் தப்பிவிடலாம். ஆனால், சேகர் இருக்கிறானே—அவனுக்கு ஆயிரம் கண், ஆயிரம் செவி!

'ஹே, ஜகதீஸ்வரா! ஆபத்பாந்தவா! அனாதை ரட்சகா!... இந்தச் சிக்கலான பிரச்சினைக்கு முடிவுகாண எனக்கு வழிகாட்ட மாட்டாயா? என் பெற்றோர்கள் எனக்கு நன்மை செய்வதாக எண்ணிக் கொண்டு என்னைக் கைவிட்டு விட்டார்கள். நீயாவது எனக்குக் கைகொடுக்க மாட்டாயா?...' கண்களை இறுக மூடிக் கொண்டு மனதாரப் பிரார்த்தனை செய்தாள், அனசூயா.

பிரார்த்தனையின் குறிக்கோள் காதலானாலும் சரி, கைலாச பதவியானாலும் சரி-கடவுளுக்கு ஒன்றேதான், உள்ள முருக வேண்டுபவரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வது அவன் கடமை!

ஏறக்குறைய, ஐந்து நிமிஷ நேரம் கண்மூடிக் கொண்டிருந்த அனசூயா திடீரென்று கண்விழித்தாள். உள்ளத்தில் தோன்றிய ஒளியில் விழிகள் அகன்று அகன்று வியப்பின் எல்லைக் கோட்டைத் தொட்டுக் கொண்டு நின்றன. அவள் உடலெங்கும் ஜிவ்வென்று இன்ப உணர்ச்சி பரவியது. தலைமேல் தாங்கிக் கொண்டிருந்த இரண்டு டன் சுமையைக்கீழே இறக்கி விட்டது போன்ற நிம்மதி தோன்றியது. ஆகா, என்ன அற்புதமான யோசனை! இத்தனை நாட்களாக அவளுக்கு இந்த அருமையான திட்டம் தோன்றாமல் போய்விட்டதே! எல்லாவற்றுக்குமே 'வேளை' வரவேண்டும் போலிருக்கிறது!

தன் புதிய திட்டம் தந்த பேரமைதியில் அகமகிழ்ந்தவாறே மாடிப் படிகளில் தாவித் தாவி இறங்கினாள், அனசூயா. கட்டவிழ்த்து விடப்பட்ட மான் குட்டியின் செயல்களைப் போன்றிருந்தது, அவள் போக்கு. அவளுக்கு அந்தச் சமயத்தில் என்ன செய்வதென்றே தெரியவில்லை. எந்த இடத்திலும் இருப்புக் கொள்ளவும் இல்லை. வீட்டின் ஒவ்வொரு அறைக்குள்ளும் புகுந்து வெளியே வந்தாள். வேலைக்காரர்களிடம் அவசியமில்லாமல் ஏதேதோ பேசி அர்த்தமில்லாமல் சிரித்தாள்! பெற்றோர்கள் மட்டும் வீட்டில் இருந்திருந்தால் அவர்களைப் படாத பாடு படுத்தி வைத்திருப்பாள். நல்ல வேளையாக அவர்கள் உறவினர் ஒருவர் வீட்டுக்குச் சென்றிருந்தார்கள்!

* * *

சேகர், மாமாவின் வீட்டில் காலடி எடுத்து வைத்தபோது அவர் ஓய்வாக உட்கார்ந்திருந்தார். தான் எண்ணி வந்த காரியம் நிச்சயம் கைகூடப் போகிறது என்ற உறுதியில் உல்லாசமும் சேர்ந்துகொண்டது, சேகருக்கு.

"வாடா!... உட்கார்..." என்று வரவேற்றார், ஆலாலசுந்தரம்.

"உட்காருவதற்கு எங்கே நேரம் கிடைக்கிறது மாமா? ஆபீஸில், 'பப்ளிஸிடி மானேஜர்' என்று தான் பெயரே தவிர, எல்லா முக்கிய வேலைகளையும் என் தலையில் தான் கட்டி விடுகிறார்கள்! நாளன்றைக்கு ஒரு பெரிய 'பார்ட்டி'...!"

"நாளைக்கே ஒரு கல்யாணம் ஆனாலும் இப்படித்தானே, 'லோ, லோ' என்று அலைந்து கொண்டிருப்பாய்!"

"சேச்சே, அதெல்லாம் இல்லை, மாமா!... எப்போதும் இப்படியே இருப்பேனா?... ஹி...ஹி..."

'தம்பி என்ன சொல்லுது?' என்று கேட்டுக் கொண்டே ஆலால சுந்தரத்தின் மனைவி மங்களம் அங்கே வந்தாள்.

"என்ன சொல்கிறான்? 'அனுவைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்துடுங்க' என்கிறான்!"

"எங்களுக்கு ஆட்சேபனையே இல்லை, சேகர். அவள் 'உம்'முன்னா, மறு முகூர்த்தத்திலேயே கல்யாணம்!"

"அட, அனுவுக்கு என்னங்க தெரியும்? சின்னக் குழந்தை!... நீங்க சொன்னா தட்டியா பேசும்?..."

"சேகர், நீயும் இப்படித்தான் சொல்றே. சங்கரும் கிட்டத்தட்ட



அவர்:—எல்லாமே ரவிக்கைத் துணியாதானே இரிக்கு! சட்டைத் துணி இல்லையா?

கடைக்காரர்:—இப்பல்லாம் சட்டைத் துணின்னு தனியா யாரும் வாங்கறதில்லிங்க! இதிலேயேதான், ரவிக்கை, சட்டை எல்லாம் தெச்சுக்கிருங்க!

இதே மாதிரிதான், சுற்றி வளைத்துச் சொல்ருன்!... நம்ப பொண்ணு ஒண்ணும் தீர்மானமாச் சொல்லமாட் டேங்குது''

''சொல்லி விட்டாள், மங்களம், சொல்லிவிட்டாள்!'' என்று புதிர் போட்ட ஆலாலசுந்தரம், அலட்சியப் பார்வையை வீசியவாறே நாற்காலியில் சாய்ந்தார்.

''என்னங்க, சொன்ன?''

''என்ன, மாமா?''

இருவருடைய துடிப்பையும் அவர் சிறிது நேரம் ரசித்தார். பின், நிமிர்ந்து உட்கார்ந்து, ''அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணிக்கு, சேகர், சங்கர் இருவர் பெயரையும் சீட்டில் எழுதிக் குலுக்கிப் போட்டு எடுத்து, எவன் பெயர் வருகிறதோ அவனுக்கு அனு!'' என்ருர்.

பிரமிப்பில், சேகர் ஒரு கணம் வாயடைத்துப்போய் விட்டான். பின் சமாளித்துக்கொண்டு, ''இந்த மாதிரி யோசனையை இதுவரை நான் கேட் டதே இல்லை, மாமா'' என்ருன்.

''இப்போது கேளடா!... அனு ஒரு திட்டம் தயாரித்து விட்டால் அதை அசைப்பதற்கு ஆண்டவனலும் முடியாது!''

''ரொம்ப நல்லாயிருக்கு, போங்க! நீங்க இடம் கொடுக்கிறதனுலே தான்...''

''மூச்!... பேசாதே, மங்களம். அனு, உனக்கும் பெண் என்பது ஞாபகம் இருக்கட்டும்!... டேய், நீ என்னடா சிலையா உட்கார்ந்துட்டே? எழுந்து போய் நாளன்றை 'பார்ட்டி' யைக் கவனி!... நான் சங்கருக்குப் போன் பண்ணி, அவனையும் அடுத்த ஞாயிற்றுக்கிழமை இங்கே வரவழைக் கிறேன்...''

சிந்தனை தோய்ந்த முகத்துடன் சேகர் விடை பெற்றுக் கொண்டான்.

* * *

தலைக்கு மேலே சுழன்று கொண் டிருந்த மின் விசிறியின் வேகத்தைக் கூடக் கணக்கெடுத்து விடலாம்!— சேகரின் தலைக்குள் சுழன்று கொண் டிருந்த சிந்தனையின் வேகத்தைக் கணக் கெடுக்கவே முடியாது! ஆமாம், குலுக் குச் சீட்டில் தன் பெயர் [illegible] வருவதற்கு என்ன [illegible] என்பதைத் தான் அவன் ஆராய்ந்து கொண்டிருந் தான். அவனுடைய கம்பெனியின் விற்பனைப் பொருள்களை விளம்பரம் செய்வதற்கு அழகழகான கற்பனைகளை உற்பத்தி செய்து கொடுத்த மூளை, அவன் சொந்த விஷயத்தில் வேலை நிறுத்தம் செய்துவிட்டது! பள்ளியில் கற்றுக் கொடுத்த கணிதத்தின்படி பார்த்தால், அவனுக்கு ஐம்பது சத விகிதம் வெற்றி; மிகுந்த ஐம்பது சத விகிதம் சங்கருக்கு!

''என்ன வயிற்றெரிச்சல்! அந்த உம்மணுமூஞ்சிப் பயலோடு என்னை ஒப்பிட்டுப் பார்க்கிருயே, அனு? அவன் உனக்கு எந்த விதத்தில் தகுதி யானவன்? எப்போது பார்த்தாலும் சோதனைக் குழாயும் கையுமாக இருப் பானே தவிர உன்னை ஒரு ஷோவுக்கு அழைத்துப் போவான?... மாமா, உங்களுக்குக் கூடவா என் பெருமை தெரியாமல் போய் விட்டது?''

சேகர் 'நறநற'வென்று பல்லைக் கடித் தான்! மாமா ஆலாலசுந்தரம், ஆலகால சுந்தரமாகக் காட்சி தந்தார், அவன் மனத்திரையில்!

அன்றையத் தினம், ஆபீசில் எல் லோரிடமும் சிறி விழுந்தான். உலகமே அவனுக்கு எதிராக முன்னணி வகுத் துக் கொண்டிருப்பதைப் போன்று நினைப்பு! அந்த நினைவினூடே, அடுத்த ஞாயிற்றுக்கிழமை என்று ஒரு நாள் வராமலே இருக்கக்கூடாதா என்ற ஆசையும் எழுந்தது!

'டேய், சங்கர்! உனக்கு ஏனடா அனு? உன் கல்லூரியில் எத்தனையோ பெண்கள் படிக்கிருர்களே? அவர்களில் எவளாவது ஒருத்தியைக் காதல் செய்து பாரேன்?...'

* * *

வியாழக்கிழமை. நகரப் பிரமுகர் கள் ஒருவருடைய குமாரத்தியின் நடன அரங்கேற்றம் அன்று. ஆலால சுந்த ரத்துக்கும் அழைப்பு வந்திருந்தது! அவர் சாதாரணமாக இம்மாதிரி நிகழ்ச்சிகளுக்குப் போவதில்லை. அனு சூயாவை மட்டும் அனுப்பி வைப்பார்.

மாலை ஆறு மணிக்குமேல், மாமா வின் வீட்டுக்குப் போன் செய்து, அனு நாட்டியம் பார்ப்பதற்குத் தன் தாயு [illegible] சென்று விட்டாள் என்பதையும், [illegible]ட்டுக்குத் திரும்பவில்லை என்

177698

பதையும் தெரிந்து கொண்டான். 'டே, சேகர்! உனக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்! வெற்றி, உன் வாசற் படியைக் காத்துக் கொண்டிருக்கிற தடா!... சீரியோ!'—தனக்குத்தானே புகழ்ந்துகொண்டு, டாக்சியில் ஏறி மாமாவின் பங்களாவுக்கு விடச்சொன்ஞன்.

அவன் பங்களாவுக்குள் காலடி எடுத்து வைக்குமுன்பே, "ஹி...ஹி... வாங்க!... வீட்டிலே யாரும் இல்லீங்களே" என்று கூறி வரவேற்ருன், காவல் காத்துக்கொண்டிருந்த கண்ணுசாமி.

"அடேடே, யாருமே இல்லையா?... மாமாவை அவசரமாகப் பார்க்கணுமே?"—தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளாமல் டெலிபோனில் பேசிய தந்திரத்தை எண்ணி மகிழ்ந்தபடியே, முன் ஹாலில் அமர்ந்தான்.

அரைமணி நேரம் சென்று மாமா வந்தார்.

"என்னடா, இன்றைக்கு வியாழக்கிழமைதானே? ஞாயிறு என்று எண்ணிக்கொண்டு வந்தாயா?"

"இல்லை, மாமா. நான் அந்த விஷயத்தையே மறந்து விட்டேன்! நீங்கள் தீர்மானமாக ஒரு திட்டத்திற்கு வந்தபின், அதைக் குறித்து மனதைக் குழப்பிக் கொண்டிருப்பதில் அர்த்தமேயில்லை. இல்லை, மாமா?"

"சரி, இப்பொழுது என்ன திடீர் விஜயம்?"

"ஆபீஸ் வேலையாக அடுத்த தெருவுக்கு வந்தேன். அப்படியே உங்களையும் பார்த்து விட்டுப் போகலாமென்று..."

இருவருக்குமாகக் காப்பி வந்தது. காப்பியை ருசித்தவாறே மாமாவின் முகத்தை உற்று நோக்கினுன், சேகர். திடீரென்று ஏதோ நினைத்துக்கொண்டதைப்போல், "அட, மறந்துவிட்டேனே? இந்தாருங்கள், மாமா" என்று கூறி ஒரு உறை மடல் கடிதத்தை எடுத்து நீட்டினுன்.

"என்ன, இது?"

"தெரியவில்லை, மாமா! சங்கர் கொடுக்கச் சொன்னதாக அவன் காலேஜ் பியூன் சற்றுமுன் கொடுத்து விட்டுப் போனுன்..."

"அனுவுக்கல்லவா எழுதியிருக்கிருன்..."

"..."

"என்ன எழுதியிருப்பான்?"

"நான் என்னத்தைக் கண்டேன், மாமா!... காதல் கீதல் என்று ஏதாவது..."

"ஹா!... காதலாவது, மண்ணுங்கட்டியாவது! அந்தக் காலத்தில் நாங்களெல்லாம் காதல் செய்தா கல்யாணம் பண்ணிக் கொண்டோம்?... சுத்த உதவாக்கரைப் பயல்! அவன் இவ்வளவு அயோக்கியனுக இருப்பான் என்று நான் நினைக்கவே இல்லையே?..."

"கோபப்படாதீர்கள், மாமா. சிறு பிள்ளை. உலக அனுபவம் இல்லாதவன், அவன் சயின்ஸ் புத்தகத்தைக் கட்டிக்கொண்டு அழுவதைத் தவிர வேறு என்ன தெரியும் அவனுக்கு?"

"என்ன தெரியுமாவா? காதல் கடிதம் எழுதத் தெரிந்துக் கொண்டிருக்கிருன்!"

"இந்தக் காலத்தில் இது ஒரு வியாதி, மாமா."

"அப்படியானுல், ஆரம்பத்திலேயே நல்ல மருந்து கொடுத்தாக வேண்டும்!... வளரவிட்டால் ஆபத்துதான்..."

"நான் வருகிறேன், மாமா"

'உம்' என்ற உறுமல் அவனுக்கு விடை அளித்தது.

வாசல்வரை சென்ற அவன் திரும்பி வந்தான்.

"மாமா, அனு எனக்குக் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. அவள் வாழ்வைப் பாழாக்கி விடாதீர்கள்..."

அவர் பதிலுக்குக் காத்திராமல், நாடக பாணியில் வெளியேறினுன், சேகர்.

அன்றிரவு அவனுக்கு உறக்கமே வரவில்லை. அனு அவன் எதிரில் நின்றுகொண்டு அவனைப் பைத்தியமாக்கிக் கொண்டிருந்தாள்!

* * *

ஆபீசுக்கு வந்ததும் வராததுமாக டெலிபோன் ஒலித்தது.

"டேய், இன்றைக்கு நாள் நன்ருயிருக்கிறதாம். சாயங்காலம் ஆறு

மணிக்குமேல் வெற்றிலைப் பாக்கு மாற்றிக்கொள்ளலாம் என்று நிச்சயம் செய்திருக்கிறது. ஆபீஸ் முடிந்ததும் நேரே இங்கே வந்துவிடு..."

டெலிபோன் குழாய் வழியே, செவிகளில் அமுதம் பாய்ந்தோடுகிறதோ என்று சேகர் சந்தேகித்தான்!

"சரி. மாமா. நேற்றைக்கு வந்ததே கடிதம்..."

"...காதல் கடிதம்தான்! பயல், ரொம்ப உருக்கமாக எழுதியிருந்தான்! எனக்கே ஆச்சரியமாகப் போய்விட்டது, 'லாபரடரி'யில் வேலை செய்பவனுக்கு எப்படி 'லவ் லெட்டர்' எழுதத் தெரிந்தது என்று!"

'கடகட'வென்று சிரித்தான், சேகர்.

"அனு இல்லாவிட்டால் அவனுக்கு வாழ்வே இல்லையாம்! அவள் கிடைக்காவிட்டால் ஆயுள் முழுவதும் பிரம்மசாரியாகவே இருப்பானும்!"

"பேஷ்!"

"இன்னும் என்னென்னமோ எழுதியிருந்தான்!... உடனே, நீ சொன்னதெல்லாம் ஞாபகத்துக்கு வந்தது..."

"என்ன மாமா"

"அனு கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. அவள் வாழ்வைப் பாழாக்காதீர்கள்' என்றுயே..."

"ஆமாம்..."

"அதனுலே..."

"சொல்லுங்கள், சொல்லுங்கள்..."

"அதான் சொல்லிக்கொண்டே வருகிறேனே?... ஞாயிற்றுக்கிழமை வரை பொறுத்துக்கொள்ளும்படி அனு கூடச் சொல்லிப் பார்த்தாள்..."

"ஹும்?"

"நான் கண்டிப்பாக முடியாதென்று சொல்லிவிட்டேன்!... சங்கரைத் தவிக்க விடுவதில் நமக்கு என்ன லாபம்?"

"என்ன, என்ன?"

"ஆமாம், சங்கரைக் காக்க வைப்பதில் நமக்கு என்ன லாபம் என்கிறேன்? அனுவின்மேல் உயிரையே வைத்திருக்கிறுன் என்பது தெரிந்துவிட்டது. இனிமேல் கல்யாணத்தை ஒத்திப் போடலாமா? அதனுல்தான் இன்றைக்குச் சாயங்காலமே..."

டெலிபோனில் 'கடக்' என்று சப்தம் கேட்டது. ஆலால சுந்தரம் 'ஹலோ, ஹலோ' என்று அழைத்துப் பார்த்தார். அவருக்குப் பதிலே கிடைக்கவில்லையே! ★

போன்: 151 தந்தி: VESSELS

குறைந்த விலையில் சிறந்த பாத்திரங்கள்

எவர் சில்வர் பாத்திரம், எவர் சில்வர் தகடு,
பித்தளை, செம்புப் பாத்திரம், பித்தளை,
செம்புத் தகடுகள் உத்திரவாதத்
துடன் கிடைக்கும்.

பெ. சீ. சீ. சுந்தரம்மாள் அன் கோ.,

பாத்திர வியாபாரம்

28, வெங்கலக் கடைத் தெரு,

மதுரை.



தீபாவளி —

வினா 1: 'தீபாவளிப் பல்லவி' என்றால் என்ன?

விடை: 'கங்கா ஸ்நானம் ஆயிற்றா?' என்ற கேள்விதான் சென்னை வாசிகளைப் பொறுத்த மட்டில். இக்கேள்வி அபத்தமாகப் படலாம். டெக்னி கலரில் சொட்டுச் சொட்டாகக் குழாய் வடிக்கும் கண்ணீருக்கும் தூய கங்கை நீருக்கும் என்ன சம்பந்தமோ, தெரியவில்லை!

வினா 2: ஒற்றுமையை விளக்கு:

(அ) இதயம்—பட்டாசு.

(ஆ) ரப்பர்ப் பந்து-புதுமாப்பிள்ளை.

விடை—(அ) இரண்டுமே வெடிக்கும் தன்மை யுடையவை. பட்டாசு 'பட,பட' வென்று வெடிப்பதைக் காணும் குடும்பத் தலைவனின் இதயம், தான் உழைத்துச் சம்பாதித்த காசு இப்படிக் கரியாகப் போகிறதே என்ற ஏக்கத்தில் 'படீர்' என வெடித்துச் சிதறலாம்.

'ராபாலு'

(ஆ) இரண்டும் துள்ளும் தன்மையுடையவை. ஒரு சிறு வித்தியாசம் ரப்பர்ப் பந்தைச் சுவரிலோ, தரையிலோ எறிந்தால் தான் துள்ளும்; புது மாப்பிள்ளை காரணமின்றியே இருந்த இடத்திலேயே துள்ளிக் குதிப்பார்.

வினா 3: சிறு குறிப்பு எழுதுக: (1) சாதக பட்சி (2) பட்டுப் புடவை (3) புஸ்வாணம் (4) அமுதம் (5) போதாது, இன்னும் வேண்டும்.

விடை: (1) காவியத்தே மட்டும் காணப்படும் ஒரு விதப் புள். கழுத்தில் ஓட்டையுண்டாம். இதற்கு மழை வருமா என்று ஆவலோடு வாயைப் பிளந்து கொண்டிருக்குமாம். தீபாவளிக்கு வரப்போகும் கணவனை நினைந்து ஏங்கியிருக்கும் ஏந்திழை, ஏறக்குறைய சாதக பட்சியின் நிலையிலுள்ளவளே!

(2) மனைவியின் ஆசைக்கனவு. தீபாவளிக்கு ஏறக்குறைய ஒரு மாதம் முன்பே தலை காட்டத் தொடங்கி விடும்! குடும்பத் தலைவருக்கு இதுவே மயக்க மருந்தாகும். (குளோரோபாரம் போன்ற போதை மருந்து. சுக்கு, திப்பிலியால் செய்யப்படும் தீபாவளி மருந்தல்ல.)

வினா-விடை!

(3) இது வெடிக்காமல் சீறும். கடிகாரத்தையோ வைர மோதிரத்தையோ எதிர்பார்த்து மாமனார் வீட்டுக்குத் தலைத் தீபாவளி கொண்டாட வந்த மாப்பிள்ளை ஏமாற்றத்துக் குள்ளானால், புஸ்வாணம் போல் சீறிக்கொண்டே தானிருப்பார்.

(4) மாப்பிள்ளைக்கு மனைவி கையால் கொடுக்கப்படும் சர்க்கரை போடாத காப்பி.

(5) குறைந்த சம்பளக்காரர்களின் அவலக் குரல் அல்ல. 'தீபாவளி மலர்' பிரதிகள் மேலும் தேவை என்று ஏஜண்டுகளிடமிருந்து பத்திரிகைக் காரியாலயத்துக்கு வரும் தந்தியின் வாசகம்.

வினா 4: (அ) கறவை மாடு (ஆ) சனியன் (இ) சொர்க்கம்-இவை யாரை, எதைக் குறிப்பன? (மாப்பிள்ளையின் கண்கொண்டு பார்த்து விடையளிக்கவும்.]

விடை: (அ) மாமனார். (ஆ) அடிக்கடி எட்டிப் பார்த்துத் தொல்லை தரும் மைத்துனன் (பொடிப் பயல்.) (இ) மாமனார் வீட்டு மாடி அறை (மனைவி அருகிலிருக்குங்கால்).

வினா : தலைத் தீபாவளிக்கும் அடியிற் கண்ட சொற்களுக்குமுள்ளநெருங்கியதொடர்பை விளக்கு: (1) துறவறம் (2) பெருமூச்சு (3) சூன்யம் (4) போனஸ் (இனம்)

விடை: (1(தலைத் தீபாவளிக்குப் பிறகு பெண்ணைப் பெற்றவன் எய்தும் நிலை. விளக்கம் தேவையில்லை. ஐந்து பெண்களைப் பெற்றவர்களிடம் விசாரித்துப் பார்க்கவும். காஷாயம் உடுக்கவோ, திருவோடு ஏந்தவோ, தலையை மொட்டையடித்துக் கொள்ளவோ தேவையில்லை.

(2)தலைத் தீபாவளிக்கு வந்த மாப்பிள்ளையின் வாய் மூலம், 'போய் வருகிறேன்' என்ற சொற்களைக் கேட்ட மாமனார் நிம்மதியுடன் விடும் மூச்சுக்குப் பெரு மூச்சு எனப் பெயர். உரிய காலத்தில் மாப்பிள்ளை திரும்பிச் செல்லாவிடில் இதுவே மாமனாரின் கடைசி மூச்சாகவும் ஆகலாம்.

(3) வேட்டகத்தில் மனைவியின் முகத்தைப் பார்த்துப் பரவசமடைந்த மாப்பிள்ளையின் கண்கள், திரும்பிச் செல்லுங்கால் நோக்கிய திசையெல்லாம் காண்பது இதுவே. மனைவிக்கும் இந்த விடை பொருந்தும் என்பது கூறாமலே விளங்கும். பெண்ணைப் பெற்றவனுடைய மணிபர்ஸிலும்

இது காணப்படும் (மாப்பிள்ளை மாமனாரின் பர்ஸையும் வாங்கிக் கொள்ளாமல் போயிருந்தால்!).

(4) உழைப்பைப் பாராட்டி முதலாளி மனமுவந்து அளிக்கும் உபரி ஊதியம் என்பது பொதுஜன அபிப்பிராயம். உறங்குவதற்காகவே ஆபீஸ் செல்லும் பேர் வழிகளும் இதே அபிப்பிராயம் கொண்டிருந்தால் ஆச்சர்யப்படுவதற்கில்லை. 'கொடுக்கிற சம்பளமே தண்டம்; போனஸ் ஒரு கேடா? ' என்பது முதலாளியின் அபிப்பிராயம். 'வருமான வரி இலாகாவுக்குக் கொடுப்பதை, வருடம் பூராவும்ஆபிசுக்கு வந்துபோகிற இந்தத் தூங்கு மூஞ்சிக்குத் தான் கொடுக்கலாமே' என்பது முதலாளியின் அந்தரங்க அபிப்பிராயம். இந்த 'போனஸ்' தொகைக்கு ஒரு சைக்கிள் வாங்கவேண்டும், கடிகாரம் வாங்க வேண்டும் என்றெல்லாம் தீர்மானம் செய்துகொண்டு வீடு போய்ச் சேர்ந்தவுடன், கிருகலட்சிமியின் கைக்கு மாறிவிடுவதும் உண்டு. பால்காரர், சலவைத் தொழிலாளி, இவர்கள் கைக்கு 'இனும்' என்ற பெயரில் மாறிவிடும். (நீ வெளுத்துக் கிழிக்கிற லட்சணத்துக்கு 'இனும்' வேறு ? என்று நினைப்பது சகஜம்)

வினா 6: கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்:

1. மாமனார் தம் மாப்பிள்ளையை... உருவிலும் காண்பதுண்டு.

2. தீபாவளிக் கதைகளில்...அதிகம் அடிபடுவதுண்டு.

3. தீபாவளி சீசனில்...எழுதுவோருக்கு நல்ல கிராக்கி உண்டு.

விடை: (1) நரகாசுரன் (2) ரெயில் வண்டி (3) கவிதை.

Telephone: MADRAS 4890. MADURAI: 581

இன்பம் தரும்

31

301

3001

ஜவ்வாது பத்திகள்

சுகந்த மண்டலம்

உரிமையாளர்கள்:
S.V. பழனிமலை
S.V. ரெங்கசாமி

மதுரை • மதறாஸ் • பெங்களூர் • விஜயவாடா

சுகுணா விற்த சோதனை

எல்லார்வி

சுகுணா 'இடி, இடி' என்று சிரித்தாள். சுந்தரத்திற்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. அவளை எரித்து விடுகிறாற்போல விழித்துப் பார்த்தான். அவன் அப்படிப் பார்க்கப் பார்க்க அவள் சிரிப்பு அதிகரித்தது. அவள் சிரிக்கச் சிரிக்க அவனுக்கு ஆத்திரம் அதிகரித்தது. கடைசியில் பொறுமையை இழந்து, "சுகுணா!..." என்று கூச்சல் போட்டான்.

சுகுணா சிரிப்பை நிறுத்தினாள். "அகாலத்தில் எதற்காக இப்படி இரைகிறீர்கள்?'' என்றாள், அதற்குமேல் அந்நிலையை நீடிக்க விரும்பாதவள் போல.

ஆனால், சுந்தரமோ அத்தனை சுலபமாய் அடங்குபவனாக இல்லை. அவள் தணிந்து பேசப் பேச அவன் ஆத்திரத்துடன் ஸ்தாயி சுருதியில் பேசிக்கொண்டே போனான்.

"எண்ணிக் கொள்ளட்டும்! யார் வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளட்டும்! நீ இப்படியே அடிக்கடி நெகிடி செய்து பேசவும் கிண்டலாகச் சிரிக்கவும் இடம் கொடுக்கமாட்டேன்! இந்த வீட்டில் இனி இரண்டு பேரின் அதிகாரம் கூடாது. ஒன்று, உன் இஷ்டத்திற்கு உனக்கு விருப்பமான காரியங்களை நீ செய்து கொண்டு போகவேண்டும்; அல்லது என் இஷ்டத்திற்கு எனக்கு விருப்பமான காரியங்களை நான் செய்ய வேண்டும். இரண்டில் ஒன்று இன்றே, இப்பொழுதே தீர வேண்டும்'' என்று படபடப்பாகப் பேசினான்.

சுகுணா நயந்து போனாள். இழைந்த குரலில் மெல்லச் சொன்னாள் :

"இதோ பாருங்கள், உங்கள் பேச்சில் முழுக்க முழுக்கப் பச்சைக் குழந்தையின் தன்மை ஒலிக்கிறதே தவிர, அது, ஆண்டு அநுபவித்து நாலு குழந்தைகளைப் பெற்று வளர்த்த குடும்பத் தலைவரின் பேச்சாக இல்லை. இரண்டில் ஒன்று இன்றே தீரவேண்டும் என்கிறீர்களே, இது என்ன பேச்சு? ஒரு குடும்பத்தில் 'இரண்டு' என்ற பேச்சுக்கே இடம் கிடையாதே? இதுவரையில் உங்கள் பேச்சுக்கு மாறாக நான் ஏதாவது சொன்னது உண்டா? இப்பொழுதுந்தான் ஆகட்டும், ஏறுமாறாக ஏதாவது சொல்கிறேனா? எதிலும் ஓர் அளவோடு இருக்கவேண்டும்; எதையும் அதிகமாக அள்ளிப் பூசிக்கொள்ள வேண்டாம் என்று தானே சொல்கிறேன்? கடந்த இருபது ஆண்டுகளில் நம்மோடு நட்புக் கொண்டவர்களின் எண்ணிக்கை, அவர்கள் விஷயத்தில் நாம் கொண்ட ஈடுபாடு, அவர்களுக்காக நாம் செய்துள்ள செலவு முதலியவற்றுக்கு ஒரு கணக்கு உண்டா? இவ்வளவுக்கும் ஈடாக நமக்குக் கிட்டிய கெட்ட பெயருக்குத்தான் ஓர் எல்லையுண்டா? அதனால் நமக்கு ஏற்பட்ட மனோ வியாகூலத்திற்குத்தான் ஓர் அளவு உண்டா? இதையெல்லாம் உத்தேசித்து, இந்தக் குடும்பத்தின் நன்மை தீமைகளில் எனக்கும் ஓரளவு பாத்தியதை உண்டு என்ற நினைப்பில் ஏதோ இரண்டு வார்த்தை சொன்னால்...''

சுகுணா பேசிக்கொண்டே போனாள். சுந்தரம் கேட்டுக் கொண்டே இருந்தான். அவள் பேச்சில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதை அவன்

குமாரசாமியைப் பொறுத்த வரையில் எல்லா இதயங்களும் கதவுகளை மூடிவிட்டன. சுந்தரம் மாத்திரம்தான் அவனை வரவேற்றான்; ஆனால் அந்த வரவேற்பு சுகுணாவிற்கு இடியாக இருந்தது!

உள்ளம் உணர்ந்தது. ஆனால், அதை வெளிப்படையாக ஒப்புக் கொள்ள அவனுடைய ஆணவம் அனுமதிக்க வில்லை.

"இந்தக் கதையெல்லாம் என்னிடம் வேண்டாம். குமாரசாமி என்று இங்கே வந்து காலடி வைத்தானோ அன்றிலிருந்தே நீ மாறி விட்டாய். பத்திரகாளி ஆகிவிட்டாய்."

சுகுணாவின் உள்ளம் பொறுமையை இழந்தது; நிஷ்டூரம் தொனிக்க, "நீங்கள் மட்டும் மாறவில்லையா?" என்றாள்.

"என்ன சொன்னாய்?" சுந்தரம் தன் இருக்கையினின்றும் எழுந்தான். அவளை நோக்கிப் பாய்ந்தான். அம்மாவுக்கு அடி விழுந்து விடுமோ என்று அருகே இருந்த குழந்தைகள் அஞ்சி நடுங்கின. இதற்குமேல் பேச்சு வளர்ந்தால் விரசம் ஆகிவிடும் என்று எண்ணியவள் போல் சுகுணாவும் சட்டென்று அப்பால் சென்றாள். ஆனால் என்ன பிரயோசனம்? அவள் சமையல் அறையில் இருந்தபடி புலம்பினாள்; அவன் தன் அறையில் இருந்து உறுமினான்.

"இவளைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர் வேண்டுமானாலும் இங்கே வரலாம்; எவ்வளவு நாள் வேண்டுமானாலும் இருக்கலாம்; அவர்களுக்கெல்லாம் பணத்தை வாரி இறைத்து என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; அருமருந்து போல என்னை நாடி ஒரு ஜீவன் வந்தது இவளுக்கு ஆகவில்லை" —இது அவன்.

"நான் என்றாவது, எந்தக் காரியத்திலாவது குறுக்கே நின்றது உண்டா? மறுத்துப் பேசியது உண்டா? எள் என்பதற்கு முன் எண்ணெயாய் இருப்பவள் நான். வேண்டாமென்றா சொல்கிறேன்? எதிலும் ஓர் எல்லை இல்லையா? கண் மூடித்தனமாக இப்படி நடந்து கொண்டால் இதன் முடிவு என்ன ஆகும்?" – இது அவள்.

இப்படி அவனும் அவளும் தனித் தனியே புலம்பிக் கொண்டிருக்கையில் இதற்குக் காரணகர்த்தாவான குமாரசாமி அங்கே வந்தான். நிலைமையில் மாறுதல் ஏற்பட்டது.

* * *

சுந்தரமும் குமாரசாமியும் சின்னப் பிராயத்திலிருந்து தோழமை உடையவர்கள். தோழமை என்றால் சாமானியமாக அல்ல. ஈருடல் ஓர் உயிர் என்பார்களே, அத்தகைய நட்பு. குமாரசாமி இசைக்கலைஞன் மகன்; சுந்தரம் மிராசுதார் மகன். இவர்களுடைய கூட்டுறவு கிராமத்தில் யாருக்குமே பிடிக்காத செயல். நாள் ஆக ஆக, அவர்கள் வளர வளர அவர்கள் நட்பும் வளர்ந்தது; முதிர்ந்தது. குமாரசாமி கலையில் தேர்ந்தான்; புகழை அடைந்தான். சுந்தரம் கல்வியில் தேர்ந்தான்; உத்தியோகத்தில் அமர்ந்தான். இருவருக்கும் திருமணம், இல்லற வாழ்வு, மக்கட் பேறு எல்லாம் ஏற்பட்டன.

சுந்தரம் உத்தியோக சம்பந்தமாக வெளியூர் சென்றான். குமாரசாமி ஊரோடு இருந்தான். நாளடைவில் அவனுடைய புகழ் மங்கத் தொடங்கிற்று. வருவாய் குறையத் தொடங்கிற்று. காரணம் அவனுடைய இயல்பு தான். பார்த்தால் பசுப்போல; பாய்ந்தால் புலிபோல! பெரியோரை மதிப்பதில்லை. கலைஞர்களைப் பாராட்டுவதில்லை. மாறாக எல்லோரையும் குறைத்துப் பேசினான்; இகழ்ந்து தூற்றினான். 'குமாரசாமியா? சுத்த அகம்பாவி ஆயிற்றே!' என்று எல்லாரும் ஒருமுகமாக நிந்திக்கலாயினர். எல்லாரும் என்றால் பெற்ற தாய், கட்டிய மனைவி இருவர் நீங்கலாக உற்றார், உறவினர், உள்ளூரார், வெளியூரார் அனைவருந்தான். யாரும் அவனை ஆதரிப்பதில்லை. முன்பு உள்ளூரிலும், வெளியூர்களிலும் பெரிய பெரிய தனவந்தர்கள், ஜமீன்தார்கள், மகாராஜாக்கள் ஆகியோரிடையேயும் அவனுக்கு இருந்த செல்வாக்கு அனைத்தும் கனவுபோல் ஆயின. பெற்ற தாயும் கட்டிய மனைவியும் மட்டும் என்ன? மற்றவர்களைப்போல் அவர்களும் வாய்விட்டுத் தூற்றவில்லையே தவிர உள்ளுக்குள் வேதனைப்பட்டு விண்டு விரிந்தனர். உண்மையைப் மறைத்து ஒரு பேச்சு: 'தந்தையோடு அதிருஷ்டம் போயிற்று' என்பது. எல்லாருமே இதை ஏற்றுக் கொண்டு விடுவார்களா?

வரவு இல்லை என்றால் இருப்பைக் கரைக்க வேண்டியதுதானே? நிலம் நீச்சு, வீடு வாசல் எல்லாம் ஒவ்வொன்

ருய்க் குமாரசாமியை விட்டு விலகத் தொடங்கின. பிறகு நகை நட்டு, பாத்திரம் பண்டம் மற்றும் தட்டு முட்டுச் சாமான்கள் எல்லாம் தீர்ந்தன. வீடு வெறும் வீடாக ஆயிற்று. இத் தகைய நிலையிலும் குமாரசாமி தன்னிடம் உள்ள குறையைச் சற்றும் எண்ணிப்பார்க்கவே இல்லை. அவனுடைய உறவினர்கள் பலர் கலையிலே சிறந்து செல்வாக்கிலே மிகுந்து விளங்கினர். அவன் அவர்களிடம் அணுகி அநுசரிப்பாக நடந்து கொண்டால் நிலைமையில் மாறுதல் ஏற்படலாம்; அவன் அதைச் செய்யவில்லை. செய்யாததோடு செயலில் உள்ள நண்பர்களையும் உறவினர்களையும் தூற்றிக் கொண்டு அலைந்தான். அதனால் போக்குவரத்துக் குறைந்தது; பேச்சு வார்த்தை நின்றது. குமாரசாமி அனைவராலும் வெறுத்து ஒதுக்கப் பெற்ற மனிதன் ஆனான்.

இனி இங்கே இருந்து பயன் இல்லை என்ற முடிவுடன் குடும்பத்தோடு வெளியூர் சென்று வசிக்கலானான். இடையே ஒரு சமயம் சுந்தரம் கிராமத்திற்குச் சென்றான். தன் நண்பனைப் பற்றி வினவினான். ஊரில் உள்ளவர்கள் கிண்டலும் கேலியுமாகப் பேசினார்கள். 'நல்ல மாடானால் உள்ளூரில் விலைப்படாதா?' என்றார்கள். 'வயிறு காய்ந்தாலும் அகந்தையில் குறைவில்லை' என்றார்கள். 'வரவர அவன் கலையும் சோபிதமாக இல்லையப்பா' என்றார்கள். 'கர்நாடகமும் இல்லை; நவீனமும் இல்லை. எதிலும் சேராத முறையில் என்னவோ அழுது வடிகிறான்' என்றார்கள்.

இப்படி ஒரு மூகமாக எல்லாரும் குமாரசாமியைக் குறைத்துப் பேசப் பேச, சுந்தரத்திற்கு அளவு கடந்த துயரம் ஏற்பட்டது. நண்பன் எங்கே இருக்கிறான் என்று விசாரித்துத் தேடிச் சென்று கண்டுபிடித்து ஆறுதல் கூறி விட்டுத் தன் இருப்பிடம் திரும்பினான்.

காலம் சென்றது. சுந்தரம் உத்தியோகத் துறையோடு தொடர்புடைய வேறொரு துறையிலும் ஈடுபாடு கொண்டு ஓரளவு வருவாயும் சிறிது செல்வாக்கும் உடையவனாக வாழ்ந்து வந்தான். ஒருநாள் முன் அறிவிப்பு ஏதும் இன்றிச் சுந்தரத்தைத் தேடி வந்தான் குமாரசாமி. நண்பனைக் கண்டதும், அவன் உடல் நிலையைப் பார்த்ததும் சுந்திரத்திற்கு உள்ளத்தை என்னவோ செய்தது. அவனுடைய நிலைமையைக் கேட்டதுமோ கண்களில் நீர் துளும்பிற்று. நெஞ்சம் விம்மிற்று. "இன்னும் கொஞ்ச நாள் நான் அங்கேயே இருந்தால் பெருகி வரும் காவிரியில் தாய், தாரம், மக்கள் அனைவரையும் தள்ளிவிட்டு நானும் விழுந்து மடியவேண்டியதுதான். தமக்கை, தமக்கை கணவர் ஆகியோர் கடைசி வரையில் ஓரளவு அன்பாக இருந்தனர். இப்போது அவர்களும் கைவிட்டு விட்டனர். இனி எனக்கு எல்லாம் நீங்கள்தான். இதுவரையில் நான் அகந்தையால் அழிந்தேன் என்பதை நன்கு உணர்கிறேன். எப்படி நடந்து கொண்டால் வாழ முடியும் என்பதை அறிகிறேன். இன்று முதல் என் வாழ்வு உங்கள் கையில். மகமாயி சத்தியமாகச் சொல்கிறேன்; இனி நீங்கள் கிழிக்கிற கோட்டை நான் தாண்டமாட்டேன்"— இப்படி அவன் தொடர்ந்து சொல்லிக் கொண்டே போனான்.

அதையெல்லாம் கேட்கக் கேட்கச் சுந்தரத்தின் நெஞ்சம் விம்மி விம்மித் தணிந்து கொண்டிருந்தது. குமாரசாமி அழமாட்டாக் குறையாக அனைத்தையும் சொல்லித் தீர்த்தான். சுந்தரம் பெரு மூச்செறிந்தான். சிறிது நேர மௌனத்திற்குப்பின் சொன்னான்: "குமாரசாமி, இந்தப் பட்டணம் இருக்கிறதே, இதை நாடி வந்தவர் எவரும் சோடை போனதே இல்லை. உன்னிடம் கலை இருக்கிறது. என்னிடம் சிறிது செல்வாக்கு இருக்கிறது. முயல்வோம். ஆண்டவன் நல்ல வழிவிடுவான்."

இப்படித் தேறுதல் கூறிய சுந்தரம் உள்ளே சென்று தன் மனைவி சுகுணா விடம் குமாரசாமியைப் பற்றி எடுத்துரைத்தான். அவன் பெரிய பீடிகையுடன் பேச ஆரம்பிக்கிற போதே சுகுணா இடை மறித்தாள்.

"உங்கள் பேச்சிலிருந்தே உங்களுடைய நட்பின் வலிவு நன்கு விளங்குகிறது. அண்டி வந்தவர்களை ஆதரிக்க வேண்டியது அவசியந்தான். ஆயினும் இது கிராமம் அல்ல. இந்த வீடு நம்முடையதல்ல. குடியிருக்கிற இடம்.

கால நிலை பசுமையாக இல்லை. நீங்கள் முழு நேரமும் இடைவிடாமல் உழைத்தால் தான் நம் குடும்ப வண்டி தங்குதடையின்றி ஓடும். இதெல்லாம் உங்களுக்குத் தெரியாததல்ல. ஆகவே, பொறுப்பை எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளலாம் என்பதை நன்கு நிதானித்து, யோசித்து எதையும் செய்யுங்கள்'' என்றாள்.



சுந்தரத்திற்கு உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரையில் பற்றி எரியத் தொடங்கிற்று. ஆருயிர் நண்பனின் அவலமான ஓலத்தைச் செவிமடுத்து அந்தத் துயர உணர்விலே முழுக்க முழுக்கத் தோய்ந்துபோன உள்ளத்தினனாய் உள்ளே வந்து மனைவியிடம் அனைத்தையும் கூறி அவளுடைய அன்பையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் பெற நினைத்த அவனுக்கு அவளுடைய பேச்சு ஆத்திரத்தை உண்டு பண்ணிற்று. அவளை வெறித்து நோக்கினான்; முதல் முறையாக, "சீ! மூடு வாயை!'' என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போய் விட வில்லை; அவனை நிமிர்ந்து பார்க்கவும் இல்லை. தன் காரியங்களில் ஈடுபடலானாள். சுந்தரம் குளிக்கச் சென்றான்.

அவன் குளியல் அறையிலிருந்து வெளிப்பட்டபோது கூடத்தில் இரண்டு மணைகளும், அவற்றின் எதிரே இரண்டு இலைகளும் போடப் பெற்றுத் தண்ணீர் தெளித்து எல்லாம் தயாராக இருந்தன. 'என்ன இருந்தாலும் என் சுகுணா சுகுணாதான்' என்று மனசுக்குள் எண்ணிக் கொண்டான்.

சாப்பாடு நடை பெற்றது. நண்பர்கள் முன்புறத்து ஹாலில் தாம்பூலம் தரித்து நாளைய செய்திகள் பற்றிப் பல பல பேசியபடி ஓய்வெடுத்துக் கொண்டார்கள். பிற்பகலில் சிற்றுண்டி, காபி. மாலையில் வெளியே புறப்பாடு.

சுந்தரம் தன்னுடைய நண்பர்களிடமெல்லாம் குமாரசாமியை அழைத்துச் சென்று அறிமுகம் செய்துவைத்து அவனைப்பற்றி வானளாவப் புகழ்ந்து பேசி, 'இயன்ற அளவு உதவ வேண்டும்' என்று ஒவ்வொருவரிடமும் கேட்டுக் கொண்டான். மறுநாள் முதல், காலை மாலைகளில் பரிச்சயமுள்ள செல்வந்தர்கள், பெரிய கலைஞர்கள் முதலியோரிடம் குமாரசாமியை அழைத்துச் சென்று ஆதரவு தேடுவது என்ற செயலைத் தன்னுடைய முழு முக்கியமான அலுவலாகக் கொண்டான்.

சென்னை போன்ற நகர்ப்புறங்களில் தன்னுடைய சொந்த அலுவல்களை விட்டு இன்னொருவரின் சொந்த நன்

மைக்காகப் பாடுபடும் பைத்தியம் சுந்தரத்தைப் போல் வேறு எங்காவது இருக்கமுடியுமோ என்று அவனை அறிந்தவர்கள் அங்கலாய்த்தார்கள். சுந்தரம் அப்படித்தான் வெறி பிடித்த நிலையில் குமாரசாமியை இழுத்துக் கொண்டு தெருத் தெருவாக வீடு வீடாக அலைந்தான். அவன் நேரமெல்லாம் பாழாயிற்று. பணமெல்லாம் செலவாயிற்று. பல பேர் நகைக்க இடமாயிற்று. சுகுணா மனம் ஒடிந்து போனாள். அவள் செலவைப் பற்றிக் கவலைப்படவில்லை. பிறருக்கு உதவக்கூடாது என்று எண்ணவும் இல்லை. ஆனால் தன் கணவன் அவனுடைய நண்பன் மேல் வைத்திருக்கும் அன்பைக் கண்டு தான் அஞ்சி நடுங்கினாள். கண்மூடித்தனமான அந்த அன்பு ஒற்றுமை மிக்க தம்பதிகளான தங்கள் வாழ்க்கையில் எத்தகைய விபரீதத்தை விளைவிக்குமோ என்று ஐயுற்றாள்.

அவளுடைய ஐயப்பாடு தவறானதல்ல. சுந்தரம் வேலையை இழந்து, வீட்டில் உள்ள பொருள்களை இழந்து, பலருடைய மனஸ்தாபத்தை

அடைந்து, திண்டாடுகிற நிலை ஏற்பட்டு விடுமோ என்று எண்ணக்கூடிய நிலையிலேதான் இருந்தது அவனுடைய போக்கு. அதுமட்டுமா? குமாரசாமியை அவன் தன் வீட்டிலேயே தங்கவைத்துக் கொண்டான். அதுதான் அனைத்தையும் விட அளவு கடந்த துயரத்தை அளிப்பதாக இருந்தது சுகுணவுக்கு.

"என் நண்பன் மிகவும் நல்லவன்" என்று சுந்தரம் வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்தாலும் குமாரசாமியின் நடை, பார்வை, பேசும் முறை முதலிய அம்சங்கள் அவளுக்குப் பிடிக்கவில்லை. அவனை நல்லவனாக ஒப்புக்கொள்ள அவள் உள்ளம் மறுத்தது. 'நல்லவனாகவே இருக்கட்டுமே. எல்லை மீறின பழக்கம் வேண்டுமா?' என்று எண்ணினாள்.

எண்ணம் இப்படி இருந்தாலும் அதை அவள் செயலில் கொணரவில்லை. வந்த விருந்தாளிக்கு வயிறு வாடாமல், அகங்குளிர உணவளிப்பது என்பது அவளுடைய பிறந்த குலப் பண்பு. புகுந்த குலத்திலும் அந்தப் பண்புக்குக் குறைவில்லை. அவள் மட்டும் எப்படி மாறிச் செயல்படுவாள்? ஆயினும்,இடையிடையே கணவனுக்கு நல்லுரைகள் பல சொல்லிக் கொண்டும் வந்தாள். அதனால், அவள் அடைந்த பலன் வசவும், திட்டும், சில சமயம் அடியும் புடையும்.

ஒரு நாள் அவன் உணர்ச்சி வசமாகிக் கூவினான்: "இதோ பார் சுகுண, நீ தலை கீழாக நின்று தவம் செய்து தடுத்தாலும் சரிதான்; சந்திர சூரியர் திசை மாறினாலும் சரிதான்; ஊரிலே பிதிரார்ஜிதமாக இருக்கிற நிலமே அழிந்தாலும் சரிதான். நான் முன் வைத்த காலைப் பின்னுக்கு இழுக்க மாட்டேன். எப்படியாவது என்னுடைய நண்பன் குமாரசாமியின் குடும்பத்தைக் காப்பாற்றியே தீருவேன்" என்று கர்ஜித்தான்.

அப்போதுதான் சுகுண இடி இடி என்று சிரித்தாள். அதன் விளைவு விபரீத நிலையை எய்தியதும் அவள் வாய் மூடி மௌனியானாள். அன்று முதல் அவள் குமாரசாமியைப் பற்றி ஒரு வார்த்தைகூடக் கணவனிடம் பேசுவதே இல்லை.

நாட்கள் சென்றன. சுந்தரத்தின் முயற்சியிலே வெற்றி தலை நீட்டிற்று. குமாரசாமியின் வாழ்க்கையிலே பசுமை ஒளி தென்பட்டது. சுந்தரத்தின் நண்பர்களில் ஒருவரான பாலு அவனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி குமாரசாமிக்கு உதவ முன் வந்தார். ஆனால், குமாரசாமியின் துரதிஷ்டம் முன் நின்று அந்த நண்பரின் முயற்சிகளில் தாமதத்தைத் தோற்றுவித்தது. அங்கிலையில் ஒரு நாள் குமாரசாமி அலுத்துக் கொண்டான்.

"விளையாட்டுப்போல மூன்று மாத காலம் ஓடியே போய் விட்டது. ஒன்றுமே கைகூடி வரவில்லை. அந்தப் பாவி பாலு பார்த்து ஏதாவது செய்தால் உண்டு. அவர் பேசாமல் இருக்கிறாரே" என்றான்.

மறுநாள் அதே நேரத்தில் அந்த நண்பர் பாலு படுக்கையில் கிடந்து புழுவாய்த் துடிக்க நேர்ந்தது. முதல் நாள் காலையில் குமாரசாமியின் பல்லில் விழுந்த அவர் மறுநாள் காலையில் மாடிப் படிக்கட்டிலிருந்து கீழே விழுந்தார். கணுக்கால் எலும்பு முறிந்து போயிற்று!

இந்த நிகழ்ச்சி சுந்தரத்தின் உள்ளத்தைக் கூடப் பாதித்து விடடது. குமாரசாமியிடம் அவன கொண்டிருந்த தூய அன்பிலே சின்னஞ்சிறு கறுப்புக்கோடு விழுந்தது. ஆயினும் அதற்காக நண்பனை முன்னிட்டுச் செய்கிற முயற்சிகளில் சிறு குறையும் இல்லை. அவனுடை நண்பர் பாலு தம்முடைய உடல் உபாதையையும் மறந்து சுந்தரத்தை உத்தேசித்துக் குமாரசாமிக்காகப் பாடுபட்டார். நாலைந்து இடங்களில் குமாரசாமிக்கு 'டியூஷன்' ஏற்பாடு செய்தார். குமாரசாமி நல்ல நாள் பார்த்துக்கொண்டு அந்த இடங்களுக்கெல்லாம் செல்ல, அந்தக் குடும்பங்களில் ஒவ்வொரு வகையான இடையூறு ஏற்பட்டு எல்லாம் தடைப்பட்டுப் போயின. கடைசியில் தெய்வச் செயலாக ஒரே ஓர் இடத்தில் ஒரே ஒரு பாடம் குதிர்ந்தது. சில நாள் கழித்து அதே நண்பரின் முயற்சியாலேயே இன்னொரு பாடமும் கிடைத்தது. குமாரசாமி இரு இடங்களுக்கும் சரிவரப் போய்ப் பாடம் சொல்லி

வந்தான். அவனை ஒழுங்காக நடந்து கொள்ளும்படி சுந்தரம் தூண்டிக் கொண்டே இருந்தான்.

குமாரசாமிக்குப் பணமுடை ஏற்படுகிற போதெல்லாம் சுந்தரம் பணம் கொடுத்து உதவினான். தன் கையில் இல்லாவிட்டால் பிறரிடம் கடன் வாங்கிக் கொடுத்து உதவினான். நெருங்கிப் பழகுகிற பத்திரிகை ஆசிரியர் ஒருவருக்குக் குமாரசாமியை அறிமுகம் செய்துவைத்து, பிரசுரத்திற்கென்று பாடல்கள் சில எழுதித் தரச் செய்து ஒரு தொகை வாங்கி அளித்தான்.

இப்படியாகக் குமாரசாமிக்கு உதவும் பணி நீள நீளச் சுந்தரத்தின் தொழில் துறை அலுவல்கள் சுமித்துப் போயின. போதாக்குறைக்கு குமரசாமி எந்நேரமும் அவனிடம் வந்து 'தொண தொண' என்று வாய் ஓயாமல் பேசி அவன் நேரத்தையெல்லாம் பாழாக்கினான்.

இடையே ஒரு முறை சுந்தரம் கிராமத்திற்குச் சென்றான். அங்கே எல்லாரும் அவனை வளைத்துக்கொண்டார்கள். "குமாரசாமி அங்கே வந்திருக்கிறானமே? உன் ஆதரவில் இருக்கிறானமே? இங்கே இருந்தபோது நீ அவனைக் கட்டிக் கொண்டு அழுததெல்லாம் போதாதா? காசிக்குப் போயும் கர்மவினை தொடர வேண்டுமா? அவன் உறவு வேண்டாமப்பா. அமீனா புகுந்த வீடும் ஆமை புகுந்த வீடும் உருப்படாது என்பர். குமாரசாமி காலடி வைக்கும் இடம் துடைத்துப் போய் விடும். அவனால் உன்னுடைய கண்ணியம் குறையும்; பலருடைய பொல்லாப்பு நிறையும். கடைசியில் அவன் உன்னையே தூற்றிக் கொண்டு கிளம்பி விடுவான். பிறகு நீ மாளாத மன வேதனையை அடைவாய்"

இப்படிப் பலரும் பல பல பேசினார்கள். அதையெல்லாம் கேட்டபோது சுந்திரத்திற்கு அவர்கள் மீது ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. என்றாலும் தனிமையில் இருந்து சிந்தித்தபோது அவர்கள் பேச்சில் ஓரளவு உண்மை இருப்பதும் புலன் ஆயிற்று.

குமாரசாமிக்கு எத்தனையோ இடங்களில் பாடம் ஏற்பாடானதும், அவன் பாடந் தொடங்க நாள் குறிப்பிட்டுக் கொண்டு போனபோது அங்கங்கே அந்த அந்தக் குடும்பங்களில் பல பல இன்னல்கள் நேர்ந்ததும், கைக்கு எட்டியவை வாய்க்கு எட்டாமல் போனதும், அவனைப் பார்க்கிற போதே சிலர் அவனிடம் தப்பபிப்பிராயங் கொண்டதும், அவன் தன்னை அண்டி வந்து நெருங்கிப் பழகத் தொடங்கினதிலிருந்து தன் குடும்பத்தில் படிப்படியாகப் பசுமை மாறி வறுமை தலை நீட்ட ஆரம்பித்ததும்—ஆகிய எல்லாம் தொடர்ந்து நினைவில் எழுந்தன. 'ஊர்க்காரர்கள் நீண்ட நாளைய அநுபவத்தில் பேசுகிறார்கள். அனைத்திலும் மிக அநுகூலமாக நடந்து கொள்ளும் இயல்புடைய சுகுணாவோ இவன் விஷயத்தில் மட்டும் எடுத்த எடுப்பிலேயே தடுத்துப் பேச ஆரம்பித்து விட்டாள். இப்படி எல்லாராலும் வெறுத்து ஒதுக்கப் பெறும் ஒருவனிடம் நான் மட்டும் நீங்காத் தொடர்பு கொண்டு உழல்கிறேன். இதன் முடிவு எப்படியோ?' என்று எண்ணமிட்டான் சுந்தரம்.

"ஊருக்குப் போகிறீர்களே, என் மனைவி மக்களைப் பார்த்துத் தைரியம் சொல்லி வாருங்கள்" என்று கூறியிருந்தான் குமாரசாமி. அதன்படி சுகுணாவை அழைத்துக் கொண்டு குமாரசாமியின் மனைவி மக்களைப் பார்க்கச் சென்றான் சுந்தரம். பேச்சு வாக்கிலே, குமாரசாமிக்காகச் சுந்தரம் படும்பாடு, குமாரசாமி ஏறுமாறாக நடந்து கொள்ளும் முறை, அவனுடைய துரதிருஷ்டம் எல்லாம்தான் அடிபட்டன. மூன்று குழந்தைகளை வைத்துக் கொண்டு கஞ்சிக்குத் திண்டாடும் அந்த உத்தமி தன் விதியை நினைந்து கண்ணீர் விட்டுக் கதறி அழுதாள். 'எல்லாரும் கைவிட்டு விட்டார்கள். நீங்கள்தான் அவரைச் சீர்திருத்திப் பிழைப்பளித்து இந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும்' என்றாள். அவளையும் அக்குழந்தைகளையும் பார்க்க மிகவும் கண்ணராவியாக இருந்தது.

சென்னை திரும்பிய சுந்தரம் முன்னிலும் அதிக அக்கறையுடன் குமாரசாமிக்காகப் பாடு பட்டான். அவனுடைய நண்பர் மூலம் ஏற்பாடான இரு

பாடங்களும் சரிவர நடந்து கொண்டிருந்தன. ஆனால், காலில் அடிபட்டுப் படுக்கையில் கிடந்த நண்பர் மாதம் ஒன்றாகியும் தேறி எழுவில்லை. அது மட்டுமா?

முப்பத்தைந்தே பிராயம் உடைய அந்தக் காளை, ரத்த அழுத்தம் காரணமாகப் பொட்டென்று உயிர் நீத்தார்!

சென்னையே துயர வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்க, அந்த இல்லத்திற்கு வெகு அருகே உள்ள வீட்டில் பாடம் சொல்லிக் கொடுத்த சம்பளம் பெறுவதற்காகப்போய் நின்றான் குமாரசாமி.

அவர்களுக்கோ மாண்டுபோன நண்பரின் மேல் உயிர். அவர்கள் குமாரசாமியைப் பற்றி என்னதான் நினைத்திருக்க மாட்டார்கள்? உடனே பணத்தைக் கொடுத்து, "நாளை முதல் பாடம் வேண்டாம்" என்று சொல்லி விட்டார்கள். இதை அறிந்த சுந்தரம் மிகவும் வருந்தினான்.

'ஐந்தைக் கொடு, பத்தைக் கொடு' என்று குமாரசாமி ஓயாமல் தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருந்தான். முடிந்தவரையில் உதவிய சுந்தரம் கையை விரித்தான். அதில் குமாரசாமிக்கு வருத்தம் ஏற்பட்டு விட்டது. வேறு இடத்தில் இருந்து கொண்டு சுந்தரத்தினிடம் வருவதை நிறுத்திக் கொண்டான். அது மட்டுமா? சுந்தரத்தின் நண்பர்கள் உறவினரிடமெல்லாம் சென்று தூற்றத் தொடங்கினான்.

'இவரை எனக்குத் தெரியாதா? இவர் இருந்த நிலை அறியேனா? இன்று ஏதோ இரண்டு காசு புரள்கிறது. தலைகால் புரியவில்லை. இவர் எனக்கு என்ன செய்து விட்டார்? இவருடைய காரியமாக அங்கே செல்கிறபோது என்னையும்கூட அழைத்துச் செல்வார்!'—இப்படி எவ்வளவோ!

குமாரசாமி அதைச் சொன்னான் இதைச் சொன்னான் என்று ஒவ்வொரு நாளும் பலர் வந்து ஓதும் செய்திகளைக் கேட்டுக் கேட்டுச் சுந்தரத்தின் காது புளித்துப் போய் விட்டது. ஒரு நாள் எல்லை மீறிய சங்கடத்தில் அவன் தத்தளித்தபோது சுகுணா இதமாக அவனுக்கு எடுத்துரைத்தாள்.

சுகுணா வாங்கி வந்திருந்த துணிமணிகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான் சுந்தரம். 'இது என்ன சுகுணா? நான் சொல்வது ஒன்று, நீ செய்வது ஒன்றாக இருக்கிறதே? பணம் இல்லாத இந்தச் சமயத்தில் பசங்களுக்குச் சட்டை, பாவாடை, நிக்கர் ஒவ்வொரு 'செட்' போதாதா?' என்றான்.

சுகுணா புன்சிரிப்புடன், 'நம் குழந்தைகளுக்கு நீங்கள் சொன்னபடி ஒரே ஒரு 'செட்டு' தான். மற்றொரு 'செட்டு' வேறு குழந்தைகளுக்கு' என்றாள்.

'சுந்தரம்' என்று அழைத்தபடி அவனுடைய நண்பர் ஆறுமுகம் வந்தார். 'உங்களுக்காக நான் மிகவும் இரங்குகிறேன் சுந்தரம். உங்கள் நண்பர் குமாரசாமிக்காக நீங்கள் பட்ட பாடு இந்த ஊரே அறியும். கடைசியில் அவன்...'

"உம். கடைசியில் அவன்?"

"சொல்ல நாக்கூசுகிறது சுந்தரம். 'பாவி, எனக்கு எல்லாம் செய்கிறேன் என்று உறுதிமொழி கொடுத்து வரவழைத்தான். ஒன்றுமே செய்யவில்லை. பட்டினி போட்டு வதைத்து விட்டான் பாவி! மறுபடியும் நான் ஊருக்கே போகிறேன்' என்று நேற்று என்னிடம் சொன்னான்"

ஆறுமுகம் பேச்சை முடிக்கவில்லை. சுந்தரம் படபடப்புடன் குமாரசாமி சில நாட்களாகத் தங்கியிருக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டான்.

ஆனால் என்ன பயன்? 'குமாரசாமி இல்லை' என்ற செய்திதான் அங்கே கிடைத்தது.

* * *

வாசலில் வண்டி வந்து நின்றது. திண்ணையில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் 'அப்பா', 'அப்பா' என்று ஆர்ப்பரித்தன. சந்தடி கேட்டு வெளியே வந்த லட்சுமி வண்டியிலிருந்து இறங்கிய கணவனைக் கண்டு சந்தோஷப்படுவதற்குப் பதிலாகத் திடுக்குற்றாள். காரணம் கணவன் மட்டும் வராமல், அவனோடு முன்பு அவன் எடுத்துச் சென்றிருந்த பெட்டி படுக்கை முதலியனவும் கூடவே வந்திருந்ததுதான்.

தொங்கவிட்ட முகத்துடன் ஆயாசமாக உள்ளே வந்து அமர்ந்த குமாரசாமியைக் கூர்ந்து நோக்கினாள் லட்

சுமி. அவன் பேச முடியாமல் தத்தளிப்பதை உணர்ந்தாள். ஏதோ ஜாட்டியத்தினால் தத்தளிக்கிறான் என்றும் உணர்ந்து கொண்டாள்.

“அந்தப் பாவி சுந்தரத்தை நம்பி”

குமாரசாமி வார்த்தையைப் பூர்த்தி செய்யவில்லை. வாசலிலிருந்து, “தபால்! லட்சுமி அம்மாள்!” என்று குரல் கேட்டது. லட்சுமி வாயிற்புறம் சென்றாள். ஒரு பார்சல், ஒரு கவர். இரண்டையும் பெற்று உள்ளே கொண்டு வந்து பிரித்தாள். பார்சலில் குழந்தைகளுக்குச் சட்டை, பாவாடை, நிக்கர்; லட்சுமிக்கு ஒரு புடவையும், ரவிக்கையும். கவரைப் பிரித்தாள். பத்து ரூபாய்க்கு போஸ்டல் ஆர்டரும் நீண்ட கடிதமும். சுகுணா எழுதியிருந்தாள். எல்லா விவரங்களையும் எழுதிவிட்டு முடிவில், ‘மகாமாயி சத்தியமாக உங்களையே நம்பி வந்திருக்கிறேன். நீங்கள் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டேன்’ என்று கூறிவிட்டு, முடிவில் என் கணவரைத் தூற்றி விட்டுக் கிளம்பி விட்டார் உன் கணவர். அந்த மகாமாயி தான் உன் கணவருக்கு நல்ல புத்தியைக் கொடுத்து அவரைக் காப்பாற்ற வேண்டும்’ என்று கடிதத்தை முடித்திருந்தாள்.

போப்பா! உனக்குத் துப்பாக்கி சுடவே தெரியலே! எங்கிட்ட குடுப்பா நான் சுட்டுக் காட்டறேன்!

? ? ?

“இதெல்லாம் ஏது?” — திணறிக் கொண்டே இப்படிக் கேட்டான் குமாரசாமி. லட்சுமி கடிதத்தைப் படித்தாள். படித்து முடித்து விட்டுக் கணவனை நோக்கினாள். அவன் தலை சாய்ந்து, பிரக்ஞையற்றுக் கிடந்தான். பதறி அவனை அணுகிய லட்சுமி அவன் உடம்பு முழுவாய்க் காய்வதைக் கண்டு திடுக்குற்றாள்.

அன்றிலிருந்து குமாரசாமி கடுங் காய்ச்சல், வைசூரி ஆகியவற்றில் கிடந்து உழன்றான். லட்சுமி மகமாயியை வேண்டிக் கொண்டாள். சுகுணாவையும் வேண்டிக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டு கடிதம் எழுதினாள்.

சுகுணா மட்டும் அல்ல; சுந்தரமும் அவளோடு சேர்ந்து மகமாயியை வேண்டிக் கொண்டான், ‘குமாரசாமி குணமடைய வேண்டும்’ என்று. ஆனால் அவர்களுடைய அந்த வேண்டுகோள் குமாரசாமிக்காக அல்ல; அவனுடைய மனைவி மக்களுக்காக. ★

“புதுமை”யின்
சென்னை நகர முழு
உரிமை
விற்பனையாளர்கள்

தி மெட்ரூஸ் நியூஸ்
ஏஜென்ஸி
சென்னை-2.

தீப ஒளி

மா. சு. நாதன்

செங்கதிரோன் சிரித்தெழுந்தான் தங்கநிறச்;
செக்கர்வான் தகதகத்தே மின்னிற்று,

எங்கினுமே இளம்பரிதிக் கதிர்சிதறி;
எழுப்பிற்றே இவ்வையத்தே யுள்ளோரை !

கங்குலதும் கடுகிற்றுக் காற்றெனவே;
கரையற்ற ஒளிக்கற்றை ஊடுருவி,

உங்களுக்கோர் நன்னாளும் உலகத்தே,
உயிர்பெற்றே பிறந்ததென உரைத்ததுவே!

தீபஒளித் திருநாளே திக்கெங்கும்;
தந்திடுநல் இன்பத்திற் கீடேது?

தூபமிட்டுத் திருப்பாடல் தனைப்பாடி;
தூயபல பட்டாடை தரித்திடுவார்!

தாபமுடன் தாய்வேண்டும் சேய்தனைப்போல்;
தன்னிலையைப் பக்தர்கள் தான்மறந்தே,

தீபஒளி முன்னின்று திருவருளைத்;
தரிசிக்கும் நற்காட்சி திருக்காட்சி !

நல்லதொரு பெருவாழ்வு நாட்டின்கண்;
நலமுற்றே வரவேண்டின்; நம்மிடையே,

இல்லையென்ற சொல்லெங்கும், "இல்லை யென்றே,"
இனிதுடனே பிறந்திடணும் எம்மிடையே !

வல்லமையும், வற்றாத வான்புகழும்,
வையத்தே யாம்கண்டு வளமடைய,

சொல்லறிவும், செயலழகும் செறிவுற்றே,
சோபிக்கச் செய்திடுவாய் திருவருளே!!



தீபாவளிக்கு

எமது

வாழ்த்துக்கள்



கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறி ஆடைகள்

சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம், லிமிடெட்

பாலசுந்தரம் மாளிகை

34-A/1, பாந்தியன் சாலை :: மதராஸ்-8

SISTAS

பத்மாவின் பாக்கியம்

ஆர். சூடாமணி

"என்ன இருந்தாலும் நீங்கள் மாப்பிள்ளை. தீபாவளிக்குப் புதிசு வாங்காமல் இருக்கமுடியுமா நான்?"

ஜகன்னாதனுக்கு எரிச்சல் தாங்கவில்லை. இப்போதுதானா இந்த உபசாரமெல்லாம்? மாமனாரின் பேச்சு அவனுக்கு அடியோடு பிடிக்கவில்லை. ஆனால் ஹரிஹரய்யர் உறுதியாக, "இந்த ஜரிகை வேஷ்டியை நல்ல நாளில் நீங்கள் உடுத்திக் கொண்டால் தான் எங்களுக்குத் திருப்தியாயிருக்கும். நம் மதத்தில் இந்த வருஷம் தீபாவளி விசேஷம் பாருங்கள்" என்று கூறித் தம் வேலைகளைக் கவனிக்கப் போய்விட்டார்.

'உயர்ந்த ஜவுளிக்கு உத்தம விலாஸ்' என்ற எழுத்துக்கள் சுடர் விடும் காகிதப் பையிலிருந்து வெளியே எட்டிப் பார்த்த ஜரிகைக் கரை வேஷ்டி ஜகன்னாதனைப் பரிகாசம் செய்வது போல் இருந்தது. இந்த வருஷம் அவன் புது வேஷ்டி உடுத்துவதா? மாமனாருக்கு மனதே கிடையாதா?

பங்கஜம் மெள்ள அருகில் வந்தாள். "அப்பாவுக்காகக் கொஞ்சம் தயவு செய்து புதிசு கட்டிக் கொண்டுதான் விடுங்களேன்"

"நீ கூடவா இப்படிச் சொல்கிறாய்?"

"நான் என்ன தப்பாகச் சொல்லிவிட்டேன்?"

எல்லோரும் தீபாவளி கொண்டாட நினைத்தபொழுது அவன் வேதனையால் திண்டாடினான். பிறகுஅவனே மனம் மாறி மாப்பிள்ளையோடு திரும்பியபோது, மற்றவர்கள் திகைத்தார்கள்!

"எல்லாம் பத்மாவை உத்தேசித்துத்தான்..."

"அதற்காகத் தான் ஐந்து விரல் கை அகலம் ஜரிகை போட்ட புடவை வாங்கிக் கொண்டிருக்கிருய், இல்லையா? உன் புடவையைப் பார்த்தால் யாருக்குத் தலை தீபாவளி என்று சந்தேகம் வருகிறது"

பங்கஜத்துக்கு முகம் வாடிவிட்டது.

"உங்களுக்குப் பிடிக்க

வில்லையென்ருல் புடவையைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்"

"ஏன், அப்புறம் பட்டாசுக்குப் பதில் உன் வார்த்தைகளை என்மேல் வெடித்துத் தீபாவளி கொண்டாடலாமென்ரு?"

"கத்தரிப்பூ நிறம் எனக்கு நன்ருய் இருக்கிறதென்று நீங்கள் சொல்லியிருந்ததால்தான் அந்தப் புடவையைப் பொறுக்கினேன். இல்லாவிட்டால் உங்களுக்கில்லாத பண்டிகை எனக்கு மட்டும் எதற்கு?"

அவள் கண்களில் நீர் தளும்பி விட்டது. ஜகன்ஞதனின் வேதனையும் அமைதியின்மையும் அதனுல் அதிகரித்தன.

"சரி சரி, அதுதான் உங்களுக்கெல்லாம் பண்டிகை 'ஜேஜே' என்று வருகிறதே. இப்போது நான் என்ன சொல்லி விட்டேனென்று இந்த அழுகை?" என்று ஆத்திரத்துடன் கத்தினுன். துக்கம் நெஞ்சை அடைத்தது. பாட்டி போய் இன்னும் ஒரு வருஷம் முடியவில்லை. தாயில்லாக் குறை தெரியாமல் அவனையும், அவன் தம்பி கிருஷ்ணனையும் வளர்த்தவள் பாட்டி. இரண்டு வருஷங்களுக்கு முன் கிருஷ்ணனுக்கு வடக்கே வேலையான

போது அவனுக்கு ஒத்தாசையாகக் கூடவே சென்ருள். அந்தப் பிரிவே அவளையும் ஜகன்னுதனையும் எவ்வளவோ துன்புறுத்தியது. அவளது நிரந்தரப் பிரிவோ? அதை நினைத்தாலே ஜகன்னுதனின் உயிர் கூசிக் குமுறியது. அருமைப் பாட்டி மறைந்து எத்தனை வருஷங்களானுலும் துக்கம் ஆறப் போவதில்லை. அப்படியிருக்க, இந்த முதல் வருஷத்தில் அவனுக்குப் பண்டிகைகள் கொண்டாடவா மனமிருக்கும்? ஆனல் தன் துக்கத்தைக் காட்ட அவனுக்கு இங்கே உரிமையில்லை. பணப் பசை உள்ளவனுனுலும், முதலில் மாமனுர் ஒரு சமயம் ஆறுமாதம் டைபாய்டு ஜுரத்தில் படுத்துவிட்டபோது துணைக்கென்று வேட்டகத்தில் வந்து வசித்தான். பிறகு கிருஷ்ணன் வடக்கே சென்றுவிட்டான். மாமனுர் மாமியாரும் வற்புறுத்தினுர்கள். வீடு கிடைப்பதும் சிரமமாயிருந்தது. கடைசியில் வாடகைக்கென்று பணம் கொடுத்துக்கொண்டு மாமனுர் வீட்டிலேயே ஸ்திரமாய் நிலைத்து விட்டான். பங்கஜத்தின் தங்கை பத்மாவுக்கும் சின்னத் தம்பி ஜயராமனுக்கும் ஒரு தமையன் போலவே ஆகிவிட்டான். யாருக்கும் மனஸ்தாபம் இல்லாமல் காலம் கடந்தது.

ஆனல் இன்று முதல் தடவையாகத் தன் நிலைமையில் கஷ்டத்தைக் கண்டான் ஜகன்னுதன். பாட்டி மறைந்த துக்கம் அவனது சொந்த துக்கம். தன் சொந்த வீட்டில் இருந்தால் அதற்கு அவன் வடிவம் கொடுத்திருப்பான். ஆனல் இவ்வீட்டில் அதற்கு இடம் கிடையாது. இவ்வீட்டில் இந்த வருஷம் தலை தீபாவளி.

"அத்திம்பேர்! அத்திம்பேர்!"

துள்ளிக்கொண்டு வந்தாள் பத்மா. இரு கைகளையும் இணைத்து அவள் பிடித்திருந்த துணிவகைகள் மோவாய் வரை உயர்ந்திருந்தன.

"இதோ பார்த்தீர்களா? இது நான் தீபாவளிக்கு வாங்கிக் கொண்டிருக்கிறேன்!" கையிலிருந்த மூட்டையிலிருந்து பத்மா ஒரு ஆரஞ்சு நிற ரவிக்கைத் துணியை எடுத்துக் காட்டினுள்.

"எப்படி இருக்கிறது?"

"நன்ருய்த்தான் இருக்கிறது."

ஜகன்னுதன் கோபத்துடன் அவ்விடம் விட்டுச் செல்ல முயன்ருன்.

"அத்திம்பேர், அதற்குள் போகிறீர்களே! இதோ இந்த மயில் கழுத்து நிறப் புடவை எப்படி, சொல்லுங்கள். புடவைதானே முக்கியம்!"

"இதுவும் நன்ருயிருக்கிறது...நான் போகவேண்டும் பத்மா"

"ஒரு நிமிஷம். எனக்கு இந்த நிறம் பொருந்துமா பாருங்கள்!" பத்மா குழந்தை மாதிரிப் புடவையைத் தன் மேல் வைத்துக் காட்டினுள்.

"பொருந்தித்தான் இருக்கிறது..."

"பார்த்தாயா அக்கா? அத்திம்பேர் கூடச் சொல்கிருர். நீதான் நன்ருயிருக்காதென்று கிளப்பிவிட்டாய்"

"நானே உன் அத்திம்பேரோ என்ன சொன்னல் என்ன பத்மா? அடுத்த வாரம் மிஸ்டர் பசுபதி வந்து சபாஷ் போடுகிருரா பார்க்கலாம்"

பத்மாவின் கண்கள் இன்பத்தில் ஒளிர்ந்தன. அதைக் கண்டு ஜகன்னுதனின் உள்ளத்தில் துக்கம் இன்னும் அழுத்தம் பெற்றது.

"உங்கள் பாடெல்லாம் குஷிதான்" என்ருன், சகோதரிகளை மனத்தாங்கலுடன் பார்த்துக்கொண்டு.

"பின்னே இருக்காதா?" என்ற பங்கஜம் தொடர்ந்து, "பத்மா, உன் 'அவரு'க்கு வாங்கியிருக்கும் வேஷ்டி, தைத்த சூட், ஷர்ட் எல்லாவற்றையும் தான் காட்டேன்" என்ருள்.

"போ அக்கா, அத்திம்பேர், இந்த 'ட்வீட்', 'சூட்'டைப் பார்த்தீர்களா? ஆனல்...வந்து ...தீபாவளியன்று வேஷ்டியைத்தான் உடுத்துவார்"

"யார்?" என்ருள் பங்கஜம் குறும்புடன்.

"உன் தலை" பத்மா வாயைக் குவித்து அழகு காட்டினுள்.

"உன் வாக்கியத்தில் பயனிலை இல்லை. அது இலக்கணத்துக்கு விரோதம்"

"நீ ஒன்றும் எனக்கு மார்க்கு தர வேண்டாம் போ."

இதற்குள் பங்கஜம் துணிகளிடையிருந்து ஒரு 'கோட்'டை எடுத்துப் பிரித்தாள். அதன் பையிலிருந்து ஒரு கடிதம் கீழே விழுந்தது.

"அட, தையற்காரன் 'பில்'லா?" பங்கஜம் தங்கையை ஓரக்கண்ணால் பார்த்தபடி காகிதத்தை எடுப்பது போல் குனிந்தாள். "ஐயையோ!" என்ற பத்மா கண்ணிமைக்கும் நேரத்துக்குள் அதைப் பொறுக்கித் தன் இரு கைகளுள் மூடிக் கழுத்துக்குள் புதைத்துக்கொண்டாள். முகமெல்லாம் நாணத்தால் சிவந்து விட்டிருந்தது. பங்கஜம் சிரித்தாள்.

"பலே! என்ன எழுதியிருக்கிறாய், அதில் அவ்வளவு ரகசியமாய்? 'அடியாளின் அன்போடு இந்தத் தீபாவளிப் பரிசை...'"

பத்மாவின் முகம் இன்பத்தில் குளித்து மலர்ந்த செந்தாமரையாய் விளங்கியது. பங்கஜமும் சந்தோஷத்துடன் காணப்பட்டாள். ஜகன்னாதன் பல்லைக் கடித்தான்.

"அடுத்த வாரம் தீபாவளி. இன்னும் ஐந்து நாட்களில் அவர் வந்து விடுவார்" என்றாள் பங்கஜம்.

"ஐந்து நாளா? ஆ...று நாள் என்று சொல். ஆறுவது நாள் காலையில் வருவதால் அந்த நாளையே விட்டு விட்டாயா?" என்று திருத்திய பத்மா சட்டென்று தன்னை உணர்ந்தவளாய் முதுகைத் திருப்பிக் கொண்டு தலை கவிழ்ந்தாள்.

பங்கஜம் கைகொட்டிச் சிரிக்கலானாள். ஜகன்னாதனின் நெஞ்சில் வேதனை கொந்தளித்தது.

"புத்தாடை உடுத்தித் தலை தீபாவளியின் தலைவரை எப்படி வரவேற்கப் போகிறாய் பத்மா? எனக்குக் கொஞ்சம் சொல்லுடி!'

"நீயும் அன்று புத்தாடை உடுத்தி அத்திம்பேரை எப்படி உபசாரம் செய்யப் போகிறாயோ அப்படித்தான். ஏன் அத்திம்பேர், நீங்களும் புதிசு உடுத்தப் போகிறீர்களல்லவா?"

இன்பத்தில் திளைத்திருந்த சகோதரிகளை உள்ளத்தில் நெருப்போடு பார்த்தான் ஜகன்னாதன். "ஆமாம், புதிசு உடுத்தப்போகிறேன், பட்டாசு சுடப் போகிறேன், பாயாசம் குடிக்கப் போகிறேன். என் பாட்டி செத்துப்போனதைக் கொண்டாட" என்றான்.

பங்கஜமும், பத்மாவும் சூடு பட்டவர்கள்போல் துடித்து நோக்கினார்கள். துன்பத்தின் சக்தியால் அவன் அவர்களது இன்பத்தைக் குலைப்பதில் வெற்றியடைந்துவிட்டான்.

* * *

சந்தோஷ அறிகுறிகள் நிறைந்த அவ்வீட்டை விட்டு வெளியே சென்று உலாவித் தன் மனவேதனையை மறக்க முயன்று இரவு வீடு திரும்பினான் ஜகன்னாதன், முதலில் அவனுக்கு உணர்வானது பத்மா சொல்லிக் கொண்டிருந்த வார்த்தைகள்தான்.

"எனக்குப் புதிசும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம் அப்பா. நான் என்ன இப்போது பண்டிகை கொண்டாட வேண்டி இருக்கிறது?"

"அச்சானியம் போல் அப்படியெல்லாம் சொல்லாதே. பண்டிகையை எதற்காக நிறுத்துவதாம்?" என்று ஹரிஹரய்யர் கண்டித்தார்.

"ஆமாம், உங்களுக்கென்ன? எனக்கு இப்போது பண்டிகைதான் குறைச்சல்" என்று முணுமுணுத்த பத்மா, அருகில் பட்டாசுக்கட்டு ஒன்றுடு வந்த தம்பி ஜயராமனைக் கண்டு ஆத்திரத்துடன், "பட்டாசு என்னடா கேட்கிறது உனக்கு?" எனச் சீறினாள்.

"வேண்டாமா அக்கா? எல்லாத்தையும் கொண்டுபோய் நெருப்பு வைத்து விடட்டுமா?" என்று அவன் பதிலளிக்கவும் பத்மா ஆத்திரம் தாங்காமல் அவன் முதுகில் அறைந்தாள். அவள் தாயார், "உனக்கு என்னமோ வருத்தமென்றால் குழந்தையை ஏனடி அடிக்கிறாய்? எங்களுக்கு மட்டும் சந்தோஷமாகவா இருக்கு? எத்தனையோ ஆசையாய் இருந்தோம். இப்போது ஏமாற்றம் என்றால் உன் மனசைவிடப் பெற்றமனம் தானே அதிகமாய்க் கலங்குகிறது?" என்றாள்.

வீட்டில் நிலவிய சூழ்நிலையைக் கண்டு ஜகன்னாதனுக்குத் தன் மன நிலையினால் திருப்தி உண்டானதுபோல் தோன்றியது. முழு உலகமுமே தன்னைப்போல் வாட்டமுற்றிருந்தால் கூடத் தேவலை போலிருந்தது. வாடிய முகத்துடன் அவனிடம்வந்து, "சாப்பிட வருகிறீர்களா?" என்ற பங்கஜத்திடம், "என்ன விஷயம்?" என்று விசாரித்தான்.

"பத்மாவின் அகத்துக்காரருக்கு லீவு கிடைக்க வில்லையாம். அவரு

டைய கம்பெனி மானேஜர் இந்த சமயத்தில் வேருெரு அக்கௌண்டென்டுக்கு லீவு கொடுக்க ஒப்புக்கொண்டு விட்டதால் மாப்பிள்ளைக்கு மறுத்து விட்டாராம். பாவம், கடிதம் வந்ததிலிருந்து பத்மா அடியோடு சோர்ந்து விட்டாள்''

"உம், விட்டுத் தள்ளு''

"அந்த மானேஜர் இருக்கிருரே, அண்ணுசாமி அய்யர், அவர் பெண்ணுக்காக உங்கள் தம்பி கிருஷ்ணனைப் பற்றி விசாரித்தபோது முன்பு எவ்வளவு அடக்கமாகப் பேசினுர்? இப்போது மதுரையில் போய் மானேஜராய் உட்கார்ந்ததும் தலை தீபாவளிப் பிள்ளைகளுக்கெல்லாம் லீவு இல்லை என்கிருர். நாளைக்கே அவருக்கும் மாப்பிள்ளை வந்து இப்படி லீவு கிடைக்கவில்லையென்று கடிதமெழுதினுல் எப்படி இருக்குமாம்?''

"தலை தீபாவளிக்கு மாப்பிள்ளை வரவில்லை என்பதைவிடப் பெரிய துக்கங்களெல்லாம் உலகத்தில் இருக்கின்றன. பாவம் உனக்கென்ன தெரியும்! புதுப்புடவையைப் பிரித்து வைத்தாயானுல் உலகமெல்லாம் தான் மறைந்துவிடுகிறதே!''

"புதுப் புடவையாம், மண்ணுங்கட்டி, யாருக்கு வேணும் இங்கே'' உள்ளே பத்மாவின் பொருமல், அதையடுத்து அவள் மயில் கழுத்து நிறப் புடவையைத் தூக்கி விட்டெறிந்தது ஜகன்னுதனுக்குத் தெரிந்தது.

"உள்ளே வந்து சாதம் சாப்பிடியம்மா. புதுப்புடவை வேண்டாமென்ருல் வேண்டாம். இந்த வருஷம் யாருமே புதிசு உடுத்த வேண்டியதில்லை. நிஜமாய்த்தான் என்ன பண்டிகை வேண்டியிருக்கு'' என்று கூறியவளாய் தாயார் வந்து பத்மாவை ஆதரவாய்த் தடவிக் கொடுத்தாள். பத்மாவின் முகத்தில் விசனக்குறி வலுப்பட்டது. "எனக்குத் தலையை வலிக்கிறதம்மா. சாதம் வேண்டாம்'' என்று துக்கம் நெஞ்சை யடைக்கச் சொல்லி விட்டு உள்ளே ஓடினுள். ஜகன்னுதன் இக்காட்சியைப் பார்த்துகொண்டே நின்ருன். அவன் மனம்போலவே ஆகி விட்டது. இந்த வருஷம் இவ்வீட்டில் தீபாவளிப் பண்டிகை கிடையாது. யாரும் புத்தாடை அணியமாட்டார்கள். அவனைப் போலவே மற்றவர்களும் சோகத்தில் ஆழ்ந்து விட்டார்கள்.

* * *

"அப்பப்பப்பா! என்ன பட்டாசு சப்தம்! காதைத் தொளைக்கிறது'' என்று அலுத்துக் கொண்ட பத்மா, தலையணையை எடுத்துக் காதின் மேல் வைத்து அழுத்திக்கொண்டு படுத்தாள். அருகிலிருந்த பங்கஜத்துக்குப் பரிதாபமாயிருந்தது.

"அவரவர்கள் வீட்டில் தீபாவளி...''

"அதுதான் தெரிகிறதே. இந்தப் பண்டிகையெல்லாம் ஏன் தான் வருகிறதோ. இன்றே இந்தப் பாடாயிருக்கே, நாளைக்கு?''

அடுத்த நாள் தீபாவளித் தினம். அக்கம் பக்கத்தில் எல்லா வீடுகளிலிருந்தும் பட்டாசு சப்தம் வந்து கொண்டிருந்தது. தன் வீட்டில் ஜயராமனுக்குப் பத்மா தடையுத்தரவு போட்டு விட்டதால் அவனும் பக்கத்து வீடு சென்று தான் பட்டாசு வெடித்துக் கொண்டிருந்தான்.

"பல்லைத் தேய்த்துவிட்டு மறுபடியும் படுத்துக்கொண்டு விட்டாயே. வா, காப்பி குடித்துவிட்டு வாசலிலாவது போய் உட்காரலாம்'' என்ருள் பங்கஜம்.

"எல்லாம் நீ போய் உட்கார்ந்து கொள்''

"நான் மட்டுமா?''

"பின்னே என்ன செய்வதாம்?

"அத்திம்பேர்தான் மூன்று நாள் முன்பே யாரோ சிநேகிதனைப் பார்த்து வருகிறேனென்று ரயிலேறி விட்டார். நீயும் போயிருப்பதுதானே?''

"அவர் பண்டிகை நாளன்று தம் துக்கத்தோடு எங்காவது தனியாய் இருந்துவிட்டு வரப் போயிருக்கிருர். சினேகிதனைப் பார்க்க வேண்டுமென்பதெல்லாம் வெறும் பொய் என்று எண்ணுகிறேன்''

"பாவம் அத்திம்பேர்''

சகோதரியின் கட்டாயத்தின் பேரில் பத்மா வாசலுக்கு வந்தாள். அவள் முகம் வெகுவாய் வாடிவிட்டிருந்தது. எதிர் வீட்டு வாசலில் அவள் தோழி சரளி தன் கணவனுடன் நின்று கொண்டிருந்தாள். அங்கும் இவ் வருஷம் தலை தீபாவளி. பத்மாவுக்கு

வேதனை தாங்கவில்லை. "உள்ளே போகலாம் அக்கா" என்றாள். இருவரும் மறுபடியும் உள்ளே சென்றார்கள்.

"கொஞ்ச நேரம் நாமிருவரும் பல்லாங்குழி ஆடலாமா?" என்றாள் பங்கஜம், அவள் மனத்தை மாற்ற எண்ணி.

"வேண்டாம்" பத்மாவின் நினைவு வேறெங்கோ இருந்தது.

"நாளைக்குப் புது 'ரிலீஸ்' 'அதிருஷ்டக்காரி' சினிமாவுக்குப் போகலாம், என்ன?"

"அதற்குத்தான் நாங்களிருவரும் போவதாய் இருந்தோம்" பத்மாவின் குரல் கண்ணீரால் அடைபட்டது.

"அசடே, என்ன இதெல்லாம்?" பங்கஜம் அவளை அன்புடன் அணைத்துக் கொண்டாள். "இப்போது வரா விட்டால் என்ன? லீவு கிடைத்தவுடன் தானே உன்னிடம் ஓடி வருவார்"

பத்மாவுக்கு அதற்குமேல் பேச முடியவில்லை. அக்காவின் தோள்மேல் முகத்தை வைத்துக்கொண்டாள். அடுத்த நிமிஷம் அழவேண்டியவள் தான்; ஆனால் வாடிய முகம் திடீரென்று மலர்ந்தது. அழுகைக்குப் பதில் புன்சிரிப்பு எழுந்தது. அவளும் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து நின்றாள்.

"என்ன, மாப்பிள்ளைக்கு உபசாரம் ஒன்றும் இல்லையா?"

பங்கஜம் திடுக்கிட்டுப் பார்த்தாள். பின்னால் புன்சிரிப்போடு ஜகன்னாதன் நின்றிருந்தான். அவன் பக்கத்தில்—பசுபதி!

"என்ன பத்மா, அப்படியே நின்று விட்டால் போதுமா? மாப்பிள்ளை உன் கையால் காப்பி குடிக்கவேண்டுமென்று வழியில் கூடச் சாப்பிடாமல் வந்திருக்கிறார்!" என்றான் ஜகன்னாதன்.

பத்மா தலையை நிமிர்த்தவேயில்லை.

"நீங்கள்...மதுரைக்கா போயிருந்தீர்கள்?" என்று வியப்புடன் கணவனை நோக்கினாள் பங்கஜம்.

"ஆமாம். அண்ணாசாமி அய்யரைப் போய்ப் பார்த்தேன். பேச்சுவாக்கில் கிருஷ்ணன் ஊரிலிருந்து வரப்போகிறான், அவனுக்குப் பெண் பார்க்க ஆரம்பிக்கவேண்டும் என்றேன். அவர் உடனே என்னை உட்காரவைத்துக் காப்பி கொடுத்தார். பிறகு ஏதேதோ பேசிக் கொண்டிருந்தோம். அப்படியே நடுவில் பசுபதி என் உறவுக்காரரென்பதைச் சொல்லி அவர் தலை தீபாவளிக்கு வராதது எங்களுக்கெல்லாம் பெருத்த குறை என்றும்—பேச்சுவாக்கில்தான்—சும்மா ஒரு குறிப்பு காட்டினேன். உடனே மானேஜர் எழுந்தார். அவ்வளவுதான், அந்த இன்னொரு அக்கௌண்டெண்டுக்கு லீவு ஒத்திப் போடப்பட்டது. பசுபதிக்கு லீவு கைமேல் கிடைத்தது. இருவரும் புறப்பட்டு வந்தோம்!"

"நாளைக்கு உங்கள் தம்பி அந்தப் பெண்ணைப் பண்ணிக் கொள்ளா விட்டால் வம்புதான்!" என்றான் பசுபதி.

"அது அவன் பாடு. அந்தப் பெண் பாடு." ஜகன்னாதன் நிம்மதியாய் சோம்பல் முறித்தான். "என்ன பத்மா, அவருக்குக் காப்பி கொடுக்கவில்லையா?"

பத்மாவும் பசுபதியும் உள்ளே மறைந்தார்கள். சிறிது நேரத்தில் இருவரும் மயில் கழுத்துநிறப் புடவையைத் தீவிரமாய் 'இஸ்திரி' செய்து கொண்டிருந்தார்கள்.

பங்கஜம் கணவனைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள். "நீங்கள் செய்தது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது"

ஜகன்னாதனின் கண்களில் தெளிவு நிறைந்திருந்தது. "பங்கஜம்! முதலில் நான், என்னோடு உலகம் முழுவதுமே துக்கித்தால் திருப்தியடைவேனென்று தான் எண்ணினேன். ஆனால் கண் முன்னாலேயே ஒருவர் வருந்தியபோது தான் நம் வருத்தத்தைவிடப் பிறர் வருத்தத்தைப் பொறுப்பது இன்னும் கஷ்டமென்று புரிந்தது. தீபாவளிப் பண்டிகை அவர்களிருவருக்கும் இன்பநாளாய் இருக்கவேண்டுமென்று விரும்பினேன்; முயற்சி செய்தேன். சுகமோ துக்கமோ அது நம் மனசில் இருப்பது. வெளியில் எல்லோரும் இன்புற்றிருப்பதைப் பார்த்து அவர்களுக்காகச் சிரித்து வாழ்வது தான் விவேகம். மனசுக்கும் சாந்தி" என்றான் அவன். 'கல, கல' என்ற நகையொலி பத்மாவின் அறையிலிருந்து காற்றிலே மிதந்து வந்தது.

'அவளும் பாக்கியசாலிதான்' என்று முடித்தான் ஜகன்னாதன்.

'நாமும் தான்' என்று முறுவல் உதிர்த்து முத்தாய்ப்பு வைத்தாள் பங்கஜம்.

★

அழகனர்

வரி விளம்பரங்கள்

தேவை

எம். ஏ. படித்த 45 வயதுள்ள இளம்பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. விரும்புவோர், முன் அனுபவம், படிப்பு, வயது முதலிய விபரங்களுடன் விண்ணப்பிக்க: மிஸ். சண்டமாருதம், 33, ஆள்வார் கோவில் வீதி, கல்யாணபுரி.

உதவியாளர் தேவை !

மனைவி கேட்கும் கேள்விகளுக்குத் தக்க பதில் அளிக்கும் தகுதியான ஆள் தேவை. உடனே விண்ணப்பிக்கவும் : " திண்டாடும் அப்பாவி " C/o பிளாட்பாரம், மங்கைநல்லூர்.

ஏஜண்டுகள் தேவை !

கதை, கட்டுரை, கவிதை, அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், இலங்கைக் கடிதம், சிறுவர் பகுதி, முதியோர் பகுதி, பெண்கள் பகுதி, மார்கெட் நிலவரம், இந்திப் பயிற்சிப் பாடம் ஆகிய அத்தனையும் கொண்டு சகல துறையினருக்கும் பயன்படும்படியான எங்கள் பத்திரிகைக்கு முன்பணம் கட்டக்கூடிய ஏமாளி ஏஜண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதுக :

நிர்வாகி
" பலசரக்கு ",
காய்க்கடைத் தெரு,
பரங்கிப்பேட்டை.

துணையாசிரியர் தேவை

நமது நேற்றைய பதிப்பில் வெளியிடப்பட்ட "சிறுவன் மோதி லாரி மரணம் !" என்ற செய்திக்கு வாசகர்களின் ஆதரவு நிறைய இருப்பதால் இனிமேல் அது போன்ற செய்திகளையே வெளியிட விரும்புகிறோம். அதன் காரணமாக கற்பனை வளமிக்க ஒரு துணை ஆசிரியர் தேவை.

ஆசிரியர்,
'கற்பனையரசன்'
புளுகாண்டிப்பட்டணம்.

"சைசை" மூக்குத்தூள் வாங்குங்கள்!

திரைவானில் ஒளிவீசும் சித்திராங்கவதனி கூறுவதாவது :

குணம், மணம்மிக்க 'சைசை' மூக்குப் பொடியை நான் தினசரி உபயோகிக்கிறேன். நீங்களும் வாங்கி ஏன் உபயோகப்படுத்தக் கூடாது ?

(ஒப்பம்) சித்திராங்கவதனி.

விரைவில் வருகிறது

திரை உலகம் கண்டிராத

திருட்டுச் சித்திரம் !

மெய்சிலிர்க்கும் பொய்க்காட்சிகள் !!

" ஆடத்தெரியாத ஆரணங்கு
கூடிவரவில்லை என்பாள்
கொட்டுமேளம் "

உலக உரிமையாளர்கள் :

உலகம் & உலகம்,
C/o உலகம்
உலகம் நகர்.

மாயப் பேனு !

எங்களுடைய கம்பெனியின் மாயப் பேனுவை வாங்க முதலில் ரூ. 5-20 அனுப்புங்கள். நாங்கள் பார்சல் அனுப்பி வைப்போம். நீங்கள் அதைத் தறந்தால் நாங்கள் வைத்த பேனு அதில் இருக்காது ! உண்மை கண்டறிய உடனே பணம் அனுப்புங்கள். இம்முறை தவறினுல் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது !

மீனு மெஸ்மெரிசம் கம்பெனி,
லூதியானு-1.

நன்றி அறிவிப்பு

என்னுடைய புதல்வி. சௌ. நித்ராதேவி (திருமண அழைப்பிதழுக்காக தூங்குமூஞ்சி என்பதை மாற்றியிருக்கிறேம்)க்கும் சிர. கோனப்பனுக்கும் நடைபெற்ற திருமண விழாவிற்கு வந்து வீண்செலவு வைக்காத அன்பர்களுக்கு மணமக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ராம. பழ. குழ. சுப்பையன்,
அழுதுவழிஞ்சாம்பாளையம்.

கொக்கு மார்க் பீடி

எங்கள் கொக்குமார்க் பீடி
இணையில்லாத பீடி;
தூங்கும் போது கூட
தனியின்பம்தரும் பீடி;
காசுக்கு நான்கு பீடி;
கடையிலெல்லாம் கிடைக்கும்;
பேச்சுக்குப் பேச்சிடையே
புத்துணர்ச்சி நன்களிக்கும் !

காணவில்லை

அன்புள்ள குழந்தை! இந்தமாதிரி செய்து விட்டுப் போய்விட்டாயே? உன் பேத்தி நீ இல்லாமல் கல்யாணம் வேண்டாம் என்கிருள். அதுக்குத் தேடிப்பிடித்த மாப்பிள்ளையோ தப்பிக்கப் பார்க்கிருன். அதனுல் நீ இந்த விளம்பரத்தைப் பார்த்தாலும் சரி பார்க்காவிட்டாலும் சரி, ஓடிவந்து விடு; இல்லாவீட்டால் ரயிலேறி உட்கார்ந்து வாடா, கண்ணே !

அன்புள்ள அம்மா,
ராமாயி.

THE LAKSHMI MILLS COMPANY LIMITED

PAPPANAICKENPALAYAM,

COIMBATORE.

Telephone : 18 & 818 | Branch at | Telephone : 18.
Telegrams : 'LAKSHMI' | **Kovilpatti** : | Telegrams: 'LAKSHMIMIL'

SPINDLAGE AT { COIMBATORE—59,680 & LOOMS 200
KOVILPATTI — 51,120 }

★

SPINNERS OF :

Quality Cotton Yarn 20s to 100s Combed and Staple Fibre Yarn

★

Manufacturers of :

GREY LONGCLOTH AND MULLS

: MANAGING AGENTS :

G. KUPPUSWAMY NAIDU & CO.,

COIMBATORE.

விசா! விசா! விசா!

குமரி அனந்தன். எம்.ஏ

இருளரக்கனின் வயிற்றை ஒளிக் கரங்கள் கிழிப்பதைப்போல் இரவில் இரயில் ஓடிக்கொண்டிருந்தது. வண்டியில் கூட்டம் அதிகமில்லை. நானிருந்த பெட்டியில் ஒரு இல்லறத்தார் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவர், அவர் மனைவி, குழந்தைகள் எல்லோரும் அங்குமிங்குமாக, மேலும் கீழுமாகப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தனர். ஆமாம்; நேரமும் பதினொன்றை எட்டப் போகிறதல்லவா?

மேலே சாமான்களுக்கு மட்டும் என்று எழுதப்பட்டிருந்த பலகைகளில் இருவர் தூங்கிக் கொண்டிருந்தனர். ஒருவர் இலேசாகக் குறட்டை ஒலி எழுப்பிக் கொண்டிருந்தார். எனக்கு நேராக எதிரில் ஒரு இளைஞன், எழிலான இளைஞன் என்று தாராளமாகச் சொல்லலாம், அமர்ந்திருந்தான். எதைப்பற்றியோ அடிக்கடி சிந்திப்பதும் அச்சிந்தனைகளை அழிப்பது போல தலையை அசைத்து விட்டு வெளியே தலையை நீட்டிக் கொண்டிருப்பதுமாக இருந்தான்.

நான் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மூடிவைத்துவிட்டு, சிகரெட்டைப் பற்ற வைத்தேன். வெளியே கன்னங்கறுத்த இருள். அதற்கடுத்து சன்னல் வழியாக நிலத்திலே மங்கலாக விழும் ரெயில் விளக்கின் ஒளி. அந்த ஒளியிலே...என் நிழல்...இருள் ஒளி...நிழல் வாழ்க்கைத் தொடர் போலவே இருளும் ஒளியும்... என் சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு எதிரே பார்த்தேன்.

அந்த இளைஞன் இரண்டொரு காகிதங்களை வைத்துப் படித்துக்கொண்டிருந்தான். அவன் முகத்திலே புன்னகை, சிந்தனை இரண்டும் குழைத்துப் பூசியிருப்பது போன்றிருந்தது.

அவன் பத்திரிகைக்கு எழுதிவைத்திருக்கும் கதையாக இருக்கலாம்; அல்லது இளம் மனைவி தீபாவளிக்குஅவன் வரவை எவ்வாறு எதிர்பார்த்திருக்கிறாள் என்ற உள்ளத்துணர்ச்சியை ஏந்தி நிற்கும் கடிதமாக இருக்கலாம். மணமாகாதவனாக இருந்தால்...ஒரு வேளை...இல்லை அநேகமாக காதல் கடிதம்...

"ஏன் சார்! வண்டி விருதுநகருக்கு எப்பொழுது போய்ச் சேரும்?" இளைஞன் என்னிடம் கேட்டான்.

"ரெயில் எப்போதும் போல் தாமதமாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது. பன்னிரண்டுக்குள் போய் விடும்" என்றேன் நான்.

அவன் கடிகாரத்தைப் பார்த்தான். நான் வெளியே பார்த்தேன். என் உதட்டிடையில் இருந்த வெள்ளை நிறமான சிகரெட் நிழலில் கறுப்பாகத் தெரிந்தது.

வண்டி திருமங்கலத்தில் நின்றது. கூவியழைத்து மக்களுக்கு உலகச் செய்தியை ஊட்டுவதிலே முனைந்திருந்த தினத்தாள் விற்கும் பையனிடம் ஒரு பத்திரிகையை வாங்கினான் இளைஞன். வண்டி பாலத்தின்மீது போய்க் கொண்டிருந்தது. நான் சிகரெட்டை எட்டி வீசி விட்டுக் கண்களை மூடினேன்.

ரதியும், மன்மதனும் அவர்களை இணைத்தார்கள்; துப்பாக்கி முனையும் துண்டுச் செய்தியும் பிரித்துவிட்டது! ரசமாகக் கதையைப் படைக்கிறார் தோழர் குமரி அனந்தன்!

‘தடா’வென்று சப்தம் கேட்டு நான் விழித்தேன். எதிரே இருந்த இளைஞன் கீழே விழுந்து கிடந்தான். அவன் வாயிலிருந்து குபுகுபு வென்று இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. இல்லறத்தார் விழித்தார். அவர் மனைவி ‘ஆ’ வென்று அலறினாள். நான் பதட்டத்தோடு சங்கிலியைப் பிடித்து இழுந்தேன். இல்லறத்தார் இளைஞனின் மூக்கில் விரலை வைத்துப் பார்த்தார். மூச்சு இல்லை என்பதை அவர் முகம் காட்டியது.

“கொலைதான்... பாவிப் பயலுக பணத்துக்காக...” அலறிக் கொண்டே கைக்குழந்தையை வேகமாக எடுத்து அணைத்துக் கொண்டாள் அந்த அம்மாள்.

“இருதயம் வெடித்திருக்குமோ...?” என்றார் அவள் கணவர் ரெயில் நின்றது. போலீஸ் அதிகாரிகளும், ரெயில் அதிகாரிகளும் பெட்டிக்குள் ஓடி வந்தனர்.

மார்போடு ஒட்டிக் கிடந்த காகிதங்களையும், பத்திரிகையையும் போலீஸ் அதிகாரி எடுத்துக் கொண்டார். எங்களைச் சோதனை போட்டார். யாரும் இறங்கக்கூடாது என்று கட்டளையிட்டார். வெளியே கூடி விட்ட கூட்டத்தைக் கலைத்தனர் சில போலீஸ் காரர்கள்.

“அந்தக் காகிதங்களைப் படித்துக் கொண்டிருந்தார். திருமங்கலத்தில் பத்திரிகை வாங்கினார். அதன் பிறகு என்ன நடந்ததோ தெரியாது. நான் தூங்கி விட்டேன். ஒரு சப்தம் கேட்டு விழித்தேன். அவர் கீழே விழுந்து கிடந்தார்” என்னிடம் கேள்வி கேட்கப்பட்டபோது நான் இவ்வாறு பதிலளித்தேன்.

நான் அமர்ந்திருந்த இடத்தில் உட்கார்ந்து காகிதங்களைப் படித்தார் போலீஸ் அதிகாரி. நான் நின்று கொண்டிருந்ததால்



நானும் கடிதத்தைப் படிக்க முடிந்தது.

அன்புள்ள அத்தான் அருணன் அவர்களுக்கு, 'ஒளி' என்ற புனை பெயர்த் திரையைக் கிழித்து உண்மையை அறிந்த இவள் யார்? அத்தான் என்று வேறு அழைக்கிறாளே! என்று திகைக்கிறீர்களா?

என்னைத் தவிர வேறுயார் அத்தான், உங்களை அத்தான் என்று அழைக்கமுடியும்? இப்பொழுதாவது அறிந்திருப்பீர்கள், நான் யார் என்று! ஒரு வேளை நான் இதுவரை உங்களை அத்தான் என்று அழைக்கவில்லை, அழைக்க வாய்ப்பில்லை என்ற காரணத்தால் சிறிது குழப்பம் ஏற்படலாம். நான்தான் விசா... திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோவிலிலே சில வினாடிகள் சந்தித்த விசா. வேதனைக் கிடையிலும் பழைய நினைவு எத்தனை எத்தனை இன்பமாக இருக்கிறது, மழை தூற்றிக் கொண்டிருக்கும் பொழுது அடிக்கும் வெயிலைப் போல்!

சென்ற 'பதுமை' இதழில் 'எங்கே என் இதயம்' என்ற கதையைப் பார்த்தேன். தலைப்பிலே எழுதியது 'ஒளி' என்று போடப்பட்டிருந்தது. இதுவரை ஒளித்திருந்த என் இன்பமாம் உங்களைக் காண வழியிருந்தது கதையில் கதைத் தலைவனும் தலைவியும் முதன் முதலில் சந்திக்கும்கட்டம்...

எழிலுருவம் ஒன்று ஆண்டாள் கோவில் சுற்றுப்பிரகாரத்தில் சுற்றி வந்து ஒரு சிலையின் முன்னால் நின்றது. அந்த உருவத்தையே தொடர்ந்து சுற்றி வந்த இரண்டு கண்களும் கால்களும் அந்தச் சிலையின் பக்கத்திலே நின்றன. ஆம்; அவள் பக்கத்தில் அவள்!

அவன் யாரோ; அவனுக்குத் தெரியாது. அவன் சென்னையைச் சேர்ந்தவன். ஊர் சுற்றிப் பார்க்க வந்தவன்; திருவில்லிப்புத்தூருக்கு வந்தான். வந்த இடத்தில் எதிர்ப்பட்டாள் அந்த மந்தகாசத் தென்றல். அவன் வாலிபன். உள்ளம் அழகிலே மயங்கி, குறும்பிலே அதை வெளிப்படுத்த விரும்பியது.

"அன்னமோ...?"

....

"ஆமாம்" அன்னமே தான்!

"ரதி...! அழகுக்கழகி ரதிதான்...ரதியே தான்!"

அவள் சட்டென்று திரும்பினாள். கோபகுக்றியை முகம் தீட்டியது.

"பெரிய மன்மதன்... சீ..." இவ்வாறு கூறிவிட்டு வேகமாக மறு சிலைக்கு நகர்ந்தாள்.

"மன்னிக்க வேண்டும்! தப்பாகப் புரிந்து கொண்டீர்கள். அன்னமென்றும், ரதியென்றும் உங்களைச் சொல்ல வில்லை. அத்தனை பாக்கியசாலியல்ல நான். அதோ பாருங்

கள்! அன்ன வாகனத்தில் ரதியை.''

அவள் சிலையைத் திரும்பிப் பார்த்தாள்.

"கீழே 'ரதி யென்று' எழுதிக்கூடப் போட்டிருக்கிறுர்களே !''

"ஓ...அப்படியா......ஆமாம் பார்த்தேன்...நானும் உங்களை மன்மதன் என்று சொல்லவில்லை. சிலையைத்தான் சொன்னேன்'' விரலை நீட்டி ரதி சிலைக்கு எதிரே சுட்டிக் காட்டினுள்.

அங்கே மன்மதன் சிலை இருந்தது. ஒரு கையிலே கரும்பு வில்; மறு கையிலே மலர்க்கணை.

"ஆமாம் பார்த்தேன். மன்மதன் சிலைதான் ! நான் 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்பது போல ரதியையே ஒரே அடியாக ரசித்து விட்டதால் மன்மதச் சிலையைப் பார்க்கவில்லை.''

அவள் அரை குறையாக அதைக் கேட்டாள். மறு சிலையை நோக்கி சென்றன, அவள் பொற் பாதங்கள்.

எதிரே இருக்கும் ரதி சிலையை நோக்கி எத்தனை ஆண்டுகளாக அந்த மன்மதச் சிலை அங்கே இருக்கிறதோ அவனுக்குத் தெரியாது. ஆனுல் ஒரே ஒரு கணம் மட்டும் இப்பொழுது உண்மை மன்மதனுக மாறி, அந்த அழகிமேல் காதல் மலர்க்கணையை எய்துவிட்டால்...?

கொடியை மீண்டும் தொடர்ந்தது மரம் !

" மன்னிக்க வேண்டும்!''

அவள் நின்றுள்; திரும்பினுள். 'ஏன்? எதற்கு? என்ற கேள்விகளைக் கண்களிலே எழுதிவிட்டுப் புருவத்தை வளைத்து நின்றுள்.

"பஞ்சமா பாதகங்களிலே ஒன்றைச் செய்து விட்டேன்! நீங்கள் என்னை அந்தப் பாவப்பிடியிலிருந்து மன்னித்து விடுதலை செய்ய வேண்டும்! ஆமாம்; உங்களிடம் பொய் சொல்லிவிட்டேன். ரதியென்று உங்களைத்தான் சொன்னேன்!''

"அதனுல் பரவாயில்லை! நானுந்தான் அதே பாவத்தைச் செய்திருக்கிறேன். மன்மதன் என்று உங்களைத்தான்...''

"அன்பே! உன் பெயர்?''

"விசா...உங்...''

"என் பெயர்தானே? அருணன், B.A.''

"ஓ! என் பெயர் விசா, இன்டர்!''

முகத்தாமரை மலர் ஒன்றுதானே புன்னகை மலரையும் பூக்கிறது? மலருக்குள் மலர்; மலரின் மலர்; அப்பொழுது அவள் பூத்த புன்னகை!

"மிக்க மகிழ்ச்சி! மிகவும் பொருத்தம்! இதே ஊர்தானு விசா? தெரு? வீட்டு எண்?''

"இதே ஊரல்ல! தஞ்சைக்குப் பக்கத்தில்...!'' "விசா! விசா...எவ்வளவு நேரமம்மா சிலைகளைப் பார்க்கிறது? வண்டிக்கு நேரமாகிறது''

"அப்பா வருகிறுர்...''

"உன் விலாசம்...''

"விசா...வாம்மா சிக்கிரம்'' குரலும் குரலுக்குரியவரும் பக்கத்திலே வந்தாயிற்று.

"நேரமில்லை! அப்பா வந்துவிட்டார். அடுத்த மார்கழித் திருவிழாவிற்கு இதே...இல்லை...மன்மதன் ரதி சிலைகளுக்குப் பக்கத்தில்...''

அவள் வேகமாகப் போய்விட்டாள்.

* * *

அத்தான்! என் ஒளி விளக்கே! இது உங்கள் ரசிக கோடிகளுக்குக் கற்பனைக் கதையாகத் தெரியும். ஆனுல் இது நம் கதை! நம் இருவர் பெயரைக்கூட நீங்கள் மாற்றவில்லையே! உங்கள் கதையில் காதல் கொண்ட உள்ளத்தின் பிரதிபலிப்பு அப்படியே படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் கதையில் எழுதிவிட்டீர்கள், எழுத்தாளராக இருப்பதால். நான் என் உள்ளத்தே எழுதியிருக்கிறேன்! உங்கள் முகவரி கிடைக்க வாய்ப்பளித்த 'பதுமை' பல்லாண்டு வாழ்க!

உங்கள் கதையின் தலைவன் காதலியைக் காணுமல்—அவன் இதயம் போன்ற காதலியைக் காணுமல்—ஊர் ஊராகத் தேடியலைவதாக எழுதியிருக்கிறீர்கள். நீங்கள் என்னைத் தேடி அலைந்திருக்கிறீர்கள், தஞ்சைக்குப் பக்கத்தில் உள்ள ஊர்களில் எல்லாம் என்று எனக்குத் தெரிந்து விட்டது. அத்தான்! என் காதலைப் போலவே தான் உங்கள் காதலும் ஆழமாக இருக்கிறது என்பதைப் புரிந்து

மகிழ்ச்சியிலே மூழ்கிக் கொண்டிருக்கிறேன்.

நாம் சந்தித்தது சில விநாடிகளே! ஆயினும் நம் காதல் பிரிவாலும் காலத்தாலும் கரைக்க முடியாதது! நீரும் பாலும் ஒன்று சேர பல மணி நேரம் கலக்கிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. தேன் நாவிலே பட்ட உடனேயே சுவை தெரிந்து விடுகிறது.

'இதயம் எங்கே?' என்று தேடும் என் இதயத்தின் இதயமே! இதோ நான்! உங்கள் விசா! ஓடி வந்து அழைத்துச் செல்லுங்கள்.

பார்த்தீர்களா அத்தான்! வேண்டிய விபரங்களையும், நான் எங்கிருக்கிறேன், எந்த நிலையில் இருக்கிறேன் என்பதையும் முதலில் எழுதாமல், உங்களைக் கண்டு பிடித்துவிட்ட மகிழ்ச்சிப் போதையில் எப்படியெல்லாமோ சுற்றி வளைக்கிறேன்.

அன்று உங்களிடம் என் முகவரியைக் கொடுக்க முடியவில்லை. தஞ்சைக்குப் பக்கத்திலே உள்ள கிராமத்தில் என் தந்தை வியாபாரம் செய்து கொண்டிருந்தார். பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விட்டதால் கடன் தொல்லையை ஒருவாறு தீர்த்து விட்டு, குடும்பத்தோடு யாரிடமும் சொல்லாமல் விருதுநகர் வந்து விட்டார். எனக்கு உடல்நிலை சரியில்லாமல் போய் விட்டது. இந்த நிலையில்தான் மார்கழித் திருவிழா வந்தது! என் வாக்குறுதியைக் காப்பாற்ற முடியவில்லை.

தாங்கள் என்னைத் தேடி மன்மதன், ரதி சிலைகளுக்குப் பக்கத்தே நிற்பீர்கள் என்று நினைத்த பொழுது என் இதயம் வெம்பித் துடித்தது. கண்ணீர் திருமளவும் அழுதேன்; அபலை வேறென்ன செய்ய முடியும்?

உங்கள் உருவை மனக் கோயிலிலேயே வைத்து, கண்ணீரால் நீராட்டி, அன்பு மலர்களால் வணங்கிவந்தேன். அதன் பலன்தான் நீங்கள் கிடைத்தீர்கள்.

கடையிலிருந்து அப்பா வந்து விட்டார். எந்தக் கணத்தில் என் அறைக்கு வருவார் என்று சொல்ல முடியாது. எனவே, சுருக்கமாக நான் எப்படிப் பட்ட இக்கட்டான நிலையில் இருக்கிறேன் என்பதை எழுதுகிறேன்.

கவனித்துப் படியுங்கள் அத்தான்! எந்தத் தடையையும் உடைத்து நாம் ஒன்று சேர்ந்து விடுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஏனெனில் நாம் சந்தித்தது ஆண்டாள் கோவிலில். அவள் கண்ணனைக் காதலித்து வெற்றி கண்டாள். நமக்கு காதல் ஏற்பட்டது ரதி, மன்மதன் சிலைகளால்!

தந்தை என் திருமணத்திற்கு நிச்சயித்துவிட்டார். ஒரு முரட்டுப் பட்டாளத்து அதிகாரியை நான் மணந்து கொள்ள வேண்டுமாம். மறுத்துப் பார்த்தேன்; பலனில்லை. எனவே திருமணத்திற்கு முன்பு தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்திருந்தேன். இனி நான் சாகமாட்டேன்! என் வாழ்வே! மன்மத அருணனைக் கண்டு பிடித்த பிறகு இந்த விசாரதிக்கு வாழ்க்கை கசக்கவில்லை; இனிக்கிறது; அமுதமாக இனிக்கிறது.

அவர்கள் திட்டப்படி எனக்கும் அந்த முரட்டு அதிகாரிக்கும் திருமணம் 2—11—58 ஞாயிற்றுக்கிழமை! நீங்கள் விருதுநகரின் மேற்குப் பாகத்திலிருக்கும் புதுச்சோலைத் தெரு 19 வது எண் வீட்டிற்குச் செவ்வாய்க்கிழமை (28-10-58) இரவு சரியாக இரண்டு மணிக்கு வாருங்கள். வீடு ஓட்டு வீடு. கதவு நிலைகளில் நீலம் பூசியிருக்கும். சன்னல் ஓரத்தில் வாருங்கள். நான் விழித்தே இருப்பேன். நாம் எங்காவது போய் விடலாம். அத்தான்! மறக்காதீர்கள். என் வாழ்வு உங்கள் வரவில்தான் இருக்கிறது. என் உள்ளத்து இருளை ஓட்டுகின்ற அருணனாக—ஒளியாக—வாருங்கள். என் மனத்திலே இருக்கும் ஏக்கத்தை எழுதித் தீர்க்க நேரமில்லை; நாம் பேசித் தீர்க்கலாம்; வாழ்ந்து தீர்க்கலாம்.

அன்புக் காதலி,

விசா.

கடிதத்தைப் படித்து முடித்ததும் பரபரப்போடு போலீஸ் அதிகாரி பத்திரிகையைப் புரட்டினார். ஒரு செய்தியிலே அவர் கண்கள் நிலைத்தன.

திருமணம் செய்ய இளம் பெண் மறுத்ததால் இரட்டைக் கொலை!

விருதுநகர், அக்டோபர் 28 :

விசா என்ற அழகான இளம் பெண்ணை ராஜன் என்ற பட்டாள அதிகாரிக்குத் திருமணம் செய்ய நிச்சயித்திருந்தார்கள். பெண்ணுக்கு இந்த திருமணத்திலே சம்மதமில்லையாம். எப்படியோ வீட்டாரெல்லாம் ஞாயிற்றுக்கிழமை திருமணம் என்று முடிவு கட்டி விட்டார்கள்.

இந்நிலையில் பட்டாள அதிகாரிக்கு விடுமுறை ரத்தாகி உடனே வேலையில் சேரும்படி உத்தரவு வந்தது. எனவே, ஞாயிற்றுக்கிழமை நடக்க வேண்டிய திருமணத்தைச் செவ்வாய்க்கிழமையே பதிவுத் திருமணமாக நடத்த வேண்டும் என்றாராம் ராஜன்.

செத்தாலும் ராஜனை மணக்க மாட்டேன் என்றாளாம் விசா. இதனால் ஆத்திரமடைந்த ராஜன் கைத்துப்பாக்கியால் விசாவைச் சுட்டு வீழ்த்தினார். தடுத்த பெண்ணின் தந்தையும் பிணமாக்கப்பட்டாள்.

கொலையாளி கைது செய்யப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. போலீஸார் மேலும் புலன் விசாரணை செய்து வருகிறார்கள். இந்த இரட்டைக் கொலை ஊரிலே பெரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ந.நி.)

நான் கலங்கிய கண்ணோடு வெளியே பார்த்தேன். உலகம் இருளில் புதைந்து கிடந்தது. ★

AT YOUR SERVICE

Grams : CORONATION

Phone : 54

THE CORONATION LITHO WORKS

DHARMAVILLA BUILDINGS

POST BOX NO. 2. SIVAKASI. (S. I.)

PIONEERS IN FINE ART LITHO & OFFSET PRINTING. CONTACT FOR PRINTING LABELS CALANDERS, ADVERTISEMENT POSTERS etc. FOR ALL TRADES.

Distributors for: HOOGHLY INK Co, Private, Ltd.

பேட்டனுக்கு பிடித்த பித்து



அவன் திடீரென்று தோன்றுவான்: திடீரென்று மறைந்து விடுவான். 'எங்கே போகிறான்? எப்படிப் போகிறான்?' என்று ஒருவருக்குமே தெரியாது.

அவனுக்குத் திருமணமாகி இரண்டு வருடங்களாகின்றன. அது முதல்தான் அவன் இப்படி யிருக்கிறான்.

அவன் மனைவியோ நல்ல அழகி. அவ்வழகியைத் தவிக்க விட்டுச் செல்ல அவனுக்கு எப்படித்தான் மனம் வருமோ தெரியவில்லை.

திடீரென்று வருவான். ஒரு நாள் அல்லது இரண்டு நாள் தன் மனைவியுடன் கொஞ்சுவான். வந்ததுபோலவே போய் விடுவான். இன்னொரு முறை அவன் வரும் வரையில் அவள் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகத் தான் இருப்பாள்.

திருவிடைமருதூர் சேஷாத்திரி

எங்கே சென்றாலும் மனைவியையும் கூட அழைத்துச் செல்லும் நாடோடிக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள். நல்ல பலசாலிகளாகவும் மனோ உறுதியுடனும் தான் இக் கூட்டத்தினர் இருப்பார்கள். இவர்கள் இருவரும் விதி விலக்குப் போல் இருந்தார்கள். இவர்கள் இணைந்தது தான் இன்னும் ஆச்சரியம்!

அவளுக்கு அவன் பேரில் நிறைந்த அன்பு உண்டு. அவன் அவளை விட்டுப் பிரிந்து செல்லும்போதெல்லாம் அவளுடைய துயரம் கண்ணீர்ப் பெருக்காக மாறும். தன்னிடம் கூட சொல்லிக் கொள்ளாமல் போகிறாரே என்பதுதான் அவளுடைய அளவு கடந்த வருத்தம். அவன் எப்போதும தன் அருகிலேயே இருக்கவேண்டும் என விரும்பினாள். அந்த அவளுடைய எண்ணம் நிறைவேறிக் கொண்டு தான் வந்தது. ஆனால், இப்படித் திடீர் திடீரென்று மறைந்து விடுகிறானே, அதை என்னென்பது?

அவனுக்கும் அவளிடம் நிறைய ஆசை தான். வந்ததும் நேராகத் தன் மனைவியிடம் தான் போவான். அவளுடனே தான் இருப்பான். அவன் திரும்பிப் போகும் வரையில் அவளுடன் கொஞ்சிக் கொண்டிருப்பான். ஒரு நிமிடம் கூட சும்மா இருக்க மாட்டான். அப்படி இருப்பவன் தான் நாட்கணக்கில் அவளைத் துடிக்க வைத்துவிட்டுப் போய் விடுவான்.

ஏன், அவளை அடைவதற்காகத் தன் உயிரையும் திருணமாக மதித்தல்லவா அவன் போராடினான்.

ஆமாம். அவள் பேரழகி என்றல்லவா சொன்னேன்! அஜந்தா ஓவியம் போல எழில் படைத்தவள். அவளை அடைய யாருக்குத்தான் ஆசையிருக்காது? எல்லோருமே

பேட்டனைப் பித்தனென்று நினைத்தார்கள் பிறர்: அவனது பேடையான ராஜாளிக்குக் கூட அவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏன், கலைஞர்கள் என்று நாகரீக உலகில் நடமாடியவர்களே திகைத்து விட்டார்களே!

போட்டி போட்டார்கள். அவளுடைய அப்பனுக்கு யாரைப் பொறுக்குவது என்று தெரியவில்லை. அதற்காக அவன் ஒரு யுக்தி செய்தான்.

அவளுடைய அப்பன் சிலம்பம் ஆடுவதில் நல்ல தேர்ச்சியுடையவன். அவளை மணக்க விரும்பும் ஒவ்வொரு வாலிபனும் அவனுடன் சிலம்பம் விளையாட வேண்டும். யார் அவனுடைய கழியைக் கட்டுகிறானோ அவன்தான் அவன் மகளைக் கட்டிக் கொள்ள வேண்டும். இந்த யோசனையை அக் கூட்டத்தினர் ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

இவ்வறிவிப்பைத் தொடர்ந்து அப்பேரழகிக்கு—அதுதான் ராஜாளிக்கு- உள்ளூரப் பயம் உண்டாயிற்று. ஏனெனில் அவள் **அவனை** விரும்பினாள். ஆமாம், பேட்டனைத் தான் அவள் விரும்பினாள். அது எப்படி நிகழ்ந்தது என்று ஒருவருக்கும் தெரியாது. அவர்களின் இரகசியச் சந்திப்பெல்லாம் இவர்களுக்குத் தெரியாது. அவர்கள் கூடாரமடித்த இடத்திலிருந்து நிரம்பத் தூரத்திற்கு அப்பால்தான் அவர்கள் சந்திப்பார்கள்.

இவ்வறிவிப்பு இருவரையும் கதிகலங்க வைத்தது. அவன் சிலம்ப விளையாட்டில் சுமாரான தேர்ச்சியுடையவன். அதிகத் தேர்ச்சியுடைய அவளுடைய அப்பனுடன் சண்டையிட்டு ஜெயிப்பது எங்ஙனம்?

ஒரு வாரம் அந்தப் போட்டி நடந்தது. அந்த ஒரு வாரமும் இருவரும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு தான் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். நல்ல வேளையாக யாருமே ஜெயிக்கவில்லை. அதற்காக அவர்கள் இருவரும் வேண்டாத தெய்வங்கள் இல்லை.

கடைசியாகத் தான் அவனுடைய முறை வந்தது. அன்று பூராவுமே அவள் கூடாரத்தை விட்டு வெளியே வரவில்லை. அழுதுகொண்டே இருந்தாள். தேவதைகளை யெல்லாம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள்.

அவளுடைய அம்மா அவளைத் திட்டிக் கொண்டிருந்தாள். "இந்த சாதியிலில்லாத பொம்பளை...ஏன் தான் இப்படி அதிசயமா அளுவிறியோ?" என்றாள். "கேடு கெட்டவளே என்னடி அழுகை!...என் வயிற்றில் பிறந்தையே, அதைச் சொல்."

இன்னும் என்னவெல்லாமோ திட்டினாள். அவள் வசை மாரிகளுக்குப் பயந்து கொண்டு தன் அழுகையை அடக்கப் பார்த்தவளுக்கு அது இன்னும் வேகமாகக் குமுறிக் கொண்டு வருவதுதான் தெரிந்தது.

அவ்வளவு நேசித்தாள் அவனை!

அவன் மாத்திரம் என்ன? வெற்றி அல்லது சாவு என்ற தோரணையில் தான் சண்டை செய்தான். அவனையறியாமல் அவன் போர் செய்தான். அவனையறியாமல் புதுப்புது யுக்திகள் திடீர் திடீரென்று தோன்றின. அந்த யுக்திகள் தேர்ச்சியடைந்த அவளுடைய அப்பனைத் திணர அடித்தன.

அது மாத்திரமல்ல. ஒரு வாரமாகத் தொடர்ந்து பலருடன் சண்டை செய்ததாலும் இன்று கடைசியாக அவன் முறையின்போது மிகுந்த களைப்படைந்ததாலுமே அவனால் ஜெயம்பெற முடிந்தது.

எல்லோரும் கண் கொட்டாமல் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு நின்றனர். எல்லோரும் ஆச்சரியப்படும்படி கடைசியாக அவன் ஜெயித்தான்.

இந்த நல்ல சமாசாரம் கேள்விப்பட்ட பிறகு தான் ராஜாளியின் மனம் நிம்மதி யடைந்தது. நிம்மதியடைந்ததோடா? துள்ளிக் குதிக்கவும் ஆரம்பித்து விட்டதே. வழக்கமான சந்திக்குமிடத்திற்கு ஓடோடியும் சென்றாள். அவனும் சண்டை முடிந்ததும் அவளைப்பார்க்க அத்தனியிடத்திற்கு வந்து விட்டான். அன்று பூராவுமே மகிழ்ச்சிக் கடலில் மிதந்தனர் இருவரும்.

அப்பேர்ப்பட்டவன் இப்போது அவளைத் துடிக்கவைக்க திடீர் திடீரென்று தோன்றி மறைகிறான். அதன் காரணம் தான் புரியவில்லை!

சண்டை முடிந்த தினத்திலிருந்தே அவன் ஒரு மாதிரியாக இருந்தான். தனியாக உட்கார்ந்து கொண்டு வெட்ட வெளியைப் பார்த்து ஏதேதோ சிந்தித்த வண்ணம் உட்கார்ந்திருப்பான்.

ஆமாம். அவன் சிலம்பம் விளையாடும்போது கெலிக்க வேண்டுமே என்ற எண்ணத்தில் புதுப் புது யுக்திகள் அவனை யறியாமல் தோன்றின.

அது மூளைக்குப் பயிற்சி கொடுத்து தூண்டிவிட்டது போல் ஆயிற்று. தூங்கிக் கிடந்த அவனது இயற்கைக் கற்பனை பெருக்கெடுக்க ஆரம்பித்தது. கற்பனைப் பெருக்கின்போதுதான் மெய் மறந்து தனிமையில் உட்கார்ந்திருப்பான். வெற்றிக் களிப்புதான் அவனை அப்படிச் செய்திருக்கிறது என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால், அவனுள்ளத்திலே என்னென்னவோ எண்ணங்கள் குமிழியிட்டுக் கொண்டு வந்ததை அவர்கள் அறியவில்லை. அவள் கூட அறியவில்லையே? அறிந்திருந்தால் இப்படிக் கண்ணீர் சிந்திக் கொண்டிருப்பாளா?

திருமணம் அவர்கள் முறைப்படிதான் நடந்தது. அதன் பிறகு அவனுடைய கற்பனைச் சிறகு அடித்துப் பறக்க ஆரம்பித்தது.

ராஜாளியின் உடலழகை நிலவில் பார்க்கும்போது என்னென்னவோ கற்பனைகள் அவனுள்ளத்திலே கிளம்பின. அவளுடைய ஒவ்வொரு அங்கமும் அவனிடம் ரகசியம் பேசின. ஒவ்வொரு இனிய கற்பனையை எழுப்பின. அப்போதெல்லாம் இன்னது செய்வது என்று தெரியாமல் திக்பிரமை பிடித்து நிற்பான். நாளுக்கு நாள் அதன் சுமை அவனை அழுத்திற்று. அவனுடைய கற்பனையைப்போல் எங்கேயாவது ஓடவேண்டும் என்று தோன்றும் அவனுக்கு. அதை அடக்குவான். ஆனால், அது குமுறிக் கொண்டு வந்தது. அவ்வளவுதான். அவன் திடீரென்று மறைய ஆரம்பித்தான்.

தன் கால் போன போக்கில் சுற்றுவான். காடு, வனாந்திரம், பொட்டைத் திடல், பசும் புல் வெளிகள், வயல் வரப்புகள், நாடு நகரங்களில் சுற்றுவான். தன்னிலை அடையும்போது திரும்பி வருவான். மனைவியுடன் கொஞ்சுவான். அவளுடைய அங்கங்கள் அவனுடன் பேசும். திடீரென்று கற்பனை பிறக்கும். அவனும் மறைந்து விடுவான்.

இதற்கு அப்பேதை எவ்விதம் அணை போடுவாள்? கூட்டத்தினர் அவளைத் திட்டினர். அவளுடைய பெற்ற அன்னையும் அப்பனுமே திட்டினர். அவள் மாமியார் வேறு பிடுங்கி எடுத்தாள். எல்லாமாகச் சேர்ந்து அவளைத் துயரக் கடலில் ஆழ்த்தி விடும். ஊண் உறக்கமற்று அழுது கொண்டிருப்பாள். அவளுக்குத் தேறுதல் சொல்லக்கூட ஒருவரும் முன்வரவில்லை. மாறாக இன்னும் திட்டுவதற்கு ஆட்கள் இருந்தனர். ஏங்கி ஏங்கி, அழுது அழுது சாவதுதான் அவளுடைய விதியா?

அப்படித்தான் எல்லோரும் சொன்னார்கள். அவனை மணந்தபோது அவளை விடப் பாக்யசாலி யாருமே இல்லை என்று நினைத்திருந்தாள். ஆனால், இன்று...? அவளைப் போன்ற அபாக்யவதி இல்லை என்ற அளவிற்கு வந்துவிட்டது.

திடீரென்று மறைபவன் எங்கெங்கெல்லாமோ சுற்றுவான். அழகிய இயற்கைக் காட்சிகள் அவனைக் கவரும். மெய்மறந்து பார்த்துக் கொண்டு நிற்பான். அவை அவனுள்ளத்திலே படம் பிடித்தது போலப் பதியும். நகரங்களில் செல்லும்போது போட்டோக்களைப் பார்த்து பிரமித்து நிற்பான். நல்ல ஓவியங்களின் அருகில் நின்று காலத்தைக் கழிப்பான். ஓவியங்கள் தீட்டுவதை நீண்ட நேரம் உற்றுக் கவனித்துக் கொண்டிருப்பான். ஒவ்வொரு செய்கையும் அவனுள்ளத்திலே படம் பிடிக்கப்படும். மனம் ஒருவாறு சாந்தியடையும். தன் கூடாரத்திற்கு வருவான். அவள் அழுது கொண்டிருப்பாள். அவளைச் சமாதானப் படுத்துவான். அவனுடைய ஸ்பரிசம் பட்ட மாத்திரத்திலேயே அவளுடைய துக்கமெல்லாம் பறந்து விடும். மகிழ்ச்சிக் கடலில் மிதப்பார்கள். திடீரென்று மறைவான்.

அப்படித்தான் அன்றும் அவன் திடீரென்று தோன்றினான்.

கையில் ஒரு தடி. முழங்காலுக்கு மேல் நீலக்கட்டம் போட்ட ஒரு கைலி. கழுத்தில் கறுப்புக் கயிற்றில் ஒரு ரட்சை. நீண்டு அடர்ந்த மீசை, தலையில் சிகப்புத் துணி முண்டாசு. நன்கு அகன்று பரந்த மார்பு. பலம் மிகுந்த கைகால்கள். கரிய நிறம்-இவன்தான் பேட்டன். ராஜாளியின் புருஷன். அவன் தோள் பட்டையில் நீண்ட ஒரு பை தொங்கிற்று.

வந்ததும் எப்போதும் போல் தன் கூடாரத்திற்குத் தான் போனான்.

[illegible]
ருந்தாள். இன்று மாத்திரம் அவளை அவனால் சமாதானப்படுத்த முடியவில்லை. எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான். கொஞ்சிப் பார்த்தான். ஆனால், அவள் சமாதன மடைகிற வழியாயில்லை. அவன் சமாதானம் செய்யச் செய்ய அவள் இன்னும் விம்மி, விம்மி அழுதாள்.

திடீரென்று எழுந்திருந்தாள்; “ஆமாங்...இப்படித் திடீர் திடீரென்று போறயே? எங்கேதான் போவுறே?...”

“எங்கே போவுறேனா? அது எனக்கே தெரியாதே...”

“ஆம...பாதயா? எங்கே போவுறேன்னு உனக்கே தெரியாதா?... தெரியாதான்னு கேக்குறேன்?...” அவள் குரல் பலமாக இருந்தது. முழியை உருட்டி விழித்துக் கேட்டாள்.

“ஆமாங்கறேன்...இல்லாட்டி உன்னை விட்டுவிட்டு இப்படி ஓடுவேனா?...உன் தலையிலே அடிச்சு சத்தியமா சொல்றேன்...நான் எங்கே போறென்னு எனக்கே தெரியாது...”

“எங்கேயாவது போய்த் தொலை... என்னையும் இளுத்துக்கிட்டுப் போவுறது தானே?...”

“திடீர்னு ஆவேசம் வந்தவ மாதிரில்லை கிளம்புறேன்”

மறுபடியும் விக்கி, விக்கி அழ ஆரம்பித்து விட்டாள்.

“என்னை இப்படி விட்டுட்டு ஓடுறியே! இது நல்லா இருக்கா?...” விக்கிக் கொண்டேதான் கேட்டாள்.

அவளுக்கென்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. அவன்



என்ன ...வேண்டுமென்று ஓடுகிறான்! அவனுக்கே தெரியாமல் அவளையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"ஏன் முளிக்கிறே? சொல்லேன் ...விட்டுவிட்டுப் போறியே நல்லா இருக்கான்னு கேக்குறேன் ..." எழுந்திருந்து நின்று கொண்டு கையை ஆட்டி ஆட்டி கேட்டாள்.

"எல்லாரும் என்னைத் திட்ருங்கோ ... உனக்குத் தெரியலையா?...இனிமே நீ எங்கேயுமே ஓடப்படாது...ஆமாம்... கண்டிச்சு சொல்லி விட்டேன்..." என்று சொல்லி விட்டு மறுபடியும் படுத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

மறுபடியும் எழுந்திருந்து. "அப்ப எங்காச்சும் போனே என்னேயும் இளுத்துக் கிட்டுப் போயிறு...ஆமாங் ..." என்ருள்.

அதற்காக அவளுடன் இரண்டு, மூன்று நாட்கள் தங்கியிருந்தான். திடீரென்று எப்போதும் போல் மறைந்து விட்டான்.

இப்போது எல்லோரும் ஆச்சரியப் படும்படி ஒன்று நேர்ந்து விட்டது. அதுதான் அவளையும் காணும். அவளும் அவனுடன் மறைந்து விட்டாள். அதற்கு பிறகு அக் கூட்டத்தினர் அவர்களைப் பார்க்கவே இல்லை.

அவன் மறையப் போகும் இரவு அவள் 'கொட்டு கொட்டெ' ன்று விழித்துக் கொண்டிருந்தாள்.

நல்ல பூர்ணிமை நிலவு. திடீரென்று அவன் கூடாரத்தை விட்டு வெளிக் கிளம்பி வேகமாக ஓட ஆரம்பித்தான். இதையே எதிர்பார்த்திருந்த அவளும் அவனைத் தொடர்ந்து ஓடினுள். நீண்ட தூரம் ஓடிய பிறகுதான் அவன் நடக்க வாரம்பித்தான். அதற்குள் அவளுக்கு மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க ஆரம் பித்து விட்டது.

அவள் பெண் தானே! எத்தனை தூரம் அவனுடன் போட்டி போட்டுக் கொண்டு ஓடமுடியும்? நல்லவேளை. அவன் நடக்க ஆரம்பித்தான். இல்லையோ அவனுக்காக ஓடியே அவள் உயிர் துறந்திருப்பாள்.

அவன் எங்கெங்கெல்லாமோ சுற்றி ஞன். கடைசியில் ஒரு பாழடைந்த பழங்காலக் கோயில் ஒன்றிற்குள் நுழைந்தான் அவன். அவளும் அவனைத் தொடர்ந்து நுழைந்தாள். அது உள்ளே ஒரு குகை போல் அமைந் திருந்தது. அதன் சுவர்களில் வண்ணச் சித்திரங்கள் அழகுறத் தீட்டப் பெற்றிருந்தன. அதில் கண்ட சில பெண்ணுருவங்கள் அவளைப் பிரமிக்க வைத்தன. ஆமாம், அவை அவளுடைய உருவங்கள் தாம். கீழே நார் உரிக்காத தேங்காய் ஓடுகளில் வண்ணக் கலவைகள் இருந்தன. ஈச்சங் குச்சிகள் 'பிரஷ்' மாதிரி வைக்கப்பட்டிருந்தன. அவள் அவற்றைப் பார்த்து பிரமித்து நின்றிருந்த சமயம் தான் அவன் அவளைப் பார்த்தான்.

"அட!...நீ இங்கனே எங்கே வந்தே?..."

"நீ இட்டாராட்டி எனக்கு வழி தெரியாதுன்னு நினைச்சுக்கிட்டியா?..."

"என் ராசாத்தி...நான் சத்தியமா சொல்றேன் நாங் கிளம்பி வாறபோது இந்த உலக ஞாபகமே இருக்க மாட்டேங்குது. என்ன செய்யச் சொல்றே..."

"கிடக்கு போ..." சற்று கழித்து, "அட!...இதுக்கா இப்படி ஓடியாந்தே?..." என்று கேட்டாள் அச் சித்திரங்களைச் சுட்டி.

அவன் அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. ஓவியம் தீட்டும் வேலையில் மும்முறமாக முனைந்தான். அவள் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டு நின்ருள்.

2

வாசுதேவன் தோளில் காமிராவை மாட்டிக் கொண்டு கிளம்பிவிட்டான். தயாராகும் தீபாவளி மலருக்காக அவன் நிறைந்த, அழகான போட்டோ படங்களைக் கொடுக்க வேண்டியிருந்தது. நகரத்திலிருந்து கொண்டு அழகான காட்சிகளைக் காணுவது அபூர்வம் தான் என்பது அவனது நினைப்பு.

காமிராவைத் தோளில் மாட்டிக் கொண்டு கிளம்பி விட்டான் என்ருல் திரும்பி வருவதற்கு ஒரு வாரமோ, இரண்டு வாரமோ ஆகும் என்பது பொருள். இந்தத் தடவை அவனுடன் கூட அவனுடைய நண்பன் பலராமனும் கிளம்பி விட்டான். பேச்சுத் துணைக்கு ஆகுமல்லவா? அதோடு மாத்திரமில்லை. பலராமனுக்கு எங்கேயாவது கொஞ்சம் நிம்மதியாகப் போய்விட்டு வந்தால் நல்லது போலிருந்தது. ஆனல், வாசுதேவன் கண்ட கண்ட இடங்களை எல்லாம் சுற்றுவான் என்று அவன் கண்டானு என்ன? கிளம்பும் போது, வாசுதேவன் இதைப் பற்றிக் கூடச் சொன்ஞன். ஏதோ சாதாரணமாகச் சொல்லுகிருன் என்றுதான் அவன் நினைத்தான். ஆனல், கிளம்பிய இரண்டொரு நாட்களிலேயே வாசுதேவன் குறிப்பிட்ட இடங்களில் சுற்ற மாட்டான். சித்தம் போக்கு சிவன் போக்கு என்று தான் சுற்றுவான் என்று தெரிந்து போயிற்று. கிளம்பியாயிற்றே. பின் வாங்கலாமா? ஆதலால் பல்லைக் கடித்துக் கொண்டு தான்

அவனுடன் சென்றான். ஆனாலும், அவன் மனதிற்கு அது இதமாகவே இருந்தது. ஏனெனில், இயற்கையன்னை தன் எழிலைப் பரப்பிக் கொண்டு நிற்குமிடங்களிலெல்லாம் அவன் நேரங்களைச் செலவழித்தான். பலராமனும் கலா ரசிகன் ஆனதால் அவனுக்கும் அவை பிடித்திருந்தன. ஆனால், வாசுதேவன் எங்கெல்லாமோ புகுந்து போவதை அவன் விரும்பவில்லை. அப்படிப் போவது வாசுதேவனைப் பற்றிய மட்டில் இன்றியமையாதது. அதனால் பலராமனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. பேசாமல் பின் தொடருவதைத் தவிர வேறு வழியில்லை.

ஊரைவிட்டுக் கிளம்பி ஒரு வாரமாகியும் வாசுதேவன் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை. கிளம்பியதிலிருந்து அவனுக்கு ஏதுமே பிடிக்கவில்லை. பலப் பல காட்சிகளைப் பலப் பல கோணங்களிலிருந்து பார்த்தான். ஆனால், ருசிக்கவில்லை. சோர்ந்த மனத்துடன் தங்கியிருக்குமிடத்திற்கு வருவான்.

இந்த ஒரு வார காலத்தில் அவனுக்கு சோர்வுதான் அதிகமாக இருந்தது. இம்மாதிரி முன் எப்போதுமே இருந்ததில்லை. அவனுடைய பிரயாணம் அவனுக்கே வெறுப்பை உண்டாக்கிற்று. ஆதலால், அன்று காலை எழுந்திருக்கும் போதே சோர்வுடன்தான் எழுந்திருந்தான்.

"வாசு, இன்றைக்கு எங்கே?" என்று கேட்டான் பலராமன். "என் கால்கள் எங்கேயோ அங்கேதான்"

"ம்...இதோடு ஒரு வாரமாயிற்றே. உருப்படியாக ஒன்றையும் காணோமே..."

"ஏதாவது மனத்திற்குப் பிடித்தால் தானே உருப்படியாக ஏதாவது செய்ய..."

"ஏன்? இவ்வளவு காட்சிகளில் ஒன்றுகூட அகப்படவில்லையா?"

"அகப்பட்டால் உருப்படியாயிருக்காதா?"

"பார்த்தவைகளில் ஒன்று கூடவா உனக்குப் பிடிக்கவில்லை?"

"ஆமாம்..."

"உம்...எத்தனை நாளைக்கு இப்படி சுற்றப் போகிறாய்?"

"இன்னும் ஒரு வார காலம் தான் கெடு...அதற்குள் ஏதாவது அகப்பட்டால்தான்..."

"நல்ல ஆளப்பா நீ...படம் கேட்டால் ஏதோ பிடித்துக் கொண்டு போவாயா? இப்படிச் சுற்றிக் கொண்டு திண்டாடுகிறாயே?"

"என்ன செய்வது? பகவான் என்னை அப்படிப் படைத்து விட்டானே...இன்றைக்காவது ஏதாவது அகப்பட்டால்தான் உண்டு"

பிறகு இருவருமே இரு பெருமூச்சு விட்டார்கள். எப்போதும் போல் சுற்ற ஆரம்பித்தார்கள். ஒன்றும் அகப்படாமல் பசியால் வாடி வரும் புலிபோல இருவரும் சோர்ந்து போய் அந்தப் பழங்கால இடிந்த கோயிலின் வாயிற் படியில் உட்கார்ந்து கொண்டார்கள். சுற்று முற்றும் பார்த்தார்கள். ஜன நடமாட்டத்தின் அறிகுறியே காணோம். நல்ல சிற்பக் கட்டுடன் அமைந்த அக்கோயில் இடிந்துபோய்க் கிடந்தது. 'என்னைக் காண்பாரும், மதிப்பாருமிலர்' என்று அழுவதுபோல் இருந்தது அக்கோயிலின் நிலை.

"பாலு, பார்த்தாயா...அருங்கலைக்கு வந்த கேட்டை..."

"ஆமாம், உள்ளே சென்று பார்க்கலாமா?"

இருவரும் உள்ளே சென்று பார்க்கலாம் என்று புறப்படும் தருணத்தில் சிற்பங்களில் ஒன்று பெயர்ந்து வந்தது போல ராஜாளி அவர்கள் முன் தோன்றினாள். அவர்கள் பிரமித்து விட்டார்கள். அவளும் பிரமித்துப் போய் சிற்பமாக நின்று விட்டாள். வாசுவின் மூளை 'சுரி' ரென்று வேலை செய்தது. காமிராவைத் தட்டிவிட்டு கண் மூடி கண் திறக்கும் நேரத்திற்குள் அச்சிற்பத்தை எழிலுடன் காமிராவிற்குள் அடைத்தான். அவன் உள்ளம் இதற்காகப் பெருமைப்பட்டுக் குதூகலமடைந்தது. இருவரும் முன்னேறி உட்செல்லும் நேரத்தில் அவள் வேகமாக வெளியே சென்றாள்.

இருவரும் அக்கோயிலில் குகை போன்ற பாகத்தினுள் நுழைந்ததும் திடுக்கிட்டனர். ஆமாம். பேட்டன் அங்கே வண்ணக் கலவைகளுடன் விளையாடிக்கொண்டிருந்தான். அங்கே தீட்டப் பெற்றிருந்த ஓவியங்கள்

இருவரையுமே கவர்ந்தன. வாசு தவம் செய்து பலன் கிடைத்ததாக உணர்ந்தான். அவன் தற்போது வரைந்து கொண்டிருக்கும் ஓவியம் வெகுவாக இருவரையுமே கவர்ந்தது. மெய்மறந்து அதையே பார்த்துக் கொண்டு நின்றனர். நேரம் போனதே தெரியவில்லை.

பாலுதான் சுதாரித்துக் கொண்டு வாசுவை உலுப்பினான். "நல்ல வேளை...நீயும் ஒரு கோயில் சிற்பமாக மாறிவிட்டாயோ என்று நினைத்தேன்..." என்றான் பாலு.

இந்தச் சப்தம் எதையும் கேட்காதவன் போல் பேட்டன் தன் கைவேலையில் முனைந்திருந்தான்.

"ஏய்...இந்தாப்பா..." கை தட்டிக் கூப்பிட்டான் வாசு. பேட்டன் அசையவில்லை. இரண்டு முறை, மூன்று முறை கூப்பிட்டான்...ஊஹூம்...அசைவு என்பதே இல்லாமலிருந்தது கையைத் தவிர.

"நாம் பார்ப்பதும் ஒரு சிற்பமோ? இங்கே வந்தால் மனிதர்கள்கூட அப்படியாகி விடுவார்கள் போலிருக்கிறது" என்றான் பாலு சிரித்துக் கொண்டே.

"என்னவோ..."

அருகில் சென்று வாசு உலுப்பின பின்தான் பேட்டன் சுய நினைவிற்கு வந்தான். வந்ததும் தன் முன் இரு பெரிய மனிதர்கள் நிற்பதைக் கண்டதும் தூக்கி வாரிப் போட்டது அவனுக்கு. பதறியடித்துக் கொண்டு அவர்கள் காலில் விழுந்து கும்பிட்டான்.

வாசு கண்ணீர் மல்க அவனைத் தூக்கினான். அவன் சற்று இளகிய மனதுடையவன். ஒரு அற்புதமான கலைஞன் இவ்வாறு செய்ததும் வாசுவின் நெஞ்சம் இளகிவிட்டது.

"ஏனப்பா, நீதான் இவற்றையெல்லாம் வரைந்தாயா?"

"ஆமாங்க..."

"எங்கே கற்றுக் கொண்டாய்?"

"நானா கத்துக்கிட்டது தானுங்க..."

"ரொம்ப அற்புதமாக இருக்கிறதே!"

"என்னுங்க நீங்கள்ளாம் போடறதை விடவா?"

"என்ன அப்படிச் சொன்னாய்? நீ இப்போது சிறந்த ஓவியன்"

"அப்படின்னாக்க?"

அவனுடைய அறியாமையை நினைந்து வியந்தனர் இருவரும்.

"நீ நன்றாக...மிக மிக நன்றாக இதையெல்லாம் போடுகிறாய் என்று அர்த்தம்" என்று விளக்கினான் பாலு.

"எனக்கு இதையெல்லாம் வரைந்து தருகிறாயா? நிறையப் பணம் தருகிறேன்" என்றான் வாசு.

"பணமென்னாங்க பணம். நிறைய எளுதித் தரேனுங்க"

"அப்போ சரி...நாளைக்கு வருகிறேன்"

இருவர் மனதும் என்னவோ மகிழ்ச்சியால் துள்ளியது. அருங்கலை ஒன்றைப் பார்த்த இன்பம் அவர்கள் உள்ளத்தில் குமிழியிட்டுக் கொண்டிருந்தது. அக்குதூகலத்துடனே அவர்கள் விடை பெற்றுக் கொண்டனர். அவர்கள் இன்பத்தை அதிகரிக்கச் செய்வதுபோல வெளியே தண்ணிலவு வீசிக் கொண்டிருந்தது.

"பாலு, பார்த்தாயா ஈசுவர சிருஷ்டியை?"

"ஆமாம். அருங்கலை எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கிறது. அப்படி ஒளித்து வைப்பதில் ஈசுவரனுக்கு என்ன திருப்தியோ தெரியவில்லை"

"அப்போதுதான் கலையின் அருமை தெரியும்"

"கலையின் அருமை இங்கேதான் தெரியவேண்டுமா?"

"நீ அலைந்து தேடிப் பிடித்தால்தான் இன்பமூட்டும். காலின் கீழ் இருப்பது இன்பமூட்டாது"

"அதற்காக?"

"அதற்காகத்தான் அருங்கலையை நீ தேடிப் பிடிக்கும் வண்ணம் இங்கே ஒளித்து வைத்திருக்கிறார்"

"நல்லது...போயும் போயும் இந்த அறிவிலியிடமா இது பிரகாசிக்க வேண்டும்?"

"அறிவிலி!...யார் அறிவிலி? அவன்தான் உண்மைக் கலைஞன்"

"ஆ!..."

"ஆமாம். உன்னைப்போல், என்னைப் போல் இருப்பவர்களிடம் இக்கலை இருந்தால் அதைக் காசுக்கு விற்று விடுவோம். இவன் அப்பேர்ப்பட்டவனல்ல. அப்படிப்பட்ட இடத்தில்தான்

கலையின் அரிய சக்தியைக் காணலாம்.''

• "விசித்திரமாக இருக்கிறதே!''

அதன் பிறகு இருவரும் ஆழ்ந்த மௌன சிந்தனையில் இறங்கி விட்டார்கள். எப்படி, எப்போது இருப்பிடத்திற்கு வந்தார்கள் என்று அவர்களுக்கே தெரியாது.

3

மூன்று நாட்களுக்குப் பிறகு சில வகை ஓவியங்கள் வழ வழப்பான ஆர்ட் காகிதங்களில் போடப்பட்டு, தங்கள் கையில் எடுத்துச் சென்றனர். வாசு ஏதோ இமயத்தையே புரட்டி விட்டது போல் பெருமை கொண்டான். ஏனெனில், அத்தகைய வண்ண ஓவியங்களை இதுவரை யாருமே பார்த்திருக்க மாட்டார்கள். அப்பேர்ப்பட்ட ஓவியங்களால் பத்திரிகையின் கிராக்கியை அதிகப்படுத்தக் காரணமாயிருந்தவன் அவனல்லவா? அதுதான் பத்திரிக்கைகளும் ஏராளமாக விற்பனையாயின. பத்திரிகை ஆசிரியர் அவற்றைப் பார்த்துவிட்டு விழுந்தடித்துக் கொண்டு அவ்விடிந்த கோயிலுக்கு ஓடி நிறைந்த சன்மானத்தைக் கொடுத்துத் தன் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டார்.

"எனக்கு ஏதுக்குங்க இதெல்லாம்...'' என்றான் அவன்.

"பரவாயில்லை... வைத்துக் கொள்...'' என்று திணித்தார் அவன் கையில்.

"ஏனப்பா, இங்கிருந்து கஷ்டப்படுகிறாய்? எங்களிடம் வந்துவிடேன். இருப்பிடம் தருகிறோம். நிறைய சம்பளம் தருகிறோம்''

"இந்த ஏழை எங்கேயிருக்கணுமோ அங்கே இருந்தால் தாங்க நல்லது...'' என்று சொல்லிவிட்டான்.

என்னென்னவோ சொல்லி ஆசை காட்டிப் பார்த்தார். அதற்கெல்லாம் அவன் மசியவில்லை. ஏமாற்றத்துடன் தான் திரும்பினார் பத்திரிகை ஆசிரியர். அவர்கள் போன பின் அப்பணத்தை அவன் அருகில் கிடந்த ஒரு சிற்பத்தின் கைக்குள் சொருகி வைத்தான். அது சிற்பத்தின் [illegible] இருந்தது.

வாசு மாத்திரம் அடிக்கடி வந்த வண்ணமும் ஓவியங்களை வரைந்து சென்ற வண்ணமும் ரூபாய் நோட்டுகளைத் திணித்த வண்ணமும் இருந்தான். அந்த ரூபாய் நோட்டுகளும் அச்சிற்பத்தின் கையிடுக்கில் குவிந்த வண்ணமிருந்தன.

ஒவ்வொரு சமயமும் பணம் வேண்டாமென்று மன்றாடுவான் பேட்டன். ஆனால், வாசு அவற்றைத் திணித்து விட்டே சென்றான். பேட்டனின் ஓவியத்திற்கு அவை மிகக் குறைந்த ஊதியம் தான். அவன் தான் பணம் வேண்டாமென்று சொல்லி வருகிறானே, அது தான்.

4

அன்று வாசுவிற்குப் பணத் தேவை அதிகமாயிருந்தது. அது மாத்திரமல்ல. ஆசையும் மெல்ல தலை தூக்கிற்று. பேட்டன்தான் பணம் வேண்டாமென்று சொல்லுகிறான். கொடுத்த பணம் சீண்டுவாரின்றிக் கிடக்கிறது. மேலும், மேலும் அவனிடத்தில் பணத்தைத் திணிப்பதில் பயன் என்ன? அதை ஏன் நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது? பணத்தை வேண்டாதவர்களிடத்தில் திணிப்பதைவிட தேவையானவர்களுக்குப் பயன்படுத்துவது நல்லதுதானே? இப்படித்தான் எண்ணினான் வாசு.

அவ்வப்போது பணத்தை எடுத்துச் சென்று உடனுக்குடன் பைசல் செய்யும் அவன் இன்று மனதின் தடுமாற்றத்தின் காரணமாகப் பணத்தை கொடுக்காமல் தன் பெட்டியில் வைத்துக் கொண்டான். ஆனாலும், அவன் மனம் கேட்கவில்லை. "போ... கொண்டுபோய் கொடு...'' என்று அவனைத் தள்ளிற்று. மற்றொரு மனம் அவனைப் பின்னுக்கிழுத்தது.

'ஏன்? நான் வைத்துக் கொள்வதில் தவறென்ன? நான்தானே பிரயாசைப்பட்டு அவனைக் கண்டேன். என் பிரயாசைக்குப் பலன் வேண்டாமா? இப் பணத்தில் கொஞ்சம் எடுத்துக் கொண்டால்தான் என்ன! அவனுக்குப் பணம் தேவையில்லை. எனக்குத் தேவை. அதனால் நான் எடுத்துக் கொள்வதில் தவறில்லை. பிரயாசைப்படுவது நான் தானே. ஆதலால்

எடுத்துக் கொள்ளலாம்...'' இப்படி ஒரு எண்ணம் வாதாடியது.

'துரோகி, வஞ்சகன், பண்பற்றவன்...ஓவியத்தை வரைந்தது நீயா, அவனா? உண்மைப் பிரயாசை யாருக்கு? யாருடைய வண்ணக் கோல் அவ்வளவு அழகாகத் தீட்டியது? சொந்தக்காரன் ஒருவனிருக்க இடையில் புகுந்து நீ கொள்ளையடிக்கப் பார்க்கிறாயே? ஒன்றும் தெரியாத நாடோடியாக இருப்பதால் தானே இப்படிச் செய்கிறாய்? இல்லாவிட்டால் செய்வாயா? கபடர்களை ஏமாற்றலாம். ஆனால், ஒன்றும் தெரியாதவர்களை ஏமாற்றக் கூடாது. எளியவர்களை வதைக்காதே...அது உன்னைச் சுடும்' என்று வெட்டியது மற்றொரு மனம்.'

'விழுந்து, விழுந்து ஓடினாயே, ஆசிரியர் என்ன கொடுத்தார்? ஒரு பாராட்டுதல் தெரிவித்திருப்பாரா? நீ சிரமப்பட்டாயே, மெச்சினாரா? நீ முயற்சி செய்ததற்கு ஏதாவது கொடுத்தாரா? பின் ஏன் நீ எடுத்துக் கொள்ளக் கூடாது?'

'நீ சம்பளம் வாங்குகிறாயே, எதற்கு? நீ வாங்கும் சம்பளத்திற்கு உழைக்க வேண்டாமா? உனக்கு மனச்சாட்சியில்லையா? பிறன் பொருளைக் கவருவதில் கௌரவம் வேறா? நீ நினைக்கும் நினைப்பு ஆசிரியருக்கும் ஏற்பட்டிருக்குமே, அவர் செய்தாரா? நீ ஏன் இப்படியிருக்கிறாய்?...நாடோடியாக இருந்தாலும் பணத்தை லட்சியம் செய்தானா? அவனல்லவோ உண்மைக் கலைஞன். நீ பணத்தைக் கண்டதும் பல்லை இளிக்கிறாயே?'

ஏதேதோ அவன் மனம் போராடியது. அன்று இரவு அவன் சரியாகத் தூங்கவேயில்லை. மன நிம்மதியின்றித் தவித்தான். புரண்டு, புரண்டு படுத்தான். தூக்கம் வந்தால் தானே! தினத்தைவிட இன்று ஏகத்திற்கு இறக்கம் வேறு பிழிந்தெடுத்தது.

அவன் முன்னால் ஏராளமான கைகள். ஒவ்வொன்றிலும் ஏராளமான ரூபாய் நோட்டுகள். எல்லாவற்றையும் வாங்கிக் கொள்கிறான். ஏதோ ஒரு முகம் அவனைப் பரிதாபமாக நோக்குகிறது. அதை விரட்டுகிறான். அது 'கிரீச்' சென்று கத்திக் கொண்டே மறைகிறது. பணத்தைப் பத்திரமாக வைக்கப் போகிறான். ஒரு பிசாசு இரண்டு கைகளையும் நீட்டிக் கொண்டு அவன் முன்னால் வருகிறது. அவன் கழுத்தை நெறிக்கப் பார்க்கிறது.

"ஐயோ!..." என்று அலறினான். திடுக்கிட்டு விழித்துக் கொண்டு பார்த்தான். ஒன்றையும் காணோம்.

"என்ன? ஏதாவது துர்ச்சொப்பனம் கண்டீர்களா?" என்று கேட்டாள் அவன் மனைவி.

அவன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. பேயறைந்தவன் போல் உட்கார்ந்திருந்தான். உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. அவன் மனைவிக்கும் பயமாகப் போய்விட்டது. திருநீறு எடுத்து அவன் நெற்றியில் இட்டாள்.

அப்படியும் சற்று நேரம் பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்திருந்தான். ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வக்த பிற்பாடுதான் அவன் முகம் பிரகாசித்தது. அவனுடைய மனைவியும் நிம்மதியடைந்தாள்.

மறுநாட் காலையில் எழுந்ததும் முதற் காரியமாக அப்பணத்தைப் பேட்டனிடம் கொடுக்க ஓடோடியும் சென்றான். ஆனால், பேட்டன் அங்கே இல்லை. அங்கே என்ன? எங்கேயுமே இல்லை. எங்கெல்லாமோ சுற்றினான். விசாரித்துப் பார்த்தான். துப்புக் கிடைக்கவில்லை. சோர்ந்து சோர்ந்துபோய் வீடு திரும்பினான். தன் அறைக் கதவைத் திறந்து தன்னை ஈஸிசேரில் எறிந்து கொண்டான்.

சற்று நேரம்தான் படுத்திருப்பான். ஜன்னல் அருகே ஒரு காகிதப் பொட்டணம் இருந்தது. அதை இப்போது தான் கவனித்தான். ஓய்ந்த நடையுடன் அதை எடுத்துப் பிரித்தான்.

என்ன ஆச்சரியம்! அத்தனையும் ரூபாய் நோட்டுகள்!

அக்காகிதத்தில் பேட்டனும், அவன் மனைவியும் எங்கேயோ போவதுபோல் சித்திரம் வரையப்பட்டிருந்தது. ★

177618

INSTALL

DPF

PUMPS

DHANDAYUTHAPANI FOUNDARY PRIVATE LTD.,

PAPPANAICKENPALAYAM,

COIMBATORE.

Phone : 219 - P.B.No.278 - Grams : MOTORPUMP.

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES

DRAWING FRAMES

FLY FRAMES

RING SPINNING FRAMES

REELING MACHINES

BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes.

ENQUIRIES SOLICITED :

TEXTOOL COMPANY LIMITED

Post Box No 221, COIMBTORE (South India)

Telephone: 409 & 1409 Telegrams : "TEXTOOLCO"

பார்சலை குழந்தை போல்
அணைத்துச் செல்வோம்

எந்த லாரியும் சாமான்களைச் சுமந்து செல்லும். ஆனால் டி. வி. எஸ். லாரி தான் குறிப்பிட்ட நேரத்திற்கும், பாதுகாப்பிற்கும் பெயர் போன்றது. பதினான்கு வருட முதிர்ந்த தேர்ச்சியில் பண்படைந்த 2750 (எமது) சிப்பந்திகள் உங்கள் சமான்களை கவனித்து காப்பாற்றிச் செல்கிறார்கள். லாரி செல்லும் இடங்களில், இடவசதிக்கு ஏற்றாற்போல், நமது பண்டக சாலைகள் உங்கள் சாமான்களை பாதுகாக்கின்றன.

ஸதர்ன் ரோட்வேஸ்
ப்ரைவேட் லிமிடெட், மதுரை

TVS-58 (77A

மக்கள் விரும்பும்

ராமகிருஷ்ண

பீடிகள்

P.R. ஆறுமுக நாடார் & சன்ஸ்

முக்கூடல், திருநெல்வேலி ஜில்லா.

ஸ்ரீ பாலராமவர்மா

டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்.,

செங்கோட்டை.

தற்சமயம் உள்ள கதிர்கள்: 14,384

மேற்கொண்டு நிர்மாணிக்கும்

கதிர்கள்: 3,472

கைத்தறித் தொழிலின் மகோன்னத வளர்ச்சி
உயர்ந்த ரக நூலையும், மிக நேர்த்தியான
துணியையும் பொறுத்திருக்கிறது.
எங்கள் ஆலை மிக நேர்த்தியான
உயர்ரக நூல்களை
விநியோகிக்கிறது.

மானேஜிங் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் கரையாளர் &

ரங்கசாமி நாயுடு ஸன்ஸ் கம்பெனி

தபால் பெட்டி எண்: 69

நாடு முழுவதும் மாத்திரமல்ல....

நானிலம் எங்கும் புகழ் பெற்றவை

எங்கள் பட்டாசு ரகங்களும்,

மத்தாப்பு வகைகளும்...!

தீபாவளி விழாவில் உங்களை அவை மகிழ்விக்கும்

தி ஸதர்ன் இண்டியா

எக்ஸ்போர்டிங் கம்பெனி

சிவகாசி. (தென் இந்தியா)

ஏரோப்ளேன்

சீயக்காய் தூள்

உயர்தரமானது

★

தயாரிப்பவர்:

S. R. & S. T. இண்டஸ்ரீஸ்

1 A லாயர் சின்னதம்பி முதலி தெரு,

2-வது சந்து, மதராஸ்-21

தயாரிப்பாளர் :—

அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலை,
பெரம்பூர், சென்னை.

கிடைக்குமிடம் :—

தொழில் இலாகா விற்பனை நிலையம்,
166-A, மவுண்ட் ரோட், சென்னை-2.

உயர்ந்த ரகம் நயம்

தேங்காய் எண்ணை

V.V.D

PURE & FINE

COCONUT OIL

V. V. DHANUSHKODI NADAR & SONS
TUTICORIN